Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

முரசு - 04 | திருவள்ளுவர் ஆண்டு 2045 மாசி 21 புதன்கிழமை (05.03.2014) | பக்கங்கள் 20 | ஓசை - 155

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

## நேற்று முதல் "யாழ்தேவி" பளைவரை சேவை



புனரமைக்கப்பட்ட கிளிநொச்சி - பளை புகையிரத நிலையம் நேற்றுக்காலை போக்குவரத்து துறைஅமைச்சர் குமார வெல்கம, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பிரதி போக்குவரத்து அமைச்சர் ரோகண திஸநாயக்க, இந்திய உயர்ஸ்தானிகர் வை.கே.சின்ஹா, ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார், யாழ்.இந்திய துணைத் தூதுவர் மகாலிங்கம் மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டு திறந்து வைத்துள்ளனர்.

நேற்று முதல் கொழும்பு-பளை வரையான சேவைகள் நடைபெறுவதோடு வரும் வெள்ளிக்கிழமை முதல் குளிரூட்டப்பட்ட சொகுசு புகையிரத சேவையும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

19 ஆம் பக்கம் பார்க்க

## பனையால் விழுந்தவர் பரிதாப மரணம்

(யாழ்ப்பாணம்)

துன்னாலை தெற்குப்பகுதியில் பனை மரத்தில் இருந்து தவறிவீழ்ந்த குடும்பஸ்தர் ஒருவர் யாழ். போதனாவைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்ட நிலையில் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக அவ்வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

துன்னாலை தெற்கு கரவெட்டியைச்சேர்ந்த இரத்தின சபாபதி தங்கவேல் (வயது-45) என்ற

19 ஆம் பக்கம் பார்க்க

## உக்ரைனில் இலங்கையர்களுக்கு ஆபத்து இல்லை

உக்ரைனில் வசிக்கும் இலங்கையர்கள் அந்த நாட்டில் வன்முறையால் பாதிக்கப்படவில்லையென வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

மொஸ்கோவிலுள்ள இலங்கைத் தூதரகத்தினூடாக அங்கிருக்கும் இலங்கையர்கள் குறித்தும், உக்ரைனின் நிலைமைகள் குறித்தும் தொடர்ந்து தகவல்களைப் பெற்ற வண்ணம் உள்ளதாக வெளிவிவகார அமைச்சு கூறியுள்ளது. உக்ரேனில் படிக்கும் மாணவர்கள் 13 பேரை அங்கிருந்து அழைத்துவர நடவடிக்கை எடுத்துள்ளதாக சில ஊடகங்கள், வெளியிட்ட செய்திகள் உண்மையில்லை.

அங்கு கல்வி பயிலும் மாணவர்கள் 13 பேரும் பாதுகாப்பாக உள்ளனர். அவர்களை நாட்டுக்கு

19 ஆம் பக்கம் பார்க்க

# சர்வதேச விசாரணை இல்லை; உள்ளக பொறிமுறைக்கு சிபார்சு

## இதுவே ஜெனிவா பிரேரணையின் சாராம்சம்

(ஜெனிவா)

வடக்கின் இறுதி யுத்தம் தொடர்பாக இழைக்கப்பட்டதாக தெரிவிக்கப்படும் மனித உரிமைமீறல்கள் தொடர்பாக சர்வதேச விசாரணைக்கு உடனடியான பரிந்துரை எதையும் ஜெனிவா பிரேரணை வலியுறுத்தவில்லை அதேவேளை உள்ளக விசாரணைப்பொறிமுறை ஒன்றை ஐ.நா.வின் கண்காணிப்புடன் மெற்கொள்வதற்கே மேற்படி பிரேரணை பரிந்துரை செய்துள்ளது.

இலங்கை தொடர்பாக அமெரிக்காவும் பிரிட்டனும் கூட்டுச்சேர்ந்து ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் சமர்ப்பிக்க உத்தேசித்துள்ள பிரேரணையின் நகல் வடிவம் நேற்று முன்தினம் மாலை வெளியிடப்பட்டது.

இழைக்கப்பட்ட கொடூரங்கள் தொடர்பில் தீவிரமான விசாரணை நடவடிக்கையை முன்னெடுப்பதற்கான வடிவத்தில் இந்தப் பிரேரணை இருக்கும் என்று பல தரப்பிலும் எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

எனினும் வடக்கில் நடைபெற்றவை தொடர்பில் விசாரிக்க சர்வதேச விசாரணை பொறிமுறை ஒன்று ஏற்படுத்தப்படுவதற்கு இந்த அமர்வில் முன்முயற்சி எடுக்கப்படும் என்று பலரும் நம்பியிருந்தனர். ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரும் இலங்கை தொடர்பான தமது அறிக்கையில் அதனையே பரிந்துரை செய்தும் இருந்தார். ஆனால், இன்னமும் உள்நாட்டுக்குள் எடுக்கப்படும் விசாரணை நடவடிக்கைகள் பற்றியே அது பேசுகின்றது.

19 ஆம் பக்கம் பார்க்க

## வீதி விபத்தில் ஒருவர் மரணம்

மன்னார் - மதவாச்சி வீதியில் 77ஆம் வளைவுப்பகுதியில் இடம் பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 6.50 மணியளவில் மதவாச்சியிலிருந்து மன்னார் நோக்கி மோட்டார் வண்டியில் பயணித்த நபர், வண்டியின் வேகத்தை கட்டுப்படுத்த முடியாது வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளார்.

இதன்போது படுகாயமடைந்த நபர் மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று

19 ஆம் பக்கம் பார்க்க

## உள்ளகபொறிமுறையில் வெளிப்படைத்தன்மை இல்லை

### கனேடிய அமைச்சர் சாடல்

(ஜெனிவா)

யுத்தத்துக்குப்பிந்திய இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் இலங்கையின் உள்ளகப் பொறிமுறைகளில் வெளிப்படைத்தன்மை இல்லை என்று கனேடிய வெளிவிவகார அமைச்சர் குற்றம் சாட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 25ஆவது அமரவுகளில் பங்கேற்ற கனேடிய வெளிவிவகார அமைச்சர் லைனீ யீலிச் (Lynne Yelich) இதனைத் தெரிவித்துள்ளார்.யுத்தக் குற்றச் செயல் விசாரணை மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல் மற்றும் நல்லி

19 ஆம் பக்கம் பார்க்க

## உள்ளக விசாரணைக்கு தென்னாபிரிக்கா வரவேற்பு

இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினைகளுக்கு தாங்களே தீர்வுகாண வேண்டுமென தென் ஆபிரிக்கா தெரிவித்துள்ளது.

தென் ஆபிரிக்காவின், சர்வதேச உறவுகள் மற்றும் கூட்டுறவு அமைச்சர் Emily Nkoana-Mashabane, ஐ.நாவின் மனித உரிமைகள் மாநாட்டில் நேற்று உரையாற்றும்போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை தொடர்பான பிரச்சினைகளுக்கு சர்வதேச சமூகம் தீர்வைக் கண்டுபிடிக்க இந்த 25 ஆவது மனித உரிமைகள் மாநாடு மிக முக்கியமானதொன்றாகக் கருதப்படுகிறது.

எங்களுடைய சொந்தப் பிரச்சினைகளை கண்டறிந்து, அவற்றிற்கு நாமே தீர்வு காண வேண்டும். இதனையே இலங்கையும் கடைப்பிடிக்க வேண்டுமென தென்னாபிரிக்க மக்கள் விரும்புகின்ற

19 ஆம் பக்கம் பார்க்க

## அநாமதேய பொருட்களை சீண்டிப்பார்க்க வேண்டாம்

### இராணுவப் பேச்சாளர் அறிவிப்பு

வடக்கில் போர் நடைபெற்ற வலயங்களில் காணப்படும் சந்தேகத்திற்கு இடமான அல்லது இனந்தெரியாத பொருட்களை கண்டால் அவற்றை தொடாது உடனடியாக அது தொடர்பில் அருகில் உள்ள பாதுகாப்புத் தரப்பினருக்கு அறிவிக்க வேண்டும் என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

யுத்தம் நடைபெற்ற பிரதே

19 ஆம் பக்கம் பார்க்க

## மன்மோகனுடன் ஜனாதிபதி பேச்சு; ஜெனிவா பிரேரணை குறித்தும் ஆராய்வு



மியன்மாரில் நடைபெற்ற உச்சி மாநாட்டின் போது இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கும் நேற்று தனியாகச் சந்தித்துப் பேசினாராயினும், ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் அமர்வில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்படும் பிரேரணையின் நகல் குறித்து இருவரும் விரி

19 ஆம் பக்கம் பார்க்க

## இந்திய உதவி இன்னும் தொடரும்

இலங்கையின் வடக்கில் உள்ள தமிழ் மக்களுக்காக தொடர்ச்சியாக சேவையாற்றப்படும் என இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் தெரிவித்துள்ளார். வடக்கு தமிழர்களின் மனிதாபிமான மற்றும் அபிவிருத்தித் தேவைகளை பூர்த்தி செய்வதில் இந்தியா கூடுதல் முனைப்புக் காட்டி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கில் இந்தியா பாடசாலைகள், வீடுகள் உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்து வருவ

19 ஆம் பக்கம் பார்க்க

14



சிவப்பு நிறத்திலும்

18



முழுக்கு

மெய்ப்பொருள் சமத்துவம் சகோதரத்துவம்

# ஊழியர் நம்பிக்கை நிதியம் செலுத்துவது இப்போது கட்டாயம்

## - தொழில் கொள்வோருக்கு அறிவுறுத்தல் -

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் அமைந்துள்ள யாழ். பிராந்திய ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு 1300 இற்கு மேற்பட்ட தொழில் தருநர்கள் தமது ஊழியர்களுக்கான பங்களிப்புத் தொகையை செலுத்திவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதுகுறித்து தகவல் தெரிவித்த அந்த அலுவலக பொறுப்பதிகாரி ஜெ.தமிழகன் குறிப்பிடுகையில்,

புதிதாக தொழில் தொடங்குவோர் இந்த ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு கட்டாயம் பங்களிப்புச் செய்ய வேண்டும் என்று தெரிவித்ததுடன், செய்ய விரும்புவோர் இலக்கம் 170, மாட்டீன் வீதியில் அமைந்துள்ள அலுவலகத்துடன் தொடர்புகொண்டு பங்களிப்புச் செய்யமுடியும் என்றும் தெரிவித்தார்.

முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய யாழ். பிராந்திய அலுவலகத்திற்கு பங்களிப்புச் செய்யாதவர்களுக்கு எதிராக நீதிமன்றின் மூலமாக நடவடிக்கை மேற்கொண்டுவருவதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தொழிலை விட்டு விலகியவர்கள் கட்டுப்பணத்தை மீளப்பெற விரும்பின் இவ் அலுவலகத்துடன் தொடர்புகொண்டு மீளளிக்கும் விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து கொடுப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (பா)

# திருப்பாடுகளுக்கான பிரதி வழங்கும் நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். திருமறைக்கலாமன்றத்தால் ஆண்டுதோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் மேடையேற்றப்படும் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பை சித்திரிக்கும் மாபெரும் தயாரிப்பாகிய திருப்பாடுகளின் நாடகத்திற்கான பிரதி வழங்கும் வைபவம் தவக்காலத்தின் ஆரம்பநாளான இன்று மாலை 4.30 மணிக்கு மன்றத்தின் கலைத்தூது மணிமண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் கொழும்புத்துறை தூய சவேரியார் குருத்துவக் கல்லூரியின் உப அதிபர் அருட்பணி யோ.ஜெபரட்ணம் அடிகளார் கலந்துகொண்டு இவ்வாற்றுகையில் பங்கேற்கவுள்ள நடிகர்கள், ஏனைய துறைசார்ந்த பிரிவுகளுக்கான பிரதிகளை வழங்கி சிறப்பிப்பதுடன் ஆசியுரையும் வழங்குவார்.

பிரதி வழங்கும் நிகழ்வில் வழமையான திருப்பாடுகளின் நாடகத்தில் பங்கேற்கின்ற அனைத்து கலைஞர்களையும், இம்முறை புதிதாக இணைந்து பங்காற்ற விருப்பமுடையவர்களையும் கலந்துகொள்ளுமாறு திருமறைக்கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது.

இம்முறை திருப்பாடுகளின் நாடகம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 10,11,12,13 ஆகிய திகதிகளில் மாலை 6.45 மணிக்கு மன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது. இவ்வாற்றுகை கடந்த 2012 ஆம் ஆண்டில் முதன்முதலாக மேடையேற்றப்பட்டு மிகுந்த வரவேற்பை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (52)

# "புனிதர் கானம்" ஒலிப்பேழை வெளியீடு

உலகப் பிரசித்திபெற்ற கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயம் மீதான ஐந்து பக்திப் பாடல்களைக் கொண்ட இசைத்தட்டு ஒன்றை வளர்ந்துவரும் இளம் கலைஞர்களான நெடுந்தீவு யோகேஸ், நெடுந்தீவு எம். நேதா ஆகியோர் இணைந்து வெளியிடவுள்ளனர்.

'புனிதர் கானம்' என்னும் இந்த இறுவட்டு முதன்முறையாக முன்னெடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இதன்மூலம் நெடுந்தீவு மண் பெருமை அடைகின்றது.

பங்குனி 15, 16 ஆகிய திருவிழாக்கால நாட்களில் இப்பாடல்களை புனித கச்சதீவு அந்தோனியார் திருத்தலத்தில் வெளியீடு செய்யப்படவுள்ளது.

# உள்ளூர் கலைஞர்களுக்கு விருது "சுடர் எவ்.எம்." நிறுவனம் வழங்குகிறது

(யாழ்ப்பாணம்)

சுடர் எவ்.எம். என்ற இணைய வானொலி நிறுவனத்தினர் உள்ளூர் கலைஞர்களை ஊக்குவிக்கும் முகமாக விருதுகளை வழங்கி கௌரவிக்கவுள்ளனர்.

கடந்த 2013 தை மாதம் தொடக்கம் 2014 ஆம் ஆண்டு பங்குனி மாதம் வரை கலைஞர்களால் உருவாக்கப்பட்ட குறும்படங்கள் மற்றும் நம்மவர் பாடல்கள் போன்றவற்றை எமக்கு 2014 ஆம் ஆண்டு பங்குனி 31 திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கலாம்.

அதில் சிறந்தவற்றை தெரிவு செய்து விருது வழங்கப்படும்.

தெரிவு செய்யப்பட்ட விருதுகள், குறும்படத்திற்கான விருதுகள்

சிறந்த நடிகர், சிறந்த நடிகை, சிறந்த குழந்தை நட்சத்திரம், சிறந்த இசையமைப்பாளர், சிறந்த ஒலிப்பதிவாளர், சிறந்த ஒளிப்பதிவாளர், சிறந்த திரைக்கதையாசிரியர், சிறந்த படத்தொகுப்பாளர், சிறந்த இயக்குநர், சிறந்த குறும்படம் போன்ற பல்துறைசார் விருதுகள்.

நம்மவர் பாடல்களுக்கு தெரிவு செய்யப்பட்ட விருதுகள்

சிறந்த நடிகர், சிறந்த நடிகை, சிறந்த பாடகன், சிறந்த பாடகி, சிறந்த இசையமைப்பாளர், சிறந்த பாடலாசியர், சிறந்த ஒளிப்பதிவாளர், சிறந்த இயக்குநர், சிறந்த நடன அமைப்பாளர், சிறந்த பாடல் ஆகியவற்றுக்கு இந்த விருதுகள் வழங்கப்படவுள்ளன.

ஆக்கங்களை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி

சுடர் எவ்.எம்., 370A, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். தொடர்புகளுக்கு 077 0557261, 0212219969

# மணல் கொள்ளையில் ஈடுபட்டோருக்கு இரு வார விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

கெற்பெலியில் சட்ட விரோத மணல் கடத்தியவர்களை 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

கடந்த சனிக்கிழமை இரவு சட்டவிரோத மணல் கடத்தலில் ஈடுபட்ட 13 பேர் சாவகச்சேரி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டதுடன், 5 உழவு இயந்திரங்களும் மணலுடன் கைப்பற்றப்பட்டிருந்த நிலையில் இச்சந்தேக நபர்கள் நால்வரும் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டிருந்தனர்.

இவர்களை 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதவான் உத்தரவிட்டார். (இ)


## சிறு விளம்பரம்

### தேவை

மினி மார்க்கட்டில் வேலை பார்ப்பதற்கு பெண் பிள்ளைகளும், ஓர் ஆண் பிள்ளையும் தேவை. தொடர்பு: லக்கி மினி மார்க்கட், 360, மெயின் வீதி, யாழ்ப்பாணம் (பாதுகாவலன் அச்சகத்திற்கு அருகாமையில்) (R/340)


# உதைபந்தாட்ட வீரர் மைதானத்தில் காயம்

வீரர் ஒருவர் உதைபந்தாட்டக் கழகத்தில் விளையாடிக் கொண்டிருக்கும் போது தடக்கி மைதானத்தின் ஓரமாக இருந்த கல்லின் மேல் வீழ்ந்ததனால் கை முறிந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதுபற்றி மேலும் தெரியவருவதாவது,

வலி. தெற்கு பிரதேச இளைஞர் கழகங்களுக்கிடையே நடைபெற்றுவரும் பெருவிளையாட்டுப் போட்டியின் ஓர் நிகழ்வாக குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த 2 ஆம் திகதி நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகமும் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டன என்பது குறிப்பிடத்தக்கது. (130)

# வீதி விபத்தில் மருத்துவர் காயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள், ஆட்டோ விபத்தில் வைத்தியர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

தெல்லிப்பளை வைத்தியசாலையில் கடமையாற்றும் பாரதிதாசன் தயாபரணி (வயது - 42) என்ற பெண் வைத்தியரே படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் சுன்னாகத்தில் இவ் விபத்து நிகழ்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)


## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1039

திகதி 03.03.2014

வெற்றி எண்கள்: 01 07 59 61 — ஆங்கில எழுத்து: D

ஜக்பொட் பரிசு ரூ. 2,34,01,180/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 2,34,01,180/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 13 | 50,000/= | ரூ. 6,50,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 248 | 1,000/= | ரூ. 2,48,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 437 | 1,000/= | ரூ. 4,37,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 11835 | 60/= | ரூ. 7,10,100/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6028 | 40/= | ரூ. 2,41,120/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 154648 | 20/= | ரூ. 30,92,960/= |
| ஆங்கில எழுத்து | 22607 | 20/= | ரூ. 4,52,140/= |
| | | மொத்தம் ரூ. | 68,31,320/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| மட்டக்களப்பு | 605847413-8-28 |
| இரத்தினபுரி | 605842318-7-27 |
| கொழும்பு | 605846254-7-07 |
| கேகாலை | 605843913-2-12 |
| யாழ்ப்பாணம் | 605849595-0-20 |
| குருநாகல் | 605841602-5-05 |
| அநுராதபுரம் | 605844590-3-33 |
| பதுளை | 605845389-5-05 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 72,31,320/=

எதிர்வரும் வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா. 23,703,180/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2014.03.06 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02. தொலைபேசி: 2 335416/7

(C/3357)



## மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 31.03.2013 வரையும் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் 22.04.2014 இலிருந்து காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ். பிராந்திய தலைமையகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் |
|---|---|
| யாழ். ஸ்ரான்லி வீதி | நாவலர் வீதி |
| | மானிப்பாய் |
| காங்கேசன்துறை | மல்லாகம் |
| யாழ். பிரதான வீதி | உரும்பிராய் |
| ஊர்காவற்றுறை | - |
| நெல்லியடி | - |
| அச்சுவேலி | புத்தூர் |
| சங்கானை | பண்டத்தரிப்பு |
| சுன்னாகம் | கோப்பாய் |
| | அளவெட்டி |
| சாவகச்சேரி | கொடிகாமம் |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி |
| யாழ். பல்கலைக்கழகம் | திருநெல்வேலி |
| | கல்வியங்காடு |
| யாழ். கன்னாதிட்டி | இணுவில் |
| பருத்தித்துறை | புலோலி |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி,
பிராந்தியத் தலைமையகம்,
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

(C/3358)

# புனரமைக்கப்படாத நிலையில் வட்டக்கச்சி கிராமிய வீதிகள்

## விமோசனம் கிடைக்குமா என மக்கள் கேள்வி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வட்டக்கச்சி கிராமிய வீதிகள் புனரமைக்கப்படாமல் காணப்படுவதானால் இவ்வீதிகளைத் தினமும் பயன்படுத்துவோர் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சியிலிருந்து வட்டக்கச்சிக்குச் செல்கின்ற பிரதான வீதி முதல் ஏனைய குடியிருப்பு வீதிகள் வரை எதுவித புனரமைக்குக்களுமின்றி பாரிய அளவில் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது.

இந்நிலையில் குறித்த வீதிகளைப் பயன்படுத்தும் மக்கள் தமது போக்குவரத்துக்களில் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக வட்டக்கச்சி இராமநாதபுரம் வீதி, கல்மடு சம்புக்குளம் வீதி, மாயவனூர் வீதி உள்ளிட்ட வீதிகள் புனரமைக்கப்படாது காணப்படுவதால் அசௌகரியங் களை எதிர்நோக்குவதோடு விபத்துக்களையும் எதிர்கொள்ள வேண்டி உள்ளது எனவும் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இராமநாதபுரம் மகாவித்தியாலயத்திற்கு பின்புறம் செல்கின்ற வீதி, இராமநாதபுரம் குடியிருப்பிற்கு செல்கின்ற வீதி ஆகியவற்றில் அமைந்துள்ள பாலங்கள் உடைந்து ஆபத்தான நிலையில் குன்றும் குழியுமாக காணப்படுகின்றன. இவ்வீதிகளில் பயணிப்பவர்கள் விபத்திற்குள்ளாகும் நிலை காணப்படுகின்றன எனவே இதனைத் திருத்தித்தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (கே)

# சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் அறிவுப் பரீட்சை பெறுபேறுகள்

**(நேற்றைய தொடர்ச்சி...)**

வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தின் 59ஆவது ஆண்டு நிறைவு விழாவும் சிவராத்திரி விழாவும் கடந்த 27ஆம் திகதி சைவசமய அபிவிருத் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது

தரம் 1 மாணவர்களுக்கான நீதி நூல் மனனப்போட்டியில் சிறப்புப் பரிசு பெற்றோர் விபரம் வருமாறு,

பி.ஆகாஷ்வரசர்மா (யா.காரைநகர் கிழவன் காடு கலாமன்றம், சு.ஹர்ஷ வர்த்தன் (யா. கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்), த.அனோஜியா (யா.மிருசுவில் அ.த.க.பாடசாலை), ஜெ.சதுர்த்திகன் (யா. இந்து ஆரம்பப் பாடசாலை),

தரம் 2 மாணவர்களுக்கான நீதிநூல் மனனப்போட்டியில் சிறப்பு பரிசு பெற்றோர் வருமாறு,

ம.லோஜினி (யா.புத்தூர் இந்து ஆரம்பப் பாடசாலை), பா.தமிழ்க்கனி (புத்தூர் இந்து ஆரம்பப் பாடசாலை), செ.மீனுஜா (யா.கல்வியங்காடு இ.த.க.பாடசாலை), சி.கோபிகா, சி.யான்சிகா (யா.நாவாந்துறை றோ.க.பாடசாலை), பா.ஜிந்துஜன், அபிநயா (யா.தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி), ம.பவித்ராஜ், ர.தாரணி நே.கீர்த்தனன், க.திவேஜிகா, த.தேனுஜா(யா. ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாலயம்), ஜீ.ஷர்மி (மானிப்பாய் சந்திய சாயி பாடசாலை), மா.தனுஷியன் (யா.ஆனைப்பந்தி மெதடிஸ் மிஷன் வித்தியாலயம்), நா.ஹரிஷ்சாத் (யா.யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), க.கஜேந்தினி, சி.விதுர்சன் (யா.காரைநகர் கிழவன் காடு கலாமன்றம்), ச.தேனுசா (யா.கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்), மோ.கீர்த்திகா (யா.மிருசுவில் அ.த.க.பாடசாலை), ர.கதிரினியன் (யா.கொழும்புத்துறை துன்ரயப்பா வித்தியாலயம்).

**(முற்றும்)**

# ஸ்ரீமுத்துமாரி அம்மன் மஹோற்சவ திருவிழா

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தின் மஹோற்சவத் திருவிழா எதிர்வரும் சனிக்கிழமை காலை 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்து தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 15ஆம் திகதி சப்பறத் திருவிழாவும், 16 ஆம் திகதி 7.30 மணிக்கு வசந்த மண்டபப்பூசையைத் தொடர்ந்து 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் இடம் பெறும்.

17 ஆம் திகதி காலை தீர்த்தத்திருவிழாவும், மாலை கொடியிறக்கமும் இடம் பெறவுள்ளது.

உற்சவகால கிரியைகளை சிவஸ்ரீ சி.விவஸ்தவமூர்த்திக் குருக்கள் நடாத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (85)



# தொழிற்கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி பிரதேச செயலகப் பிரிவில் தொழிற்கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என கரவெட்டி பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் இம்மாத இறுதிக்குள் தங்கள் பதிவுகளை கரவெட்டிப் பிரதேச செயகத்தின் திறன் அபிவிருத்தி உதவியாளருடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளுமாறு கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சிவ சிறி தெரிவித்துள்ளார்.

மேலும் இப்பிரதேச செயலகப் பிரிவில் தொழிற் கற்கை நெறிகளாக உபகரணங்கள் திருத்துதல், ஆடை வடிவமைப்பு மற்றும் அலுமினியம் பொருத்துதல் போன்றன பயிற்றுவிக்கப்படவுள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

# விக்கியையும் தோற்கடித்து "வெற்றிநடையில்" கூட்டமைப்பு




முதலமைச்சர் விக்னேஸ்வரனை பதவியிலிருந்து தூக்கி எறிவதற்கான முயற்சிகள் வலுமும்முரமாக நடக்கின்றன.

அரசாங்கமே விக்னேஸ்வரனுக்கு எதிராக ஏதோ சதிசெய்கிறது என்று நீங்கள் அவசரப்பட்டு முடிவு செய்யலாம்.

ஆனால் விக்னேஸ்வரனுக்கு வந்துள்ள வில்லங்கம் வெளியே இருந்தல்ல அது ஒரு உள்வீட்டுச் சதி.

முதலமைச்சருக்கான வேட்பாளராக விக்னேஸ்வரன் தெரிவு செய்யப்பட்ட போது அவருக்கு எதிர்ப்புக்காட்டியது கூட்டமைப்பின் ஒரு குழு.

மாவை சேனாதிராசாவும் அவரை ஆதரித்தவர்களும் உதயன் பத்திரிகையினரும் எதிர்ப்பு அணியில் முக்கியமாக இருந்தனர்.

இப்பொழுது இந்த அணி இன்னும் விரிவடைந்து – பலமாகி சிறீதரன் எம்.பி உள்ளடங்கலாக ஒரு பெரிய வடிவமாகி உள்ளது.

விக்னேஸ்வரனை முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்தியது கொழும்பு வாழ் தமிழர்களே அவர்களுடைய அழுத்தம் காரணமாகவே சம்பந்தனும் சுமந்திரனும் விக்கியை ஏற்றுக்கொண்டார்கள் என்று இப்பொழுதும் கூட்டமைப்பில் சிலர் சொல்கிறார்கள்.

இதில் உண்மை இல்லாமலும் இல்லை.

வடக்கின் அரசியலுக்கு விக்கி திடீரென இறக்குமதி செய்யப்பட்ட ஒரு ஆள்தான்.

ஆனாலும் அவருடைய உள்ளத்தினுள்ளே ஒரு ஆசை இருந்தது. அந்த விருப்பம் இப்பொழுதும் அவரின் உள்ளே இருக்கிறது.

முதலமைச்சராக தான் வகிக்கும் இந்த பதவியைப் பயன்படுத்தி ஏதாவது நல்ல – உருப்படியான காரியங்களை மக்களுக்காக செய்யவேண்டும் என்று.

பாதிக்கப்பட்ட மக்களின் துயரத்தை தீர்ப்பதற்கு தன்னால் ஆகக்கூடியதை செய்யவேண்டும் என்றும் விரும்பினார்.

ஆனால் விக்கி ஒன்றை நினைக்க மற்றவர்கள் வேறொன்றை நினைக்கிறார்கள். விக்கிக்கு அரசியல் புதுசு. அதனால் சுத்துமாத்து, பம்மாத்து விளையாட்டெல்லாம் லேசில் பிடிபடாது.

அவர் வெளுத்ததெல்லாம் பால் என்று நினைத்துக்கொண்டிருக்க, அவருடைய எதிராளிகள் அவரை தனிமைப்படுத்தி, இயங்கவிடாமல் தடுத்து, சலிப்படைய வைத்து ஆளையே தூக்கி வீசத் துடிக்கிறார்கள்.

இப்பொழுது இதற்கான பகிரங்க நடவடிக்கையாகவே விக்னேஸ்வரன் மீதான பகிரங்க குற்றச்சாட்டுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மாகாணசபை சீர்ர்க இயங்கவில்லை என்ற குற்றச்சாட்டுக்கூட இந்த அடிப்படையிலான ஒன்றுதான்.

ஆனால் விக்னேஸ்வரனோ மாகாணசபையை இயங்க வைப்பதற்கே முயல்கிறார். அதனால்தான் அவர் ஜனாதிபதி தொடக்கம் ஆளுநர் வரையிலான உறவுகளை ஆரம்பத்தில் பேணுவதற்கு முயன்றார்.

அரசாங்கத்துடன் புரிந்துணர்வு அடிப்படையிலான ஒரு உறவு இருந்தால்தான் மாகாணசபையை சீராக இயக்க முடியும் என்று அவருக்குத் தெரிந்திருந்தது.

ஆனால் இதை கூட்டமைப்பிலுள்ள எதிர்த்தரப்பினர் மறுத்தனர்.

விக்கி அரசாங்கத்துடன் நெருங்கிப்போனால் மாகாணசபை திறம்பட இயங்கும். அப்படி இயங்கினால் அதனால் விக்கி புகழ் அடைவார். அந்தப் புகழ் அவரை அரசியலில் பலப்படுத்தும். எனவே மாகாண–சபையை இயங்க விடாமல் தடுப்பதன் மூலமே விக்கியை வீழ்த்தலாம் என்று திட்டமிட்டு இயங்கியது எதிர்த்தரப்பு.

இதில் அவர்கள் வெற்றியடைந்தும் விட்டனர்.

விக்கியோ பாவம்.

அரசியல் அவருக்கு புதிய அனுபவம் என்பதால் அவருக்கு இதெல்லாம் விளங்கவில்லை.

அதனால் அவரும் அரசாங்கத்தை எதிர்த்து, ஜனாதிபதியைக் கண்டித்து, ஆளுநரை மறுத்து எல்லாம் பேசினார்.

இதனால் மாகாணசபையை இயக்க முடியாத – உதவிகளைப் பெற முடியாத ஒரு நிலை ஏற்பட்டது. இதுவே இறுதியில் விக்னேஸ்வரனுக்கான ஆப்பாக மாறியிருக்கு.

இப்பொழுது விக்னேஸ்வரனுக்கு இந்தப்பக்கமும் ஆதரவில்லை. அந்தப்பக்கமும் ஆதரவில்லை.

மச்சான் இப்ப நடுத்தெருவில் நிக்கிற நிலைதான் ஏற்பட்டுள்ளது.

எவ்வளவு பெரிய படிப்பெல்லாம் படித்த மனிதர், அனுபவஸ்தர், நீதியரசர் இன்று தோல்வியின் படிக்கட்டில் குந்திக்கொண்டிருக்கிறார்.

கடமை உங்கள் வாசல்கதவைத்தட்டும் போது உடனே உள்ளே அழையுங்கள். காக்க வைத்திரகளோ, அது புறப்பட்டுப்போய் இன்னும் ஏழு கடமைகளை அழைத்து வந்துவிடும். - பொன்மொழி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## மின்கழிவுகளால் வரும் ஆபத்து!

சுற்றுச்சூழலுக்கு பிளாஸ்ரிக் பொருட்கள் தீங்கானவை எனவே பிளாஸ்ரிக் பைகள் மற்றும் பொருட்களின் பாவனையைத் தவிர்க்கச் சொல்லி பல நாடுகளில் அதை நடைமுறைப் படுத்தவும் முடிகிறது.

ஆனால் உலகம் இப்போது e-waste என்று சொல்லப்படுகிற மின்கழிவுகளால் கலங்கிப் போயிருக்கிறது. பிளாஸ்ரிக்கைப் போல இவை மனிதர் இன்று தவிர்க்கக் கூடியன அல்ல.

பயனற்ற மின்சாதனப் (Electrical) பொருட்களும், மின்னனு (Electronic) பொருட்களும் மின்கழிவுகள் எனப்படுகின்றன. அதாவது செல்போன், கடிகாரம், அவற்றின் மின்கலம் (battery), கணனி, கணனி சார்ந்த துணை உபகரணங்கள், செப்பு வயர்கள், மின்சுற்று (Electric Circuit), எல்சி.டி. திரை, குளிர்சாதனப் பெட்டி, தொலைக்காட்சிப் பெட்டி, சலவை எந்திரம், பாதரச விளக்குகள் மற்றும் எல்லா மின்சார்ந்த பொருட்களும் இந்தப் பட்டியலில் அடங்கும்.

இந்தப் பொருட்களெல்லாம் ஈயம், காட்மியம், பெரிலியம், தாமிரம், வெள்ளீயம், சிலிக்கன் இரும்பு, அலுமினியம், பாதரசம் போன்றவற்றாலும் தங்கம், வெள்ளி போன்ற விலையுயர்ந்த பொருட்களும் கொண்டே தயாரிக்கப்படுகின்றன. இதனைச் சாதாரண குப்பையில் போடும்போது சுகாதாரமற்ற முறையில் இந்தப் பொருட்கள் தெரிந்தோ, தெரியாமலோ எரித்துப் பிரிக்கப்படுகின்றன. இந்த விஷக் கழிவுகள் சுற்றுச்சூழலைப் பாதிக்கின்றன.

தூக்கி எறியப்பட்ட மின்கலங்கள் (அதாவது சாதாரண பற்றரிகள்) ஒரு உயிர்க்கொல்லி. இந்த மின்கலத்திலுள்ள பொட்டாசியம் ஐதரொக்ஸைட் எளிதில் நீருடன் சேர்ந்து மின்கலனை அரித்து, உள்ளிருக்கும் பாதரசத்தை மண்ணோடு கலந்துவிடுகிறது.

பாதரசம் மூளை நரம்புகளைப் பாதிக்கும் இரசாயனப்பொருளாகும், இது எளிதில் காற்றிலும் நீரிலும் கலந்து மனித உடலுக்குள் சென்று, மனப்பிறழ்ச்சி, கோமா, தற்கொலையுணர்வு என பலவித பாதிப்புகளை ஏற்படுத்துகிறது என்று சூழலியலாளர்கள் எச்சரிக்கிறார்கள்..

உலகத்தின் புத்தம்புது அதிசயம், உலகம் இனி உங்கள் கையில் எனக் கூவிக் கூவி விற்கப்படும் அனைத்து அதிநவீன பொருட்களும் சில வருடங்களில் மின்–கழிவுகளாக மாறி, நமக்கு எதிராகத் திரும்பப் போகின்றன... திரும்புகின்றன. இன்று தூக்கி எறியப்படும் மின்கழிவுகள் எல்லாம் நாளை நம் உயிருக்கு எமனாக மாறக்கூடியவைகளே.

கண்ட இடங்களில் இவற்றைத் தூக்கியெறிவது பேராபத்தை விளைவிக்கும் என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்; எல்லோருக்கும் உணர்த்தவும் வேண்டும். இந்த மின்கழிவுகள் ஒழுங்காக ஓரிடத்தில் சேர்க்கப்பட்டு, அவற்றை உற்பத்தி செய்த நிறுவனங்களிடமே திருப்பிக் கொடுக்கப்பட ஏற்பாடு வேண்டும்.

நீர்நிலைகள், விவசாயம் செய்யும் பகுதிகள், இயற்கை வனங்கள் போன்ற பகுதிகளில் கட்டாயம் இவற்றை வீசக்கூடாது. இதற்கென முறையான மின்கழிவு மேலாண்மை செய்யக்கூடிய நிறுவனங்கள் உருவாக வேண்டும். அவை இவற்றைச் சேகரித்து மறுசுழற்சிக்கு அனுப்ப வேண்டும்.

முறையான மின்கழிவு மறுசுழற்சி ஆலைகளை அமைக்கவும் அரசை கோரவேண்டும். நாமும் எலக்ட்ரோனிக் பொருட்களின் மீதான பேராவலைத் தணிப்பதுடன், முறையான மறுசுழற்சி செய்து மாசு குறைக்கும் நிறுவனப் பொருட்களை வாங்கி விற்பதற்கு நம் வர்த்தகர்களை வலியுறுத்த வேண்டும்.

இவை அனைத்தையும்விட மிக முக்கியமாக, மக்களிடையே இவற்றின் ஆபத்து குறித்த விழிப்புணர்வைக் கொண்டு வரவேண்டும். நாம் இந்த மின்கழிவுகளை அலட்சியமாக குப்பைகளில் எறிந்தும் எரித்தும் வருகிறோம். இதிலுள்ள ஆபத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்.

-ஆசிரியர்

# முஸ்லிம் காங்கிரஸ் கட்சி செல்லாக் காசாக மாறிவிட்டது

## அமைச்சர் ரிசாட் பதியுதீன் தெரிவிப்பு

(கொழும்பு)

முஸ்லிம் காங்கிரஸ் கட்சி இன்று செல்லாக் காசாக மாறி விட்டது என அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார். அகில இலங்கை மக்கள் காங்கிரசின் கொழும்பு மீராணியா வீதியில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முஸ்லிம் காங்கிரசின் தலைமைத்துவத்தைப் பார்த்து ஜனாதிபதி வெளியே போ என்று சொல்லியும் வெட்கமில்லாமல் கூனிக்குருகி அந்தக் கதிரையிலேயே இருக்கின்றதொரு தலைமைத்துவத்தையே நாம் காண்கின்றோம்.

மறைந்த் தலைவர் அஸ்ரப் அவர்களின் தலைமைத்துவம் ஒரு தன்மானம் உள்ளதொரு தலைமைத்துவமாக இருந்தது.

அந்த தலைமைத்துவத்தை கண்டால் அன்று இருந்த ஜனாதிபதியோ, பிரதமரோ மிகவும் கண்ணியமாகவும் மரியாதையாகவும் நடந்து கொண்டார்கள். அவரைக் கண்டால் எழும்பி மரியாதை கொடுப்பார்கள் ஆனால தற்போதைய முஸ்லிம் காங்கிரஸ் செல்லாக்காசாக மாறி விட்டது.

கடந்த காலங்களில் கொழும்பு வாழ் மக்கள் முஸ்லிம் காங்கிரசிற்கு வாக்களித்து மாநகரசபைக்கும், மாகாண சபைக்கும் பிரதிநிதிகளை அனுப்பினீர்கள். ஆனால் என்ன நடந்தது. அவர்கள் இந்த மக்களது பிரச்சினைகளை எங்காவது பேசினார்களா? ஆனால் நாங்கள் உங்களது பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்போம். புதுக்கடையில் எத்தனை ஆசிரியர்கள் சட்டத்தரிணிகள், வைத்தியர்கள் உள்ளனர், ஆனால் மன்னாரில் கல்முனை போன்ற பிரதேசங்களில் 100க்கும் மேற்பட்ட வைத்தியர்கள் பொறியியலாளர்கள் உள்ளனர் என்றார்.

# மாணவனை துஷ்பிரயோகம் செய்தவருக்கு 40 வருட கடூழியச் சிறைத்தண்டனை

(கொழும்பு)

பாடசாலை மாணவன் ஒருவரை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய ஒருவருக்கு, அனுராதபுரம் விசேட மேல் நீதிமன்றத்தினால் நேற்று 40 வருட கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

முறைப்பாட்டாளர் தரப்பு சிறுவனுக்கு, ஒரு இலட்சம் ரூபா இழப்பீடு செலுத்துமாறும் மேல் நீதிமன்ற நீதிபதி பிரேமா சுவர்ணாதிபதி பிரதிவாதிக்கு உத்தரவிட்டுள்ளார்.

இழப்பீட்டை செலுத்துவதற்குத் தவறும் பட்சத்தில், பிரதிவாதிக்கு மேலும் 02 வருடத்திற்கு சிறைத்தண்டனை நீடிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

திருப்பனே பகுதியைச் சேர்ந்த 29 வயதான இளைஞனுக்கே இவ்வாறு கடுழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

2008 ஆம் ஆண்டு ஜனவரி 22 ஆம் திகதி அல்லது அதனை அண்மித்த தினமொன்றில் இந்த நபரினால் மாணவன் ஒருவன் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டதாக அனுராதபுரம் விசேட மேல் நீதிமன்றத்தில் குற்றச்சாட்டு தாக்கல்செய்யப்பட்டிருந்தது.

# திருகோணமலை துறைமுகத்தை அபிவிருத்தி செய்யத்திட்டம்

திருகோணமலை துறைமுகத்தை 4.5 பில்லியன் அமெரிக்க டொலர் செலவில் நவீன வசதிகளுடன் அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இது சம்பந்தமாக சாத்திய வளப்பாடுகளை பார்வையிடுவதற்கு கிழக்கு மாகாண விவசாய, கால்நடை உற்பத்தி அபிவிருத்தி, மீன்பிடித்துறை மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சரும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவருமான ஹாபிஸ் நசீர் அஹமட் தலைமையில் சவுதி அரேபிய தூதுக் குழுவினர் நேற்றுமுன்தினம் திருகோணமலைக்கு விஜயம் செய்து திருகோணமலை அஷ்ரப் இறங்குதுறையைப் பார்வையிட்டனர்.

சவுதி அரேபியாவின் சர்வதேச புகழ்பெற்ற கட்டட நிர்மாண கம்பனியான சம்மோடி நிறுவனக் குழுவே இதனைப் பார்வையிட்டது.

இக்குழுவினர், சர்வதேச ரீதியில் புகழ்வாய்ந்த கட்டடங்கள், உல்லாச விடுதிகள், துறைமுகங்கள், சவுதி அரேபியா மக்காவில் ஹரம் உட்பட பல்வேறு புகழ்வாய்ந்த கட்டட நிர்மாணங்களை மேற்கொண்டுள்ளனர்.

தற்போது உலகிலேயே அதி உயரமாக பெயரிடப்பட உள்ள 1.6 கி. மீ. உயரமுடைய கட்டடத்தை சவுதி அரேபியா ஜித்தாவில் நிர்மாணித்து வருவது குறிப்பிடத்தக்கது.

# ஆசிரியர்கள் நியமிக்கப்படாமையால் பாடசாலையை மூடி பெற்றோர் ஆர்ப்பாட்டம்

(வவுனியா)

வவுனியா வாரிக்குட்டியூர் கணேஸ்வரா மகா வித்தியாலயத்தில் ஆசிரியர்களை சீரான முறையில் நியமித்து தருமாறு கோரி நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இப் பாடசாலையில் பணியாற்றிய ஆசிரியர்களை மாணவர்களின் கல்வி நிலையை குழப்பும் வகையில் கல்வி திணைக்கள அதிகாரிகள் இடமாற்றம் செய்வதாக தெரிவித்தே பாடசாலை மாணவர்களும் பெற்றோரும் இவ் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சாதனைகள் படைத்த கல்லூரியை சோதனைக்கு உட்படுத்தாதே, நகரவாழ்க்கையை அனுபவிக்கும் உமக்கு கிராம வாழ்க்கை பகடைக்காயா, பதவியில் இருந்துகொண்டு பாமரரை எதிர்க்காதே என்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியிருந்ததுடன் கோசங்களையும் எழுப்பினர்.

வவுனியா தெற்கு வலயக்கல்விப்பணிப்பாளருக்கு பாடசாலையின் ஆசிரியர்கள் பற்றாக்குறை தொடர்பாக எடுத்துக்கூறியும் எவ்வித நடவடிக்கையும் எடுக்காத நிலையில் தாம் இவ் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதாக பெற்றோர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை செட்டிகுளம் கோட்ட கல்விப்பணிப்பாளர் எம்.பி. நடராஜா சம்பவ இடத்திற்கு வருகை தந்து நிலைமைகளை ஆராய்ந்ததுடன் ஒருமாத காலத்தினுள் ஆசிரியர்களை நியமிக்க நடவடிக்கை எடுப்பதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் தெரிவித்திருந்தார்.

எனினும் அதுவரை காலமும் பொறுத்திருக்க முடியாதுள்ளதால் ஒருவாரகாலத்தில் ஆசிரியரை நியமித்து மாணவாகளின் கல்வி நடவடிக்கைகளை சீராக கொண்ட செல்ல கல்வித் திணைக்களம் நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் தாம் தமது போராட்டத்தை தொடர்ந்தும் நடத்துவோம் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெற்றோர்கள் தெரிவித்தனர்.

இவ்வாறான நிலையில் பாடசாலையின் அதிபர் உட்பட ஆசிரியர்களை பாடசாலைக்குள் நுழையவிடாது பெற்றோரும் மாணவர்களும் மேற்கொண்ட இவ் ஆர்ப்பாட்டம் காலை 8 மணியில் இருந்து மதியம் வரை இடம்பெற்றது.

# புலிகள் அமைப்புடன் யுத்தம் ஒன்றில் ஈடுபடுவோம் எனக் கற்பனை கூடச் செய்துபார்க்கவில்லை

**இலங்கையில் இந்திய அமைதிகாக்கும் படை பணியில் ஈடுபட்ட போது இந்திய இராணுவப் புலனாய்வுத் தலைமை அதிகாரியாகச் செயற்பட்ட கேணல் ஆர். ஹரிகரன், தான் பெற்றுக் கொண்ட அனுபவம் தொடர்பாக வழங்கிய நேர்காணலிலிருந்து...**

**நாங்கள் அவர்களது பாதி எரிந்த உடலங்களைப் பார்த்தோம்: நான் இவற்றைப் பார்த்த போது பிரபாகரனின் தலைமைத்துவம் மற்றும் இவரது ஈழம் தொடர்பான கருத்தியல் மீது நான் கொண்டிருந்த மிகக் குறைந்த ஆர்வத்தையும் இழந்தேன். ஆயுதங்களின் பலத்தை மட்டும் பிரயோகித்து அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்பட வேண்டும் என்கின்ற பிரபாகரனின் கொள்கைப் பிடிவாதமே 2009இல் புலிகள் அமைப்பு யுத்தத்தில் தோல்வியுற்றமைக்கான பிரதான காரணமாகும்.**



**கேள்வி:** 1983இல் இலங்கையில்இடம் பெற்ற தமிழர் எதிர்ப்பு நடவடிக்கைகள் ஒரு இனப்படுகொலையா?

**பதில்:** ஒப்பீட்டளவில் நோக்கில், 1971இல் பங்களாதேசில் இடம்பெற்றதைப் போன்றோ அல்லது ருவாண்டா மற்றும் கம்போடியா. போன்ற நாடுகளில் இடம்பெற்றது போன்று, எண்ணிக்கையிலோ அல்லது பண்புகளிலோ இலங்கையில் 1983-இல் இடம்பெற்றது ஒரு இனப்படுகொலையல்ல. ஆனால், தமிழர் விவகாரம் தொடர்பில் அரசியல் சார் நலனை அடிப்படையாகக் கொண்டு 1983இல் இடம்பெற்றது ஒரு இனப் படுகொலை என இந்திரா காந்தி அறிவித்திருந்தார் என்பதே உண்மையாகும்.

இலங்கையில் அமெரிக்கா தனது தலையீட்டை மேற்கொள்வதை முளையிலே கிள்ளிஎறிந்து விட வேண்டும் என இந்திரா காந்தியும் ராஜீவ் காந்தியும் விரும்பினர். இதற்காக ஒரு பலமான தகவலை அமெரிக்காவுக்கு அனுப்ப இவர்கள் விரும்பினர்.

யூலை 1987இல் இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திட்டதன் மறுநாள் இலங்கைக்கு இந்திய அமைதி காக்கும் படையினர் அனுப்பப்பட்டனர். தமிழ் ஆயுதக்குழுக்களின் ஆயுதங்களைக் களைவதற்கும், தமிழ் சிறுபான்மையினருக்கு ஜெயவர்த்தனா அரசாங்கம் அதிகாரப் பகிர்வுகளை வழங்குவதை உறுதிப்படுத்துவதற்காகவும் இந்திய அமைதிகாக்கும் படை இலங்கைக்கு அனுப்பப்பட்டது. இது ஒரு குறுகிய காலத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே போட மறுத்ததுடன் ஏனைய தமிழ் ஆயுதக் குழு உறுப்பினர்களைப் படுகொலை செய்யத் தொடங்கிய போது அதனை சீர்செய்து புலிகளை சமாதானப்படுத்துவதற்காக தனது படைகளைப் பயன்படுத்துவதென இந்தியா தீர்மானித்தது. இதற்காக இலங்கைக்கு இந்திய அமைதி காக்கும் படை அனுப்பப்பட்டது.

ஆனால், இலங்கையில் எமது பணியை ஆரம்பித்தபோது புலிகள் அமைப்புடன் யுத்தம் ஒன்றில் ஈடுபடுவோம் எனக் கற்பனை கூடச் செய்துபார்க்கவில்லை.

ஆரம்பத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இந்திய அமைதிகாக்கும் படையுடன் நடுநிலையான தொடர்பைப் பேணினர். தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட பின்னரே இந்தியப் படைகளால் மீறல்கள் மேற்கொள்ளப்பட்டதாக முறையிடப்பட்டன. பிரபாகரன் தனக்கு முழு அதிகாரமும் வழங்கப்பட வேண்டும் எனவும் இடைக்கால நிர்வாகத்தில் பகுதியளவான அதிகாரம் வழங்கப்படுவதை பிரபாகரன் விரும்பவில்லை.

தமிழர்கள் இலங்கையில் இரண்டாந்தரக் குடிமக்களாக நடாத்தப்படுவது தொடர்பில் இந்தியப் படைகள் அனுதாபம் காட்டிய போதிலும், பிரபாகரன் ஒரு சுதந்திரப் போராளி என நாங்கள் ஒருபோதும் கருதவில்லை. ஏனைய தமிழ் ஆயுதக் குழுக்களின் தலைவர்கள் மற்றும் தன்னுடன் ஒத்துவராத தமிழ் அரசியற் தலைவர்கள் எனப் பலரை பிரபாகரன் இரக்கமற்ற வகையில் படுகொலை செய்தார்.

சிங்கள இராணுவ முகாமில் முறைப்பாடுகள் செய்தவர்கள், பத்து கிராம் போதைப் பொருட்களை வைத்திருந்தவர்கள், காவற்துறைக்கு தகவல் வழங்கியோர் என 102 பொதுமக்களை புலிகள் அமைப்பினர், நாசி ஜேர்மனியரின் பாணியில் படுகொலை செய்து குப்பைக் கிடங்குகளில் போட்டனர். இதனை என்னால் நினைவுபடுத்த முடிகிறது. இந்தியப் படைகளுடனான முதல் நாள் யுத்தத்தின் போது ரூபவாஹினி தொலைக்காட்சி சேவைப் பணியாளர்கள் சிலர் புலிகள் அமைப்பால் உயிருடன் பிடிக்கப்பட்டு மின்விளக்கு கம்பத்துடன் ரயர்களால் கட்டப்பட்டு தீ மூட்டப்பட்டனர்.

நாங்கள் அவர்களது பாதி எரிந்த உடலங்களைப் பார்த்தோம். நான் இவற்றைப் பார்த்த போது பிரபாகரனின் தலைமைத்துவம் மற்றும் இவரது ஈழம் தொடர்பான கருத்தியல் மீது நான் கொண்டிருந்த மிகக் குறைந்த ஆர்வத்தையும் இழந்தேன். ஆயுதங்களின் பலத்தை மட்டும் பிரயோகித்து அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்பட வேண்டும் என்கின்ற பிரபாகரனின் கொள்கைப் பிடிவாதமே 2009ல் புலிகள் அமைப்பு யுத்தத்தில் தோல்வியுற்றமைக்கான பிரதான காரணமாகும்.

இந்தியப் படையினராலும் பல அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர். யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் இருந்த நோயாளிகள் மற்றும் வைத்தியர்கள் இந்தியப் படைகளால் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் மிக மோசமான மீறலாகும்.

இதேபோன்று வல்வெட்டித்துறையில் இடம்பெற்ற பதுங்கித் தாக்குதலின்போது பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டமை பிறி தொரு முக்கிய மீறல் சம்பவமாகும். இந்த மீறல்கள் தொடர்பில் உண்மையான விசாரணையை மேற்கொண்டு குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்குவதில் இராணுவத் தலைமையும் அரசாங்கமும் தவறிழைத்துவிட்டது என நான் கருதுகிறேன்.

தற்போது உள்ளது போன்று 1987-88 காலப்பகுதியில் மனித உரிமை விவகாரம் என்பது உலகில் பெரிதளவாகப் பேசப்பட்ட விவகாரமல்ல. இதற்கு இந்தியாவும் விதிவிலக்கல்ல. சோவியத்திற்கு எதிராக ஆப்கானில் அமெரிக்கா பதிலிப் போரைத் தொடுத்த போது இதை விட மிகப் பெரிய படுகொலைகள் இடம்பெற்றன.

இந்தியா தனக்கெதிராக முன்வைக்கப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பில் கவனம் செலுத்த முன்வரவில்லை. தீவிரவாதிகளுக்கு எதிராக போரை முன்னெடுக்கும் போது பல்வேறு நடைமுறைசார் பிரச்சினைகள் உள்ளன. இங்கு சட்டங்கள் மதிக்கப்பட வேண்டும். கிளர்ச்சிகளை முறியடிக்கும் யுத்தத்தில் பொதுமக்கள் அகப்படாதிருப்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

**கேள்வி:** 2009இல் இலங்கையால் மேற்கொள்ளப்பட்ட யுத்த மீறல்கள் தொடர்பில் அனைத்துலக விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் கோருவது நியாயமானது என நீங்கள் கருதுகிறீர்களா?

**பதில்:** இலங்கை அரசாங்கம் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆகிய இரு தரப்புக்களாலும் இழைக்கப்பட்ட பல்வேறு மீறல்களை உறுதிப்படுத்துகின்ற சாட்சியங்கள் உள்ளன. இவற்றைக் கொண்டு தவறிழைத்தவர்களை இனங்கண்டு தண்டனை வழங்க வேண்டும். போர்க் குற்றங்கள் தொடர்பில் இலங்கை பாரபட்சமான விசாரணைகளை மேற்கொள்கிறது.

இதனால் இவ்வாறான மீறல்கள் மீது அனைத்துலக விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்கு இலங்கை அரசாங்கம் தனது ஒத்துழைப்பை வழங்க வேண்டும். இது அனைத்துலக அழுத்தத்தின் ஊடாகவே ஏற்படுத்தப்பட முடியும். அச்சுறுத்தல்கள் மூலம் ஏற்படுத்தப்பட முடியாது.

**கேள்வி:** தமிழீழ விடுதலைப் புலிகள் அல்லது வேறு ஆயுதக்குழுக்கள் இலங்கையில் மீண்டும் உருவாகும் என நீங்கள் கருதுகிறீர்களா?

**பதில்:** இல்லை. விடுதலைப் புலிகள் போன்ற ஒரு பலமான தீவிரவாத அமைப்பு உருவாவதற்கு ஐந்து பத்தாண்டுகள் தேவைப்பட்டது. இதற்கு உள்நாட்டு மற்றும் பூகோள சூழல்கள் செல்வாக்குச் செலுத்துகின்றன. இது பிரபாகரன், பத்மநாபா, சிறி சபாரட்னம் போன்ற ஆயுதக் குழுத் தலைவர்களை உருவாக்கியது. ஆனால் தற்போது சூழல் மாறிவிட்டது. அரசியலில் இக்கருத்தியல் அழிக்கப் பட்டுவிட்டது. இலங்கையும் இதற்கு விதிவிலக்கல்ல. அல்குவைதா தவிர ஏனைய தீவிரவாதக் குழுக்கள் அழிக்கப்பட்டு விட்டன.

தமிழ் மக்கள் போரின் விளைவால் இரண்டு தலைமுறைகளை இழந்து வேதனையில் வாழ்கின்றனர். இவர்கள் இந்த யுத்தத்தால் களைப்படைந்து விட்டனர். தமிழ் மக்கள் தமது அடையாளம் தவிர வேறெதனையும் கொண்டிருக்கவில்லை. உயிர்வாழ்வது மற்றும் வாழ்வாதாரம் போன்றன தமிழ் மக்களின் முன்னுரிமைகளாக உள்ளன. புலம்பெயர் தமிழர்களோ ஈழக் கோரிக்கையை மேலும் வலுப்படுத்துகின்றனர்.

மோதல்களுக்குள் அகப்படும் சமூகங்களுக்கிடையில் சமாதானம் உருவாக்கப்படுவதன் மூலம் மட்டுமே உண்மையான பாதுகாப்பைக் கொண்டுவர முடியும். போரின் போதான மீறல்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் தானாகப் பொறுப்பளிக்க முன்வராவிட்டால் அனைத்துலக சமூகம் இது தொடர்பில் விசாரணை மேற்கொள்ள வேண்டும். இதற்கான போதியளவு சாட்சியங்களும் உள்ளன.

**பாரிய வறுமை, கல்வியறிவின்மை போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கும் மத்தியில் இந்தியா வல்லரசாக உருவெடுத்துள்ள நிலையில், கல்வியறிவுள்ள இலங்கை தனது நாட்டை அபிவிருத்தி செய்திருக்க முடியாதா? நாட்டில் பிரிவினைக்கு வழிகோலுவதை விடுத்து அரசியல் மறுமலர்ச்சியை உருவாக்கி அபிவிருத்தியை முன்னெடுக்கும் போது இலங்கையை நல்லதொரு தேசமாகக் கட்டியெழுப்ப முடியும். இதனை இளைஞர்கள் இணைந்து செயற்படுத்த வேண்டும்.**

**கேள்வி:** புலம்பெயர் தமிழ் சமூகங்கள் தமிழீழம் தொடர்பாகக் கொண்டுள்ள கனவு தொடர்பில் ஏதாவது கூறவிரும்புகிறீர்களா? இலங்கை இனப்பிரச்சினைக்கான சிறந்த தீர்வாக எது இருக்க முடியும் என நீங்கள் கருதுகிறீர்கள்?

**பதில்:** நான் கூறுவது தேவ வாக்கல்ல். ஆனால் இது தொடர்பில் பதிலளிக்க முயற்சிக்கிறேன். இலங்கை தனது நாட்டில் இடம்பெற்ற உள்நாட்டுப் போர் காரணமாக தனது அபிவிருத்தியில் மூன்று பத்தாண்டுகளைத் தொலைத்துவிட்டது. இல்லாவிட்டால் தென்னாசியாவின் ஒரே-யொரு புலியாக இலங்கை உருவெடுத்திருக்கும். பாரிய வறுமை, கல்வியறிவின்மை போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கும் மத்தியில் இந்தியா வல்லரசாக உருவெடுத்துள்ள நிலையில், கல்வியறிவுள்ள இலங்கை தனது நாட்டை அபிவிருத்தி செய்திருக்க முடியாதா? நாட்டில். பிரிவினைக்கு வழிகோலுவதை விடுத்து அரசியல் மறுமலர்ச்சியை உருவாக்கி அபிவிருத்தியை முன்னெடுக்கும் போது இலங்கையை நல்லதொரு தேசமாகக் கட்டியெழுப்ப முடியும்.

(18ஆம் பக்கம் பார்க்க)




ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் மாலை மியன்மார் சென்றடைந்தார். மியன்மார் தொழில் அமைச்சர் யு அயே மைன்ட் தலைமையிலான குழுவினர் நேபிடோ சர்வதேச விமான நிலையத்தில் ஜனாதிபதிக்கு பெரும் வரவேற்பளித்தனர்.

# புலிகளுக்கு எதிரான யுத்தத்திற்கு ஐ.தே.க. ஆதரவு வழங்கவில்லை

## உதய கம்மன்பில குற்றச்சாட்டு



(கொழும்பு)

புலிகளுக்கு எதிரான யுத்தத்தின் போது ஐக்கிய தேசியக் கட்சி எவ்வித ஆதரவினையும் வழங்கவில்லை என மேல் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் ஆளும் கட்சி வேட்பாளரும் ஜாதிக ஹெல உறுமய கட்சியின் சட்ட ஆலோசகருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சி அதற்கு ஆதரவளித்திருந்தால், சமாதானத்தை நிலைநாட்டிய பெருமையை இந்த அரசாங்கம் மட்டும் பெற்றுக்கொண்டிருக்காது யுத்தத்திற்கு பிரதான இரண்டு கட்சிகளும் பங்களித்திருந்தால் தேர்தல்களில் ஆளும் கட்சி இவ்வளவு பாரியளவில் வெற்றிகளை ஈட்டியிருக்க வாய்ப்பில்லை.

பயங்கரவாதத்தை இல்லாதொழித்து நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த ஐக்கிய தேசியக் கட்சியும் ஒத்துழைப்பு வழங்கியிருக்க வேண்டும் அவ்வாறு உதவிகளை வழங்கியிருந்தால், தேர்தல்களின் போது சமாதானத்தினை நிலைநாட்டிய அரசாங்கம் என்ற காரணிக்காக இந்தக் கட்சிக்கு மட்டும் வாக்களிப்போரின் எண்ணிக்கை குறைந்திருக்கும் என்றார்.

# இந்தியா செல்லவுள்ளார் பாதுகாப்புச் செயலாளர்



(கொழும்பு)

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தாபய ராஜபக்ச இரண்டு நாட்கள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு இந்த வாரம் இந்தியா செல்லவுள்ளார்.

இந்தியா, இலங்கை; மாலைத்தீவு, ஆகிய நாடுகள் வருடாந்தம் நடாத்தும் கடல்சார் பாதுகாப்பு மாநாட்டில் பங்கேற்பதற்காகவே, அவர் இந்தியா செல்லவுள்ளார்.

இந்தியாவில் தங்கியிருக்கும் நாட்களில் அவர், இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளவுள்ளார்.

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டம் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் சூழலில், பாதுகாப்புச் செயலாளரின் இந்தப் பயணம் இடம் பெறவுள்ளமை முக்கியமானதாகும்.

# பெரும்போக நெல் கொள்வனவு

(கொழும்பு)

இம்முறை பெரும்போகத்தில் 500 மெட்ரிக்தொன் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபை தெரிவித்துள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் அதிகளவாக நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் கே.பீ.ஜயசிங்க கூறினார்.

ஒரு கிலோகிராம் நாட்டரிசி நெல் 32 ரூபாவுக்கும், ஒரு கிலோகிராம் சம்பா அரிசி நெல் 35 ரூபாவுக்கும் கொள்வனவு செய்யப்பட்டதாக சபையின் தலைவர் குறிப்பிட்டார். நெல் கொள்வனவிற்கான போதியளவு நிதி வழங்கப்பட்டுள்ளதாகவும் நெல் சந்தைப்படுத்தல் சபையின் தலைவர் கே.பீ.ஜயசிங்க மேலும் தெரிவித்தார்.

# ஜெனிவா மூலமாக மக்களுக்கு சிறந்த தீர்வு பெறப்பட வேண்டும்

## கூறுகின்றார் பிரபா கணேசன்

ஜெனிவா மூலமாக எமது மக்களுக்கு சிறந்த தீர்வு பெறப்பட வேண்டும். சர்வதேச விசாரணைகள் இடம்பெறுமாயின் எமக்கு நீதி கிடைக்கும். அதே போல் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை அரசாங்கம் உடனடியாக அமுல்படுத்த வேண்டும். இவற்றில் நான் உறுதியாகவுள்ளேன் என்று ஜனநாயக மக்கள் காங்கிரஸின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பிரபா கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

13ஆம் திருத்த சட்டம் இல்லாதொழிக்க முற்பட்டபோது அதனை முறியடிக்க நாடாளுமன்றத்தில் நான் செயற்பட்டமை சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரியும். தமிழ் மக்களுக்கு உரிமைகள் எப்படி தேவையோ, அதே போல் அபிவிருத்தியும் தேவை என்பதை மக்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

நான் அபிவிருத்தி என்று சொல்லுவது பாதைகள், பாலங்கள், கட்டடங்கள் கட்டுவதை அல்ல. மாறாக எமது தமிழ் கல்வி அபிவிருத்தியை மட்டுமே குறிப்பிடுகின்றேன் நடைபெறவிருக்கும் மேல் மாகாணசபை தேர்தலில் மக்கள் சிந்தித்து வாக்களித்தால் கொழு ம்பு மாவட்டத்திலுள்ள அனைத்து பாடசாலைகளையும் சர்வதேச பாடசாலையின் தரத்திற்கு கொண்டு வருவேன்.

மேல் மாகாணத்தைப் பொறுத்தவரை எமக்கு ஆட்சி அமைக்க முடியாது. மாகாண முறைமையின் கீழ் இங்கு கல்வித்துறையை மட்டுமே அபிவிருத்தி செய்ய முடியும்.

இன்று எனது வேட்பாளர்களுக்கு சர்வதேச பிரச்சினைகளை பேசிவாக்குகளை கெற முயற்சிக்க வேண்டாம் என தெளிவான எடுத்துரைத்துள்ளேன் என்றார்.

# தேசிய அரசியலுக்கு ஆலோசனை வழங்குவதே பௌத்த துறவிகளின் கடமையாகும்

## மாதுலுவாவே சோபிததேரர்



(கொழும்பு)

கட்சி அரசியல் என்பது பௌத்த பிக்குகளுக்கு உகந்ததல்ல. பௌத்த பிக்குகளின் கடமை தேசிய அரசியலுக்கு ஆலோசனை தெரிவிப்பதாகும் என மாதுலுவாவே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துவது தொடர்பாக ஆராய்வதற்கு முன்னர் பொது எதிர்க்கட்சி ஒன்று நிறுவப்பட வேண்டியது அவசியம்

இவ்வாறான கருத்துக்களை கூறுவதன் காரணமாக தம்மை ஆளும் அரசாங்கங்கள் எதிர்க்கட்சி உறுப்பினராக கருதுகின்றனர்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஏற்கனவே எதிர்க்கட்சியில் இருந்த போது ஜனாதிபதி முறை ஒழிக்கப்படவேண்டும் என்றுகோரி கதிர்காமத்துக்கு பாதயாத்திரை மேற்கொண்டார்.

ஆனால் இன்று அந்தப் பதவியை நீடித்துள்ளார்

ஜெனிவாவில் கொண்டு வரப்படவுள்ள பிரேரணை காரணமாக இலங்கைக்கு பாதிப்புக்கள் ஏற்படும் என்பதை மறுக்க முடியாது.

நவநீதம்பிள்ளையை திருமணம் செய்து கொள்ள அழைக்கும் அளவுக்கு இலங்கையின் இராஜதந்திரம் வீழ்ந்து போயுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# முஸ்லிம்களின் நிலை அறிய பொதுபலசேன மியன்மாருக்கு

மியன்மாரில் அடிப்படைவாத பௌத்த மக்களின் தொடர தாக்குதலுக்கு உள்ளாகி வரும் ரோஹின்கயா முஸ்லிம் மக்களின் உண்மையான நிலைமையை ஆராயும் நோக்கில் பொதுபல சேன அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தலைமையில் அந்த அமைப பின் பிரதிநிதிகள் மியன்மார் சென்றுள்ளனர்.

அகிம்சைவாதிகளான பௌத்த மக்கள், முஸ்லிம் மக்களுக்கு எதிராக வன்முறையில் பதிலளிப்பதற்கான காரணம் என்ன என்பதையும் இவர்கள் ஆராயவுள்ளனர்.

பௌத்த பயங்கரவாதத்தின் அடையாளம் என மேற்குலக நாடுகளினால் அழைக்கப்படும் மியன்மாரின் சிரத்து தேரர் உட்பட அந்நாட்டின் பௌத்த தலைவர்களைச் சந்தித்து அங்கு ஏற்பட்டுள்ள நிலைமைகள் தொடர்பில் பொதுபலசேன கலந்துரையாட எதிர்பார்த்துள்ளது என அந்த அமைப்பின் பிரதான நிறைவேற்று அதிகாரி டிலாந்த விதானகே தாய்லாந்தில் இருந்து தெரிவித்துள்ளார்.

தாய்லாந்தில் ஏற்பட்டுள்ள நிலைமைகள் குறித்து ஆராய பொதுபல சேன அமைப்பின் பிரதிநிதிகள் அங்கு சென்றிருந்தனர். அங்கு ஏற்பட்டுள்ள நிலைமைகள் தொடர்பில் பௌத்த தலைவர்களை சந்தித்து கலந்துரையாடி யதாகவும் அவர் கூறியுள்ளார். இதனையடுத்து அவர்கள் மியன்மார் சென்றுள்ளனர்.

மியன்மாரில் பௌத்த அடிப்படைவாதிகளின் வன்முறை தாக்குதலுக்கு உள்ளாகியுள்ள முஸ்லிம் மக்கள் அருகில் உள்ள நாடுகளில் அகதிகளாக தங்கியுள்ளனர். பௌத்தர்களின் தாக்குதல்கள் காரணமாக நூற்றுக்கணக்கான முஸ்லிம்கள் கொல்லப்பட் டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# முல்லை பாடசாலைகளின் தேவைகள்

## படிப்படியாக நிவர்த்தி செய்யப்படும்

### அரச அதிபர் தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மீள் குடியேற்றம் செய்யப்பட்ட பகுதிகளில் சில பாடசாலைகள் பல்வேறு தேவைகளையுடைய பாடசாலைகளாக இருக்கின்றன. அவற்றை படிப்படியாக நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகம் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மந்துவில் அரசரட்ணம் வித்தியாலயத்தின் கட்டடத் திறப்பு விழா நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது,

முல்லைத்தீவு கடந்த 2012 ஆம் ஆண்டு மீள் குடியேற்றம் செய்யப்பட்டதோடு சகல பாடசாலைகளும் தற்காலிக கொட்டகைகளிலே ஆரம்பிக்கப்பட்டன. தற்போது படிப்படியாக இப்பாடசாலைகளுக்கு நிரந்தர கட்டடங்கள் அமைத்து வழங்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் அரசரட்ணம் வித்தியாலயத்திற்கும் இந்தக்கட்டடம் வழங்கப்பட்டிருக்கின்றது.

எல்லாவற்றிற்கும் முக்கியமாக விளங்குவது கல்வியே அந்த வகையில் கல்வியினுடைய பௌதீக வளங்கள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும் அத்துடன் இவற்றுடன் மாணவர்களுக்கு நிறைவான கல்வியே வழங்கப்படவேண்டும். எமது பகுதியில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பின்னர் பல்வேறான தேவைகள் காணப்படுகின்றன. அவ்வ படிப்படியாக நிவர்த்தி செய்யப்படுவதோடு. பாடசாலையின் தேவைகள் நிவர்த்தி செய்யப்பட்டு வருகின்றன என்றும் அவர் தெரிவித்தார். (கே)

# கிளி.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் தமிழில் பதிவு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் பொதுமக்களின் முறைப்பாடுகள் தமிழில் பதிவு செய்யப்பட்டு வருவதாக தெரிய வந்துள்ளது.

கடந்த காலங்களில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் போதிய தமிழ் பொலிஸ் இன்மையால் பொலிஸ் முறைப்பாடுகள் சிங்கள மொழியிலேயே பதிவுசெய்ததுடன் பொலிஸ் முறைப்பாட்டு பதிவுகள் சிங்கள மொழியிலேயே வழங்கப்பட்டு வந்தன. ஆனால் தற்போது கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் போதிய தமிழ் பொலிஸார் நியமிக்கப்பட்டதுடன் பொலிஸ் முறைப்பாடுகள் தமிழ் மொழியில் பதிவு செய்யப்பட்டு வருவதுடன் முறைப்பாட்டுப் பிரதிகளும் தமிழ் மொழியில் பதிவு செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (கே)

# நூலகவசதி வேண்டும் பொதுமக்கள் கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் நவீன வசதி கொண்ட பொது நூலகம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் எனப்பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச சபையின்கீழ் உள்ள புதுக்குடியிருப்பு பொதுநூலகம் கடந்த யுத்த காலத்தில் அழிவடைந்து தற்போது புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு முன்பாக ஒரு சிறிய கட்டடத்தில் இயங்கி வருகின்றது. சுமார் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட வாசகர்களின் தேவையைப் பூர்த்தி செய்யவேண்டிய இப்பொதுநூலகம் இன்றுவரைக்கும் குறித்த கட்டடத்தில் இயங்கி வருகின்றது. இந்நிலையில் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் நவீன வசதிகள் கொண்டு ஒரு நூலகம் அமைக்கப்படவேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (கே)

# சைவ வித்தியாசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு




(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினரின் ஏற்பாட்டில் மானிப்பாய் மேற்கு இளைஞர் கழகத்தினரால் கற்றல் ஊக்குவிப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இதன் ஒரு அங்கமாக கட்டுடை சைவ வித்தியாசாலையில் கல்வி பயிலும் 60 மாணவர்களுக்கு கற்றல் ஊக்குவிப்பு உபகரணங்கள் அண்மையில் இடம் பெற்ற பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டியின் போது வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் வடமாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் க.உஷாந்தன், வலி தென்மேற்கு பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவர் வெலிச் சோர் அன்ரன் ஜோன்சன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டு கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தனர்.

இது இவ்வாண்டில் இடம் பெறுகின்ற மானிப்பாய் மேற்கு இளைஞர் கழகத்தினரின் 4 ஆவது கற்றல் ஊக்குவிப்புச் செயற்றிட்டமாகும். (48)




# "கார்மேல் போய்ஸ்" சம்பியன்



மானிப்பாய் சுப்பர் கிங்ஸ் விளையாட்டுக் கழகம் நடாத்திய கிரிக்கெட் போட்டியில் குருநகர் கார்மேல் போய்ஸ் அணி சம்பியனாகியது.

மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டரங்கில் இடம்பெற்று வந்த இப் போட்டிகளின் இறுதிப்போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றது.

இவ் இறுதிப் போட்டியில் குருநகர் கார்மேல் போய்ஸ் விளையாட்டுக் கழக அணியும் கொக்குவில் காமாட்சி விளையாட்டுக் கழக அணியும் மோதின.

நாணயற்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பாடிய கொக்குவில் காமாட்சி விளையாட்டுக் கழக அணி நிர்ணயிக்கப்பட்ட 5 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்து 76 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் மோகன் 42, சிந்து 15, ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர். பந்து வீச்சில் டிக்சன் மற்றும் பவீந்திரன் தலா 1 விக்கெட்டினைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 77 என்னும் வெற்றி இலக்கோடு துடுப்பாடிய குருநகர் கார்மேல் போய்ஸ் விளையாட்டுக் கழக அணி ஷெல்ரனின் அதிரடி கைகொடுக்க 4.3 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கினை அடைந்தது.

இதில் ஷெல்ரன் 43, அஜன் 14 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் அருண், சுஜன், சிந்து ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டினைக் கைப்பற்றினர்.

போட்டியின் சிறப்பாட்டக் காரனாக குருநகர் கார்மேல் போய்ஸ் விளையாட்டுக் கழக வீரன் ஷெல்ரன், சிறந்த துடுப்பாட்ட வீரனாக கொக்குவில் காமாடசி விளையாட்டுக் கழக அணி வீரன் மோகன், சிறந்த பந்துவீச்சாளராக குருநகர் கார்மேல் போய்ஸ் விளையாட்டுக் கழக வீரன் அஜன் ஆகியோர் தெரிவானார்கள்.

இவர்களுக்கான பரிசில்களை வடககு மாகாண விளையாட்டுத்துறை அமைச்சின் இணைப்பாளரும், வடமாகாண சபை உறுப்பினருமான இ.ஆர்னல்ட் உள்ளிட்ட விருந்தினர்கள் வழங்கினர். (48)

# பிரகாசித்தது சங்கானை சிவப்பிரகாசம்

அராலி அம்பாள் விளையாட்டுக் கழகத தினரின் ஏற்பாட்டில் வலிகாம பிரதேச அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்டப் போட்டிகள் அண்மையில் கழக மைதானத்தில் இடம்பெற்றன.

இடம்பெற்ற இறுதியாட்டத்தில் சுழிபுரம் அம்பாள் அணியும் சங்கானை சிவப்பிரகாச அணியினரும் மோதினர்.

ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய சங்கானை சிவப்பிரகாச அணியினர் 25:18, 25:20 என்னும் நேர் செட்களின் அடிப்படையில் 2:0 என வென்றனர்.

இடம்பெற்ற 3 ஆம் இடத்திற்கான போட்டியில் சுழிபுரம் விக்டோரியா அணியினரும் அராலி விளையாட்டுக் கழக அணியும் மோதியது.

இதில் 25:15, 25:18 என்னும் 2:0 நேர் செட்களில் சுழிபுரம் விக்டோரியா அணியினர் அராலி விளையாட்டுக் கழக அணியினரை வென்றனர். (48)

# வலைப்பந்தாட்டம்

வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளிற்கிடையிலான பெரு விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமாகியுள்ளன.

இதன் ஒரு அங்கமான பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டிகள் நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணி முதல் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட கோட்ட மட்டப் போட்டிகளில் வெற்றி பெற்ற 15, 17, 19 வயதுப் பிரிவு அணிகள் இப் போட்டிகளில் கலந்து கொள்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (48)

# ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை "கரம்" போட்டியில் 3 சம்பியன்கள்

வலிகாமம் வலய மட்ட விளையாட்டுப் போட்டிகள் இடம்பெற்று வருகின்றன.

இதில் ஆண் பெண் இரு பாலாரிற்குமான கரம் போட்டிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை சுன்னாகம் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றன.

இதில் 3 பிரிவுகளில் ஆனைக்கோட்டை றோ.க.த.க பாடசாலை சம்பியனாகியது.

இதில் ஆண்களுக்கான 15 வயதுப் பிரிவில் ஆனைக்கோட்டை றோ.க.த.க பாடசாலை சம்பினாகியது. 2 ஆம் இடத்தை உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயமும், 3 ஆம் இடத்தை சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி அணியும் கைப்பற்றின.

இதேவேளை 15 வயதுப் பிரிவு பெண்களுக்கான போட்டியில் ஆனைக்கோட்டை றோ.க.த.க பாடசாலை சம்பினாகியது.

2 ஆம் இடத்தை சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி அணியும், 3 ஆம் இடத்தை உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயமும் கைப்பற்றின.

19 வயதுப் பிரிவு ஆண், களுக்கான போட்டியில் முதலாமிடத்தை உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயமும், 2 ஆம் இடத்தை ஆனைக்கோட்டை றோ.க.த.க பாடசாலையும், 3 ஆம் இடத்தை வசாவிளான் மததிய மகா வித்தியாலய அணியும் கைப்பற்றின.

19 வயதுப் பிரிவு பெண்களுக்கான போட்டியில் முதலாமிடத்தை ஆனைக்கோட்டை றோ.க.த.க பாடசாலை அணி கைப்பற்றியது.

2 ஆம் இடத்தை சுன்னாகம் இராமநாதன் கல்லூரியும், 3 ஆம் இடத்தை உடுவில் மான்ஸ் மகா வித்தியாலய அணியும் கைப்பற்றின. (48)

# கரப்பந்தாட்டத்தில் சம்பியன்



சங்கானைப் பிரதேசசெயலக இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழக அணிகளிற்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமாகியுள்ளன.

இதில் ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டிகள் அராலி மாவத்தை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது. இப்போட்டிகளின் இறுதிப் போட்டியில் சங்கான்னை சிவப்பிரகாச இளைஞர் கழக அணியினரும் மாவத்தை இளைஞர் கழக அணியினரும் மோதினர.

இதில் 25:20, 25:21 என்னும் 2 : 0 நேர் செற்களில் சிவபபிரகாச இளைஞர் கழக அணியினர் வென்று சம்பியனாகினர். (48)

# நண்பர்கள் இளைஞர் கழக அணி சம்பியன்



வேலணைப் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களிற்கிடையிலான பெரு விளையாட்டுப் போட்டிகளில் ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டிகளில் நண்பர்கள் இளைஞர் கழக அணி சம்பியனாகியது.

இப் போட்டிகளின் படி இறுதிப்போட்டிக்கு நண்பர்கள் இளைஞர் கழக அணியும் வேலணை துறையூர் இளைஞர் கழக அணியும் தெரிவானது.

நாணயற் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பாடிய நண்பர்கள் இளைஞர் கழக அணி 5 விக்கெட்களை இழந்து 36 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு துடுப்பாடிய வேலணை துறையூர் இளைஞர் கழக அணி சகல விக்கெட்களையும் இழந்து 33 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இதன்படி இப் போட்டியில் நண்பர்கள் இளைஞர் கழக அணி வெற்றி பெற்று சம்பியனாகியது. (48)

# மெய்வல்லுநர் போட்டி காட்சிகள்...

காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலை





(50)

காரைநகர் வலந்தலை வடக்கு அ.மி.த.க பாடசாலை





(50)

யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி





(105)

காரைநகர் வியாவில் சைவ வித்தியாலயம்






(50)

தோப்புக்காடு மறைஞான சம்பந்த வித்தியாசாலை





(50)



# புலிகளின் போர்க்குற்றங்களையும் விசாரிக்க வேண்டும் என்கிறார் பிள்ளை!

– எம்.எஸ்.எம்.ஐயூப் கட்டுரையிலிருந்து.

தற்போது அரசாங்கம் எதிர்நோக்கியிருக்கும் பிரதான பிரச்சினை ஐ.நா. மனித உரிமை பேரவையில் இலங்கை தொடர்பாக அமெரிக்கா சமர்ப்பிக்கவிருக்கும் பிரேரணையை எதிர்நோக்குவது எவ்வாறு என்பதாகத் தான் இருக்க வேண்டும். அந்தப் பிரேரணை மனித உரிமை பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டு ஒரு நாளில் அதாவது மார்ச் 29ஆம் திகதி மேல் மற்றும் தென் மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நடைபெறவிருக்கின்ற போதிலும் அந்தத் தேர்தல்களை எதிர்நோக்குவது அரசாங்கத்திற்கு ஒரு பிரச்சினையல்ல.

சில வேளைகளில் அந்தப் பிரேரணை இத் தேர்தல்களின் போது அரசாங்கத்திற்கு சாதகமாக அமையவும் கூடும் ஏகாதிபத்தியவாதிகள் இப் பிரேரணையின் மூலம் புலிகளை தோற்கடித்த தலைவரை பழிவாங்குகிறார்கள் என்று அரசாங்கம் பிரசாரம் செய்யலாம். அது ஆளும் கட்சிக்குத் தேர்தலில் சில வாக்குகளையாவது பெற்றுக் கொடுக்கலாம். இதே காரணத்திற்காகவே அரசாங்கம் மார்ச் 29ஆம் திகதியே இத் தேர்தல்களை நடாத்தத் திட்டமிட்டுள்ளதாக சில எதிர்க் கட்சிகள் கூறி வருகின்றன.

கடந்த வருடத்தில் போலவே இவ் வருடமும் மனித உரிமை பேரவையின் மார்ச் மாத கூட்டத்திற்கு முன்னர் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கையின் மனித உரிமை நிலைமை தொடர்பாக அறிக்கையொன்றை வெளியிட்டு இருக்கிறார். அரசாங்கம் அதற்கான தமது பதிலையும் வெளியிட்டு இருக்கிறது. கடந்த கால அனுபவங்களின் பிரகாரம் அரசாங்கத்தின் பதிலைப் பார்த்து அமெரிக்காவோ அல்லது மனித உரிமை ஆணையாளரோ தமது திட்டங்களை மாற்றிக் கொள்ளப் போவதில்லை.

அதேபோல் அமெரிக்கப் பிரேரணை இந்த அறிக்கையின் அடிப்படையில் அமையப் போவதாக ஏற்கெனவே சில செய்திகள் கூறியிருக்கின்றன. கடந்த வருடங்களில் போலவே இம் முறையும் அமெரிக்கப் பிரேரணையின் மூலம் இலங்கை விடயத்தில் சர்வதேச விசாரணையொன்று கோரப்பட மாட்டாது என இதற்கு முன்னர் சில செய்திகள் கூறின. ஆனால் மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை சர்வதேச விசாரணையொன்றை கோருவதனால் அதை அடிப்படையாகக் கொள்ளப் போகும் அமெரிக்கப் பிரேரணையும் சர்வதேச விசாரணையொன்றைக் கோரும் என ஊகிக்க முடிகிறது.

இந்த அறிக்கையில் ஒரு முக்கியத்துவம் இருக்கிறது. அதாவது போர் குற்றங்கள் தொடர்பாக புலிகள் அமைப்புக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளையும் விசாரிக்க வேண்டும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளமையே. இந்த விடயமும் அமெரிக்கப் பிரேரணையில் இடம் பெறுமா என்பது இப்போதைக்கு தெளிவாக தெரியவில்லை.

இதற்கு முன்னர் ஐ.நா. தலைவர்களும் அமெரிக்கா, பிரிட்டன், கனடா மற்றும் தமிழ்நாட்டுத் தலைவர்கள் போர் குற்றங்களைப் பற்றிப் பேசும் போது இலங்கை அரச படைகளால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் குற்றங்களை விசாரிக்க வேண்டும் என்றே வலியுறுத்தி வந்தனர். தமிழ்நாட்டுத் தலைவர்கள் தவிர்ந்த ஏனையவர்கள் பொதுவாக இலங்கையில் போரில் ஈடுபட்ட இரு சாராரும் போர் குற்றங்களை புரிந்ததாக பொதுவாக கூறிய போதிலும் விசாரணை என்று வரும் போது அரச படைகளுக்கு எதிராக விசாரணை நடாத்துவதைப் பற்றியே அவர்கள் வலியுறுத்தி வந்தனர்.

சர்வதேச அறிக்கையொன்று புலிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை விசாரிக்க வேண்டும் என்று நேரடியாகவே கூறிய முதல் முறை இதுவாகும். அக் குற்றச்சாட்டுக்களை விசாரிக்க வேண்டும் என்று கூறுவது மட்டுமல்லாது அவற்றை விசாரிக்காததையிட்டு பிள்ளை அரசாங்கத்தை குறை கூறுகிறார். எனவே புலிகளின் ஆதரவாளர்கள் இந்த அறிக்கையைப் பற்றி முன்னைய அறிக்கைகளைப் போல் ஆதரவை தெரிவிப்பார்களா என்பது சந்தேகமே.

## உடம்பின் கால அட்டவணை



நம் உடலுக்கும் கால அட்டவணை உண்டு. இதை நாம் முறையாகப் பின்பற்றினால் டாக்டரிடம் போக வேண்டிய அவசியமே இல்லை. இதோ கால அட்டவணை:

★ விடியற் காலை 3 முதல் 5 மணிவரை நுரையீரல் நேரம். இந்த நேரத்தில் தியானம், மூச்சுப் பயிற்சி செய்தால் ஆயுள் நீடிக்கும்.

★ காலை 5 முதல் 7 வரை பெருங்குடல் நேரம். இந்த நேரத்தில் காலைக்கடன்களை முடிக்க வேண்டும். இதனால் மலச்சிக்கலே ஏற்படாது.

★ காலை 7 முதல் 9 வரை வயிற்றின் நேரம். இந்த நேரத்தில் சாப்பிடுவது நன்கு ஜீரணமாகும்.

★ காலை 9 முதல் 11 வரை மண்ணீரல் நேரம். வயிற்றில் விழும் உணவைச் செரிக்கச் செய்யும் நேரம். இந்த நேரத்தில் எதையும் சாப்பிடக் கூடாது. தண்ணீர் கூடக் குடிக்கக் கூடாது.

★ காலை 11 முதல் 1 வரை இதயத்தின் நேரம். இதய நோயாளிகள் கவனமாக இருக்க வேண்டிய நேரம். சத்தமாகப் பேசுதல், படபடத்தல், கோபப்படுதலை அறவே தவிர்க்க

★ பிற்பகல் 1 முதல் 3 வரை சிறுகுடல் நேரம். மிதமான சிற்றுண்டியுடன் ஓய்வு எடுக்க வேண்டும்.

★ பிற்பகல் 3 முதல் 5 வரை சிறுநீர்ப் பையின் நேரம். நீர்க்கழிவுகளை வெளியேற்றச் சிறந்த நேரம்.

★ மாலை 5 முதல் 7 வரை சிறுநீரகங்களின் நேரம். தியானம், இறைவழிபாடு செய்வதற்கு ஏற்றது.

★ இரவு 7 முதல் 9 வரை பெரிகார்டியத்தின் நேரம். பெரிகார்டியன் என்பது இதயத்தைச் சுற்றி இருக்கும் ஒரு சவ்வு. இரவு உணவுக்கேற்ற நேரம்.

★ இரவு 9 முதல் 11 வரை - உச்சந்தலை முதல் அடிவயிறு வரை உள்ள மூன்று பாதைகள் இணையும் நேரம். அமைதியாக உறங்கலாம்.

★ இரவு 11 முதல் 1 வரை - பித்தப்பை நேரம். அவசியம் உறங்க வேண்டும்.

★ இரவு 1 முதல் 3 வரை - கல்லீரல் நேரம். இரத்தத்தை கல்லீரல் சுத்தப்படுத்தும் நேரம். கட்டாயம் தூங்க வேண்டும்.

## காற்றின் இசைக்கருவி!



படத்தில் நீங்கள் காண்பது அலைசார்ந்த இசைக்கருவி. இங்கிலாந்தின் பிளாக்போல் பகுதியில் இது அமைக்கப்பட்டுள்ளது. 15 மீற்றர் உயரம் கொண்ட இது கொங்கிறீற், எஃகு, துத்தநாகம் மற்றும் செம்பால் ஆனது. கடற்கரையை ஒட்டி ஒரு சுவர் எழுப்பப்பட்டுள்ளது. அதனுடன் 8 பைப்களை இணைத்துள்ளனர். அந்த எட்டு பைப்களையும் அலைசார்ந்த இசைக்கருவியில் உள்ள 18 பைப்களுடன் இணைத்துள்ளனர்.

அலைசார்ந்து காற்றடிக்கும்போது அது காற்றாக சுவரை ஒட்டிய குழாய்கள் வழியாகப் புகுந்து அலைசார்ந்த இசைக்கருவியை இயக்கும். அப்போது அருமையான இசையை ரசிக்கலாம். உண்மையில் கடுமையான சீற்றத்துக்கு முந்தைய இரண்டுமணி நேர அலைக்காற்றால்தான் சிறந்த சங்கீதத்தைத் தர முடியும். அலையும், காற்றும் இல்லாதபோது, இசைக்கருவியும் அமைதியாகிவிடும். இதேபோன்று சான்பிரான்சிஸ்கோ நகரிலும் மற்றொன்று க்ரோசியா நாட்டிலும் உள்ளது. எல்லாமே அலைசார்ந்த சப்தத்தை இனிமையான சங்கீதமாய் தருவதுதான்..!

## தூக்கம் புத்திசாலி ஆக்கும்!

ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகள் மதியம் ஒரு மணி நேரம் தூங்கினால், அவர்களுடைய மூளையின் ஆற்றல் மேம்படுகிறது என்று கண்டுபிடித்திருக்கிறார்கள் அமெரிக்காவின் ஹம்ஹர்ஸ்ட் பல்கலைக்கழக ஆய்வாளர்கள்.



40 குழந்தைகளை அவர்கள் ஆய்வுக்கு உட்படுத்தினார்கள். மதிய நேரத்தில் தூங்காத குழந்தைகளின் நினைவு ஆற்றல் குறைவாக இருப்பது தெரிய வந்தது. ஆனால் தூங்கிய குழந்தைகள் அதற்கு முன்பு கற்ற பாடங்களை மிகவும் நன்றாக நினைவில் வைத்திருந்தார்களாம்!

குழந்தைகள் இயற்கையாகவே தம்மைச் சுற்றியுள்ள எல்லாவற்றிலிருந்தும் கற்றுக் கொண்டே இருக்கிறார்கள். எப்போது பார்த்தாலும் ஏராளமான தகவல்களை உள் வாங்கிக் கொண்டே இருக்கிறார்கள். இந்தத் தகவல்களையெல்லாம் மூளை சேமித்து வைத்துக் கொள்ள ஒரு நாளைக்கு 12 மணி நேரத்துக்கு மேல் குழந்தைகள் தூங்க வேண்டும்! அப்போதுதான் மூளைத்திறன் மேம்படுமாம்!

""நான் எத்தனையோ வருடங்களாக மதிய நேரத்தில் தூங்கிக் கொண்டுதானே இருக்கிறேன். அப்படியிருந்தும் எல்லாரும் என்னை மக்கு என்று ஏன் சொல்கிறார்கள்?"" என்று கேட்காதீர்கள். அது வேறு கதை.

# அஃகம் சுருக்கேல் ஒளவியம் பேசேல் 3

நாஞ்சில் நாடன்

ஒளவையார் ஆத்திசூடி எழுதுங்காலை, பல எழுத்துகளைத் தாண்டிச் சென்றாலும், மறக்காமல் ஃ எழுத்துக்கு ஒரு சூத்திரம் எழுதுகிறார். 13 ஆவது சொற்றொடர் அது, அஃகம் சுருக்கேல்!

அஃகம் சுருக்கேல் என்பதன் பொருள், நெல் முதலான தானியங்களைக் குறைத்து விற்காதே! அஃதாவது, மிகுந்த லாபத்துக்கு ஆசைப்பட்டு, தானியங்களை அளவு குறைவாக விற்காதே! பழைய சினிமா பாடல் ஒன்றுண்டு.

"பக்கா படிக்கு முக்கா படியை அளக்கிறான்.
அந்த பாழாப் போனவன் நம்மளை பாத்து மொறைக்கிறான்."

பக்கா படிக்கு முக்காப் படி அளப்பது தான் அஃகம் சுருக்குதல்.



அஃகம் சுருக்கேல்!

தானியம் சுருக்குதல் என்று சொல்லலாம் ஒளவைக்கு. அளவு சுருக்கேல் என்று கூட சொல்லலாம். ஆனால் ஃ எனும் எழுத்தை இழந்து விட்டு ஒதுக்கி விட்டு போக மனமில்லை. மேலும் தானியம் என்று பொருள் தரும் அஃகம் என்ற சொல்லுண்டு அவர் கைவசம். எனவே அஃகம் சுருக்கேல்!

எங்களூரில் பொலி அளக்க ஒரு மரக்கால் உண்டு. அறுவடையாகிச் சூட்டித்து பொலி விட்ட நெல்லை அளப்பதற்கான மரக்கால். திருத்தமாக ஒரு மரக்கால் என்பது எட்டு நாழி. நெல்லளவு மரக்கால் என்பது, விலைக்கு நெல் வாங்க வரும் வியாபாரி கொண்டு வரும் மரக்கால். மரக்காலுக்கு ஏழரை நாழி இருக்கும். மூன்றாவது கொத்தளவு மரக்கால். அதாவது அறுத்தவருக்கு, சூடடித்து கொடுத்தவருக்கு கொத்து அளந்து கொடுக்கும் மரக்கால். இந்த மரக்காலில் ஆறரை நாழியே கொள்ளும். இது நிலக்கிழார், வேலை பார்க்கிறவனுக்கு வைக்கும் சூத்திரம். அன்று இது பற்றி கேள்வி கேட்க ஏலாது.

அதாவது வீட்டுக்குப் போகும் நெல்லை அளக்க, மரக்காலுக்கு எட்டு நாழி. கூலிக்கு என வெளியே போகும் நெல்லை அளக்க மரக்காலுக்கு ஆறரை நாழி. இதுதான் ஒளவை பேசும் அஃகம் சுருக்குதல்.

அஃகம் என்பது தானியம் என்பது பொதுப் பொருளே ஆனாலும், அதை ஒரு குறியீடாக நாம் காணவியலும்.

நாம் அணியும் சட்டை துணியை எடுத்துக்கொள்வோம். பஞ்சு நூல் 50 சதவீதம், விஸ்கோஸ் நூல் 50 சதவீதம் என்று அச்சிட்டிருப்பார்கள். அவற்றுள் பஞ்சு விலை அதிகம், விஸ்கோஸ் விலை குறைவு என்று கொள்வோம். பஞ்சு நூல் 40, விஸ்கோஸ் நூல் 60 சதவீதத்தில் கலந்து நெய்யப்பட்டிருந்தால், நமக்கு என்ன தெரியும்? பரிசோதனை சாலைக்கு அனுப்பினால் தெரியும். நம்மால் அனுப்ப இயலுமா? இது கண்ணுக்குத் தெரியாத சுரண்டல். இது அஃகம் சுருக்குதல், செய்யாதே என்கிறாள் ஒளவை.

ஒரு மீற்றர் எனில் 100 செ.மீ இரண்டு மீற்றர் துணி கிழிக்கச் சொன்னால் 190 செ.மீ கிழித்தால் அது அஃகம் சுருக்குதல்.

கத்தரிக்காய் வாங்க போகிறோம். கிலோ முப்பது ரூபாய் என்கிறார். நாம் பேரம் பேசவில்லை. அவர் விற்கும் விலை. நாம் வாங்கும் விலை. ஆனால் கிலோவுக்கு 900 கிராம் தான் நிறுக்கிறார் என்றால், அது அஃகம் சுருக்குதல்.

எடையை குறைக்க மூன்று வித்தைகள் செய்வார்கள். துலாக்கோலின் நீளம் சரியாக பகுக்கப்படாமல், கத்தரிக்காய் தட்டின் பக்கம் நீளம் அதிகமாக இருக்கும். முதலில் அந்த தட்டு தாழும்படி நிறைய காய்களை போட்டுவிட்டால், பின்பு எவ்வளவு எடுத்தாலும் தட்டு மேலே வராது. வியாபாரி போதும் என்று தோன்றும் வரை எடுக்கலாம். இரண்டாவது நிறுக்கும் எடைகல்லே 900 கிராமுக்கு சீவி எடுக்கப்பட்டிருக்கும். 1 கிலோ=900 கிராம். ½ கிலோ= 450 கிராம் என்று தயாரிக்கும் தொழிற்சாலைகள் உண்டு.

விற்பது - வாங்குவது என்பது தானியங்கள், பருப்புகள், காய், கனி, கந்தமூலம் என்பது மட்டுமல்ல. ஒளவையை விரிவானதோர் பொருளில் காணல் வேண்டும். எந்தச் சேவையையும் அதன் உள்ளே அடக்கலாம்.

எத்துறையாக இருந்தாலும் ஐம்பதினாயிரம் மாத ஊதியமும் வாங்கி ஒன்றரை இலட்சம் மாதம் குடிப்பறியும் செய்து, முப்பதினாயிரம் பெறுமதிப்புள்ள சேவையே வழங்குபவருக்கும் பொருந்தும். அஃகம் சுருக்கேல் என்பது, நூறு ரூபாய் அடக்கவிலை வரும் இனிப்பை நூற்றைம்பது விற்பவருக்கும் பொருந்தும். கொள்ளை லாபம் தின்றால் தீரும் என்பார்கள் கிராமத்தில். இது அதுவல்ல. ஏமாற்று, வழிப்பறி.

நான் சொல்லவருவது, பருப் பொருட்கள் என்றில்லாமல், எந்த சேவையானாலும் மருத்துவம் - நீதி - உபாத்திமை - எதுவானாலும் வாங்கும் ஊதியம் அல்லது கட்டணத்துக்குக் குறைவான சேவை அஃகம் சுருக்குதல்தான்.

உங்களுக்குத் தோன்றுகிறதா அரசாங்கத்தால் நமக்கு வழங்கப்படும் சேவை எதுவும் குறைவற்று நடக்கிறது என்று. தபால், ரயில், சுகாதாரம், மருத்துவம் அஃகம் சுருங்காத சேவை தருகிறதா? பேருந்துகள், ரயில் பெட்டிகள், பொதுக் கழிப்பிடங்கள் சரியாகக் கழுவப்படுகின்றனவா? வாங்கும் சம்பளத்துக்கு ஆசிரியர்கள் பயிற்றுவிக்கிறார்களா?

தம்மைத் தாமே சுரண்டும், கள்வாடும், ஏமாற்றும், அறுத்துத் தின்னும் சமூகமாக நாம் மாறியாயிற்று. இன்று ஒளவையின் ஆத்திசூடி வாசகம் "அஃகம் சுருக்கேல்" நடைமுறைச் சாத்தியமா என்றுமக்குத் தோன்றக்கூடும்.

இஃதொன்றும் யாருக்கும் யாரும் செய்யும் சலுகையோ தயவோ இல்லை. உழைப்புக்கான ஊதியமும் விலைக்கான பொருளும் நமது உரிமை. இதைச்சொல்ல முற்போக்கு எழுத்தாளர் சங்கத்திலோ, கலை இலக்கிய பெருமன்றத்திலோ அங்கமாக இருக்க வேண்டும் எனும் விதி இல்லை.

இன்று இவை சாத்தியமா எனக் கேட்டால், வழிப்பறியும், கொள்ளையும், கொலையும், வன்கலவியும் நடக்காமல் இருப்பது சாத்தியமா எனத் திருப்பிக் கேட்பேன்.

ஒளவையார் சொல்கிறார் - "கெடுப்பது ஒழி."

(தொடரும்)

## சினிமா சினிமா

★ கடைசியாக 1984-ஆம் ஆண்டு ரஜினிகாந்த், ரேவதி நடிப்பில் வெளிவந்த "கை கொடுக்கும் கை" படத்தில் பணியாற்றிய மகேந்திரன்-இளையராஜா கூட்டணி மீண்டும் இணைகிறது. 23 ஆண்டுகளுக்குப் பிறகு மகேந்திரன் இயக்கும் இப்படம், புதிய கலாசார மாற்றங்களால் குடும்பங்களிலும், உறவுகளின் மத்தியிலும் சிதைந்துள்ள வாழ்க்கையை சொல்லப் போகிறது.

★ "சிவப்பு" என்ற படத்தில், அகதிகளாக வரும் இலங்கை தமிழர்களுக்கு, அடைக்கலம் கொடுக்கும், வேடத்தில் நடித்துள்ளார் ராஜ்கிரண். "அவங்களுக்கு நல்லது செய்யணும்ன்னா செய்யுங்க; இல்லேன்னா விட்டுடுங்க. தயவு செய்து அவங்களை வச்சு அரசியல் மட்டும் பண்ணாதீங்க..."என்று, ஒரு காட்சியில், அரசியல்வாதிகளைப் பார்த்து, ஆவேசமாக வசனம் பேசி நடித்துள்ளார் ராஜ்கிரண். இதனால், படம் திரைக்கு வரும் நேரத்தில், சர்ச்சைகள் உருவாகும் என தெரிகிறது.

★ ஜெய் நடிக்கும், வடகறி படத்தில், குத்துப் பாடலுக்கு நடனமாட, கோலிவுட்டிற்கு வரும் கவர்ச்சிப் புயல் சன்னி லியோன், தொடர்ந்து, தென்னிந்திய படங்களில் நடிக்க முடிவெடுத்துள்ளார். இதே வேளை, ஹிந்தியில் அவர் நடித்த, எம்.எம்.எஸ்.-2 என்ற படம், இந்தியா முழுக்க வெளியாகிறது. இப்படத்தில், பேய் வேடத்தில் நடித்துள்ளார் சன்னி லியோன். இதனால், வடகறி படத்தில் அவரது பெயருக்கு முன், கவர்ச்சிப் பேய் என்ற பட்டத்தை, டைட்டில் கார்டில் போட முடிவெடுத்துள்ளனர்.

★ மலையாளத்தில் மம்முட்டியின் மகன் துல்கர் சல்மான், இயக்குநர் பாசிலின் மகன் பஹத் பாசில் ஆகியோர் நடிகர்களாகி விட்டதையடுத்து, மோகன் லால் தன் மகன் பிரணவை, நடிப்புப் பயிற்சிக்கு அனுப்பியுள்ளார். அவரைப் பார்த்து ஜெயராமும், தன் மகன் காளிதாசுக்கு நடிப்பு, நடனம் மற்றும் சண்டைப் பயிற்சி கொடுத்து வருவதோடு, இயக்குநர்களிடம் தீவிரமாக கதையும் கேட்டுக் கொண்டிருக்கிறார்.



★ அஜித் நடித்து விஷ்ணுவர்தன் இயக்கிய "ஆரம்பம்" படத்தின் ஹிந்தி ரீமேக் உரிமையை அக்ஷய்குமார் வாங்கியுள்ளார். படத்தைப் பார்த்த ஷாருக் கான், சல்மான் கான் இருவருமே நடிப்பதற்கு விருப்பம் தெரிவித்துள்ளார்களாம்.

★ துப்பாக்கியைத் தொடர்ந்து மீண்டும் ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் விஜய் நடிக்கும் படத்தின் படப்பிடிப்பு நடக்கிறது. இந்நிலையில், அப்படத்தின் கதை, இணையத்தளங்களில் பரவி விட்டதால், அதிர்ச்சியடைந்த முருகதாஸ், படத்தில் பணிபுரியும் உதவி இயக்குநர்களை கண்காணிக்க ஒரு இரகசிய உளவுத்துறையை நியமித்துள்ளாராம்.

★ வணக்கம் சென்னை படத்தை யடுத்து, அதர்வாவுடன், இரும்புக் குதிரை, விக்ரம் பிரபுவுடன் அரிமா நம்பி படங்களில் நடித்து வரும் ப்ரியா ஆனந்த், தன்னை நிராகரித்து வந்த சில இயக்குநர்களிடம், திரும்பவும் போய் சான்ஸ் கேட்டு வருகிறார். "நான் அமெரிக்காவில் பிறந்து வளர்ந்தவள்..." என்று கொடுத்து வந்த பில்டப்பை விட்டொழித்து, புடவையில் சென்று, "நான் தமிழ்க் கலாசாரத்துக்குஏற்ற நடிகை..." என்று, ஆதரவு திரட்டுகிறாராம்.

★ "கண்ணா லட்டு தின்ன ஆசையா" கூட்டணி, மீண்டும் ஒரு படத்தில் இணைந்துள்ளனர். புதிய படத்திலும் அந்தப் படத்தில் நடித்த வடக்கத்திய நடிகையை நாயகியாக வரவேண்டும் என்று சந்தானம் நிபந்தனை போட்டுள்ளாராம்.

★ "அரவான்" படத்துக்குப் பின் வசந்தபாலன் இயக்கும் படம் "காவியத் தலைவன்". ஏ.ஆர்.ரஹ்மான் இசை. சித்தார்த், பிருத்விராஜ், வேதிகா, அனைகா நடிக்கின்றனர். சுதந்திரத்துக்கு முந்தைய காலகட்டத்தில் நாடகக் கலைஞர்களின் வாழ்க்கையைச் சொல்லும் படம். தமிழ் நாடகத்தின் தந்தை எனப்படும் சங்கரதாஸ் நாடகக் கம்பனியில் நடப்பது போல், கதைக்களம் அமைக்கப் பட்டுள்ளது. இங்குதான் தமிழ் நாடகக் கலையின் முன்னோடிகளின் சிலரான கிட்டப்பா, கே.பி.சுந்தராம்பாள், எம்.ஆர்.ராதா போன்றோர் உருவானார்கள். இந்தப் பழைய நடிகர்களை பிரதிபலிப்பது போல் கதாபாத்திரங்கள் வடிவமைக்கப்பட்டுள்ள தாகத் தெரிகிறது.

★ விலங்குகள் நல அமைப்பான, "பீட்டா"வில், தன்னை இணைத்துள்ள எமி ஜாக்சன், தன் தோழிகளையும் அந்த அமைப்பில் இணையுமாறு வலியுறுத்தி வருகிறார்.

★ ஆரோகணம் படத்தை இயக்கிய நடிகை லட்சுமி ராமகிருஷ்ணனின், அடுத்த படத்தில், பியா நாயகியாக நடிக்கிறார்.

★ விக்ரமை வைத்து செல்வராகவன் இயக்கவிருந்த, சிந்துபாத் கதையில், தற்சமயம் சிம்பு நடிக்கிறார்.

# "நெல்சிப் திட்டத்தின்" நிதியில்

# மாந்தை கிழக்கில் அபிவிருத்தி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாந்தை கிழக்குப் பிரதேசத்தின் அபிவிருத்திக்கென 2013 ஆம் ஆண்டு நெல்சிப் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த 62 மில்லியன் ரூபா பெறுமதியான வேலைகள் திறம்படச் செய்து முடிக்கப்பட்டிருப்பதாக வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தெரிவித்தார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழான நிதி ஒதுக்கீட்டின் கீழ் நெல்சிப் 2013 திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியுதவியின் கீழ் அமைக்கப்பட்ட நட்டாங் கண்டல் பொதுச் சந்தையின் திறப்பு விழாவில் கலந்து கொண்ட போதே அவர், இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தனது உரையில் தெரிவித்ததாவது, இத்திட்டத்தின் கீழ் மாந்தை கிழக்கு பிரதேசத்திற்கு 102 மல்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இதில 62 மில்லியன் ரூபாவிற்கான வேலைகள் நிறைவடைந்திருக்கின்றன. இச்சந்தைக் கட்டடத் தொகு தி 9.7 மில்லியன் ரூபாய் செலவில் இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இன்னும் சில வேலைகள் இருக்கின்றன. அதனை திறம்படச் செய்ய வேண்டுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(கே)

# கற்றல் உபகரணங்களை வழங்கியது லயன்ஸ் கழகம்




அல்வாய் அம்பாள் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் 25 வறிய மாணவர்களுக்கு நெல்லியடி லயன்ஸ் கழகத்தினால் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. கடந்த புதன்கிழமை பாடசாலையில் வைத்து உபகரணங்கள் கழகத்தினால் வழங்கப்பட்டுள்ளதுடன் இதில் கழகத்தலைவர் மாணவர்களுக்கான உபகரணங்களை வழங்கிவைத்தார்.

மேலும் இம்மாணவர்களுக்கு நெல்லியடி தொழிலதிபர் ந.பாஸ்கரனால் பாதணிகளும் வழங்கப்பட்டன.

# தொழிற்பயிற்சிகளை வழங்க விதாதாவள நிலையம் ஏற்பாடு

## சண்டிலிப்பாய் பிரதேச செயலர் தெரிவிப்பு

(அச்சுவேலி)

சண்டிலிப்பாய் விதாதா வளநிலையம் தொழில்நுட்பவியல் அமைச்சின் ஏற்பாட்டில் இலவச தொழிற் பயிற்சிகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது என சண்டிலிப்பாய் பிரதேச செயலர் எஸ்.முரளிதரன் தெரிவித்துள்ளார்.

இந்தப் பயிற்சிகளில் மெழுகுதிரி தயாரித்தல், ஊறுகாய் தயாரித்தல், யேக்கட் தயாரித்தல், பொதியிடல், சாம்பிராணிக்குச்சி தயாரித்தல், சேதனப்பசளை தயாரித்தல், வீட்டுத்தோட்டப் பயிற்சி, ஜாம், கோடியல் தயாரித்தல், மரக்கறி பதனிடல் பயிற்சி, வியாபாரக்கணக்கு பதிவு முறை போன்றன உள்ளடங்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் பயிற்சி நெறிகளை தொழில்நுட்பவியல் அமைச்சு சண்டிலிப்பாய் விதாதா வள நிலையத்தால் இலசவமாக வழங்கவுள்ளது.

ஆர்வமுள்ளவர்கள் தமது சுயவிபரக்கோவை, சான் றிதழ்கள் மற்றும் பங்கீட்டு அட்டையுடன் எதிர்வரும் திங்கட்கிழமைக்கு முன்னர் பிரதேச செயலக விதாதாவள நிலையத்துக்கு நேரில் வந்து பதிவுகளை மேற்கொள்ளுமாறு பிரதேச செயலர் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார்.

(85)

## "இனியும் முட்செடிகள் முளைக்கலாம்" முதற் பரிசுபெற்ற சிறுகதை

வடலி பதிப்பகம் நடாத்திய இளம்படைப் பாளர்களுக்கான சர்வதேச ரீதியான சிறுகதைப் போட்டியில் "இனியும் முட்செடிகள் முளைக்கலாம்" என்ற சிறுகதைக்கு முதற்பரிசு கிடைத்துள்ளது.

இக் கதையினை அளவெட்டி வே.சிவராஜா எழுதியுள்ளார்.

இப் போட்டியின் பரிசளிப்பு விழாவும் வெற்றிபெற்ற ஆக்கங்களை உள்ளடக்கிய "திசைகாட்டி மரம்" நூல்வெளியீடும் கொழும்பு தமிழ்ச்சங்க மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெற்றது.

பத்திரிகை, வானொலி மற்றும் கலை இலக்கிய உலகின் ஜாம்பவான்கள் பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு நிகழ்வைப் பெருமைப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. (48)

## பரமர் சங்கமம்



'தம்பி உடையான் சண்டைக்கஞ்சான்' எண்டதைக் கேள்விப் பட்டிருப்பியள். அப்புடியெண்டா வேண்டிக் கட்டுறே அவனே? அப்புடித்தான் நடந்து கொண்டிருக்குது பாருங்கோ!

எதுக்குச் சொல்லுறன் எண்டால் எங்கட ஜெயலலிதா அம்மா எதிர்வரும் இந்திய நாடாளுமன்றத் தேர்தலுக்கு புதிதாக வெளியிட்டு வைச்சிருக்கிற தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழத்துக்குச் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென்றும் ஒரு தீர்மானம் வைச்சிருக்கிறவாம்.

உப்புடி ஆளுக்கொரு யோசனைகளை தேர்தலுக்குத் தேர்தல் முன்வைத்து தங்கட காரியத்தை முடிச்சுப் போடுவினம். அந்த இத்த கயித்திலை தொங்கி விழுந்து முகமுடைபடுகிறவை வேறை ஆக்கள் தானை இல்லையே பின்னை...

பரமருக்கு எப்பவும் உருப்படியான சிந்தனை மூளேல தோன்றாதோ எண்டும் உங்களில சிலபேர் என்னோடை வாதத்துக்கு வரவும் கூடும்? ஜெயலலிதாவின்ர நடவடிக்கையளைப் பாத்திருந்த பிக்கொருவர் அவவுக்கு விசர் புடிச்சிட்டுது எண்டு மெல்லீசாச் சொன்னதும் ஞாபகத்துக்கு வந்து போகுது.

ஜெனிவாவில இலங்கை அரசுக்கு எதிராக மனித உரிமை மீறல் பிரச்சினையை கொண்டுவர பிரிட்டனும், அமெரிக்காவும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்க அதில இலங்கை வெற்றி பெறுவதற்காக பக்க உதவிகளாகச் சில நாடுகளை வளைத்துப் பிடிக்கேலும், ஜெயலலிதா தமிழர்களுக்காக எதனையும் செய்து விடக்கூடாதா?

'தனக்குத் தனக்கெண்டா சுளகு படக்குப்படக் கென்னும' என்பது போல அரசு தனக்கொரு நீதி மற்றவர்க்கொரு நீதி பேசுவதை ஏற்பவர்கள் பாதிக்கப்பட்டிருக்கும் தமிழர் களுக்காக பக்கத்தில் இருக்கும் தமிழ்நாடு மூச்சு விட்டால் ஏன் கொதிக்கிறார்கள்?

ஆர் எதைச் சொன்னாலும் எதுவுமே நடந்து விடப் போவதில்லை. எல்லாக்காரியங்களுக்கும் முடிவெண்டது ஒண்டுமில்லை. மாற்றங்கள் ஏற்படுவதுதான் நியதி. 'குற்றம் செய்தவன் மனம் குறுகுறுக்கும்' அதற்குத் தன்மீது பாரதூரமான தீர்ப்புக்கள் எதுவும் வந்திடாமல் இருக்க தன்னணியைப் பலப்படுத்த ஆளணிசேர்ப்பதும் நடைமுறைதான்.

அதற்கு அவருக்கு உரிமை இல்லை என்றோ எங்கட உள்நாட்டுப் பிரச்சினைகளில் மூக்கை நுழைக்கத் தேவையில்லை எண்டோ விசர்க்கதையெண்டோ எதிர்த் தரப்பு விமர்சிப்பதும் புதுமையான ஒன்றில்லை.

இருந்தாலும் அது அரசியலில் தற்போதைய வெற்றிக்காக கைகளில் தூக்கும் ஆயுதமாக அவரவர் பக்கத்தை பலப்படுத்த 'தம்பி உடையான் சண்டைக்கு அஞ்சான்' என்னும் பின்னணி ஒண்டிருக்கத்தான் செய்யுது. இல்லையே என்ன நான் சொல்லுறே...

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை விநியோகிப்பதற்கான புகைப்படங்கள் எடுப்பதற்குப் பதிவு செய்யும் புகைப்பட நிலையங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தால் 15 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை வழங்குவதற்கு புகைப்படங்கள் எடுப்பதற்காகவே இவ்விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்துக்கு புகைப்பட நிலையங்களால் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கும் வகையில் அனுப்பி வைக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விபரங்கள், மாதிரி விண்ணப்பப்படிவங்கள் போன்றவற்றை நல்லூர் பிரதேச செயலக அடையாள அட்டைப்பிரிவில் அலுவலக நேரத்தில் பார்வையிடமுடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## முரசின் இன்றைய பலன்

(05.03.2014 புதன்கிழமை)



விஜய வருஷம் மாசி மாதம் 21 ஆம் திகதி.
மரணயோகம் / சதுர்த்தி . அஸ்வினி நட்சத்திரம்.
மாலை 6.13 வரை. பின் பரணி.
இராகுகாலம் 12.26 - 01.56 வரை. சுபநேரம் 04.56 - 06.26 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | தொழில் தொடர்பான சர்ச்சை, நண்பர்களுடன் ஒத்துப் போதல், சுமுகமான நிலை, சட்டச்சிக்கல்கள் ஏற்படும். |
| ரிஷபம் | திருமண விவகாரத்தில் தடங்கல், மனக்குழப்பம் நீங்குதல், பணியகத்தில் மன ஒருமைப்பபாட்டுடன் செயல்புரிதல். |
| மிதுனம் | பிள்ளைகளின் முன்னேற்றத்தால் சந்தோசம் கிட்டும், உடல் நலக்குறைவு, மனவிரக்தி ஏற்படுதல். |
| கடகம் | பணப்பிரச்சினை, கடன் பெறுவதில் சிரமம், நண்பர்களின் உதவி கிட்டும். |
| சிம்மம் | குடும்பத்தில் கருத்து முரண்பாடு ஏற்படும், சந்தோசம் குறையும், வியாபாரத்தில் இலாபம், புதிய சிந்தனையைச் செயற்படுத்தல். |
| கன்னி | தொலைபேசியால் மனக்கவலை ஏற்படும், கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியாமல் மனம் வருந்தல். |
| துலாம் | திருமணத் தடை நீங்குதல், சகோதரர் உதவியால் பணப் பாற்றக்குறை நீங்கும். |
| விருச்சிகம் | பயணங்கள் தடைப்படும், முகவர் தொழிலில் பணச்சிக்கல், வேலைப்பளு அதிகரித்ததால் மனச் சோர்வு ஏற்பட்டு பதகளிப்படைதல். |
| தனுசு | தொழில் நிரந்தரமாக்கப்பட்டதால் மகிழ்வு, அவதானமாக காரியத்தை நிறைவேற்றல், பொறுமையைக் கடைப்பிடித்தல் அவசியம். |
| மகரம் | எதிரிகள் தொடர்பில் அவதானம் அவசியம், நண்பர்கள் வருகையால் ஆனந்தம். |
| கும்பம் | துன்பங்கள் அதிகரிக்கும், மனையைவிட்டு நீங்க முடிவெடுத்தல், மின்சாரம் தொடர்பாக அவதானம் தேவை, அபாயம் நீங்கும். |
| மீனம் | தீங்கு விளைவிக்க எண்ணுதல், துன்பங்களை அடைதல், தடைப்பட்டகாரியம் நிறைவேறும். |

# "மொழிமுனை" விவாதப் போட்டியில்

## வேம்படி மகளிர் கல்லூரி அணி முதலிடம்

(கொழும்பு)

மொழி முனை 2014 தேசிய மட்ட விவாதப் போட்டியில் யாழ்.மாவட்டம் சார்பாக வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலை அணி கொழும்பில் எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பங்குபற்றவுள்ளது.

யாழ்.மாவட்ட பாடசாலைகளின் மாணவ விவாதக் குழுக்களுக்கிடையிலான மொழி முனை 2014 விவாதப்போட்டியில் முதலிடத்தைப் பெற்றுக் கொண்ட நிலையிலேயே வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை தேசிய மட்டப் போட்டியில பங்குபற்றவுள்ளது.

மேற்படி விவாதப் போட்டி இலங்கைத் தமிழ் விவாதிகள் கழகத்தின் ஏற்பாட்டில், இளைஞர் இலக்கிய மன்றத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.

இதில், சுண்டுக்குழி மகளிர் கல்லூரி, சென்.ஜோண்ஸ் கல்லூரி, வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலை, திருக்குடும்பக் கன்னியர்மடம் மகா வித்தியாலயம், யாழ்.இந்துக் கல்லூரி, தெல்லிப்பளை யூனியன் கல்லூரி, வட்டு இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, சென்.பற்றிக்ஸ் கல்லூரி, அச்சுவேலி புனித திரேசா மகளிர் உயர் தரப் பாடசாலை, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, ஆகிய பாடசாலைகளின் விவாதக் குழுக்கள் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து இறுதிப்போட்டியில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை விவாதக்குழுவும் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி விவாதக் குழுவும் விவாதம் செய்தன.

இதில் வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலை அணி முதலிடத்தினைப் பெற்றுக் கொண்டது. இரணடாமிடத்தினை தெல்லிப்பளை யூனியன் கல்லூரியும், மூனறாமிடத்தினை பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையும் பெற்றுக் கொணடன.(48)

## சங்காபிஷேகம்

மிருசுவில் படித்த மகளிர் திட்டம் 'துர்க்காபுரம்' அருள்மிகு ஸ்ரீ ஞானதுர்க்கை அம்மன் தேவஸ்தான மணவாளக் கோல தின சகஸ்ர(1008)) சலச சங்காபிஷேக விஞ்ஞாபனம் எதிர்வரும் 17 ஆம் திகதி திங்கட்கிழமை பங்குனி உத்தர நன்னாளில் நடைபெறவுள்ளது.

அருளாசி உரையை ஸ்ரீலஸ்ரீதேசிய ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் (நல்லை ஆதீனம்) வழங்கவுள்ளது.

# தமிழ்ச் சினிமாவில் பாலுமகேந்திரா திரைப்படக் காட்சியும் கருத்துரையும்

(யாழ்ப்பாணம்)

பாலுமகேந்திராவின் சினிமா தொடர்பான புரிதலை ஏற்படுத்துவதற்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி மையம் கருத்தரங்கு மற்றும் திரைபபடக் காட்சியை தொடர்ந்து மூன்று நாட்கள் நடத்தத் தீர்மானித்துள்ளதா. யாழ்.பல்கலைக்கழகத்தின் ஊடாக வளங்கள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இன்றும், நாளையும், நாளை மறுதினமும் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.30மணி வரை யாழ்ப்பாணம் ஜும்மா பள்ளிவசல் ஒழுங்கையில் அமைந்தள்ள ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் நடைபெறவுள்ளது. இதில் பாலுமகேந்திராவின் திரைப் படங்களும் குறும்படங்களும் திரையிடப்படுவதோடு அவரின் சினிமாப்பாணி தொடர்பான கருத்துரைகளும் நடைபெறவுள்ளன.

முதல்நாள் அமர்வில் பாலுமகேந்திரா என்ற சினிமா ஆளுமை என்ற தலைப்பில் தே.தேவானந்தும் ஒளிப்படக்கலைஞராக பாலுமகேந்திரா என்ற தலைப்பில் ,கிருஸ்ணகுமாரும் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

அதே நாளில் சந்தியாராகம் என்ற திரைப்படமும் அம்மா, அப்பா மற்றும் தாம்பத்திய நினைவுகள் நம்பிக்கை ஆகிய குறும் படங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

இரண்டாம் நாளில் பாலுமகேந்திராவின் படைப்புலகு எனும் தலைப்பில் குப்பிளான் சண்முகமும். தென்னிந்திய சினிமாவின் யுக புருஹர் என்ற தலைப்பில் பேராசிரியர் வி.பி.சிவநாதன் கருத்துரை வழங்கவுள்ளனர. அன்றைய தினம் ராமன் அப்துல்லா, இரட்டை வால்குருவி ஆகிய இரண்டு திரைப்படங்களும் தப்புக் கணக்கு, பொன்னாசை ஆகிய குறும்படங்களும் காட்சிப்படுத்தப்பட வுள்ளன.

மூன்றாவது நாள் நிகழ்வுகளில் பாலுமகேந்திரா ஓர் விமர்சனப்பார்வை எனும் தலைப்பில் ஜி.ரி.கேதாரநாதன் கருத்துரை வழங்கவுள்ளார். அன்றைய தினம் வீடு மற்றும் மூடு பனி ஆகிய படங்கள் திரையிடப்படவுள்ளன. மேலும் ஒரு மனிசி, காத்திருப்பு, பிரசாதம் போன்ற குறும்படங்களும் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

திரைப்படத்துறை ஆர்வலர்கள் மற்றும் ஊடக மாணவர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொள்ள முடியும் என தேவானந்த் அறிவித்துள்ளார்.



தமிழ் சினிமாவின் ஆளுமையாகப் போற்றப்படுபவர் அண்மையில் மறைந்த தென்னிந்திய திரைப்பட இயக்குனர் பாலுமகேந்திரா. இலங்கை மட்டக்களப்பு அமிர்தகளி என்ற இடத்தில் பிறந்து இந்தியாவின் பூனே திரைப்படக்கல்லூரியில் சினிமாவைக்கற்று தமிழ் சினிமாவிலும் தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஹிந்தி ஆகிய மொழிகளின் சினிமாவிலும் பணியாற்றியவர்.

இவர் தயாரித்த வீடு, சந்தியாராகம் போன்ற படங்கள் வர்த்தக சமரசங்கள் இல்லாமல் தயாரிக்கப்பட்ட சிறந்த கலைப் படைப்புக்களாகப் போற்றப்படுகின்றன. மூன்றாம் பிறை, அழியாத கோலங்கள், இரட்டைவால் குருவி, ராமன் அப்துல்லா போன்ற பல வெற்றிப் படங்களையும் தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



அண்மையில் திருமறைக் கலாமன்றத்தின் ஓவியக் கலை வட்டத்தின் ஏற்பாட்டில் ஓவிய ஆசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்களால் க.பொ.த சாதாரண தரம், க.பொ.த உயர்தரம் மற்றும் தரம் 10 இல் கல்வி பயிலும் மாணவர்களுக்கான முழு நாள் பயிற்சிப்பட்டறை ஒன்று இடம்பெற்றது இதில் பங்கு பற்றியமாணவர்களைக் காணலாம். (114)

# ஆயுர்வேதம்

## வயிற்று உப்புசம், மூச்சிரைப்பு தீர்வு என்ன?



முருங்கை என்றதுமே, ஆஹா, அது எனக்கு மிகவும் விருப்பமான உணவு என உங்களில் பலர் குறிப்பிடுவீர்கள். அந்தளவுக்கு அது தமிழர் வாழ்வில் இரண்டறக் கலந்த ஒரு தாவர உணவு. ஆனால் அது உணவு மட்டுமல்ல, மருந்தும்கூட என ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கிறார்கள். ஆங்கிலத்தில் "Drumstick" (மேளத்தடி) என அழைக்கப்படும் முருங்கையின் மேன்மை இப்பொழுது மேற்கத்தைய நாடுகளிலும் கொடிகட்டிப் பறக்க ஆரம்பித்துள்ளது.

அதிகமாக இது இலங்கை, இந்திய நாடுகளில் உணவாகப் பயன்படுத்தப்பட்டாலும், பல ஆசிய, ஆபிரிக்க, தென் அமெரிக்க நாடுகளின் மக்களும் முருங்கையை உணவாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த மரத்தின் காய்கள் மட்டுமின்றி, இலை, பூ, வேர், பட்டை என எல்லாமே பயன்படுத்தப்படுகின்றன. பொதுவாக தமிழர்கள் இதன் காயை உறைப்புக் கறியாகவும், பால் கறியாகவும், வேறு சில மரக்கறிகள், மீன் - கருவாடு என்பனவற்றுடன் கலந்தும் சமைத்து உண்பர். சாம்பார் வைத்தால் அதில் கட்டாயமாக முருங்கைக்காய் இருக்கும்.

இரும்புச் சத்து நிறைந்த இலையை எண்ணெயில் வறுத்து உண்பர். அத்துடன் கஞ்சி, ஒடியல் கூழ் என்பனவற்றில் போட்டு காய்ச்சியும் உண்பர். இதன் வேரும் பட்டையும் பிசினும் சில மருத்துவத் தேவைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. இலங்கையில் தமிழர் பகுதிகள் சிலவற்றில் பன்றி இறைச்சி சமைக்கும் போது, அதில் முருங்கைப் பட்டையையும் சேர்ப்பது வழமை.

மிகவும் வறட்சியான பகுதிகளிலும் தண்ணீர் பாய்ச்சாமலே செழித்து வளரக்கூடிய ஒரு மரம் முருங்கை. முன்னைய காலங்களில் ஏழை எளிய மக்களுக்கு செலவில்லாமல் கிடைத்த ஒரு உணவாக இது திகழ்ந்திருக்கிறது.

இதன் மருத்துவக் குணம் தமிழர்கள் நன்கறிந்த ஒன்று. பெண்கள் குழந்தை பிரசவித்தால், அவர்களுக்கு 31 நாட்கள் முடியும்வரை கொடுக்கும் 'பத்தியக்கறி'யில் முதன்மை வகிப்பது முருங்கைக்காய். அதுபோலவே, யாராவது காய்ச்சல் போன்ற நோய்களுக்கு உள்ளானால், அவர்களுக்குச் சோற்றுடன் கொடுக்கும் 'சரக்குத்தண்ணி'யிலும் முருங்கைக்காய் முக்கிய இடத்தை வகிக்கும்.

இப்பொழுது ஐரோப்பிய, வட அமெரிக்க நாடுகளிலும் முருங்கை மக்களிடையே பிரபல்யம் அடையத் தொடங்கியுள்ளது. இது பற்றி அங்கு பல ஆராய்ச்சிகளும் மேற்கொள்ளப்பட்டு, அதில உள்ள மருத்துவ தன்மைகள் மற்றும் செழிப்பான போசாக்கு என்பன குறித்துப் பல கட்டுரைகளும் வெளிவந்துள்ளன.

முருங்கை இலையில் கீரை, பால், வாழைப்பழம், கரட், தயிர் என்பனவற்றில் இருக்கும் இரும்புச்சத்து, கல்சியம், பொற்றாசியம், விற்றமின் ஏ, புரதம் என்பன பெருமளவு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. தோல் வியாதிகள், சுவாசம் சம்பந்தமான நோய்கள், ஜீரணக் கோளாறுகள் உட்படப் பல நோய்களுக்கு முருங்கை நிவாரணமளிக்கிறது எனக் கண்டறியப்பட்டுள்ளது.

இதன் காரணமாக இப்பொழுது ஐரோப்பாவிலும், வட அமெரிக்காவிலும் உள்ள சில நிறுவனங்கள் முருங்கை இலையை மாவாக அரைத்து Moringa Powder என்ற பெயரில் விற்பனை செய்ய ஆரம்பித்துள்ளன. இதற்கு மக்களிடையே ஆதரவு பெருகி வருகிறது.

முருங்கை பெரும்பாலும் தடிகளிலிருந்து உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால் முன்னைய காலங்களில் முற்றிய. முருங்கைக்காய்கள் வெடிக்கும்போது அதில் இருந்து வீழும் விதைகளிலிருந்து கன்றுகள் முளைத்து வளருவதும் உண்டு.

இலங்கையிலும் தமிழகத்திலும் சில குறிப்பிட்ட காலங்களிலேயே முருங்கை காய்ப்பது வழமை. மாரி மழை காலங்களில் முருங்கை காய்ப்பது அபூர்வம்.

ஆனால் இப்பொழுது வட அமெரிக்க நாடுகளில் வருடம் முழுவதும் முருங்கைக்காயைப் பெறக்கூடியதாக இருக்கின்றது. அவை பெரும்பாலும் பலவிதமான மாறுபட்ட கால நிலைகள் உள்ள கரீபியன் மற்றும் தென் அமெரிக்க நாடுகளிலிருந்து வருடம் முழுவதும் வருகின்றன. அதுமட்டுமின்றி தமிழர்கள் அதிகம் பயன்படுத்தும் கறிவேப்பிலை, வல்லாரை, பொன்னாங் கண்ணி, வாழைப்பழம், பலாப்பழம், மாம்பழம், மரக்கறிகள், கடலுணவுகள் என்பனவும் அந்த நாடுகளிலிருந்து வருடம் முழுவதும் வந்து கொண்டே இருக்கின்றன.

ஆனால் சிலருக்கு வேறு ஒருவகையான அச்சமும் முருங்கை குறித்து ஏற்பட்டுள்ளது. முருங்கைக்கு மேற்கு நாடுகளில் கிராக்கி ஏற்பட்டு வருவதால், தென்னாசியர்களின் பெருமைமிக்க மரங்களில ஒன்றான வேம்புக்கு அமெரிக்கர்கள் தன்னிச்சையாகக் காப்புரிமை கோரியது போல, முருங்கைக்கும் நடந்துவிடுமோ என்பது தான் அந்த அச்சம்.

- மருதையினார்

# அக்கரை கிராம மக்களின் தேவைகள் குறித்து ஆராய்வு



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை கோப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட அக்கரைப் பகுதி மக்கள் சந்தித்து தமது அடிப்படைத் தேவைகள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் மேற்படி சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது, குடிதண்ணீரை பெற்றுத் தருவதற்கான நடவடிக்கையினை முன்னெடுக்குமாறு கோரிக்கை விடுத்த போது விசேட நிதியொதுக்கீட்டின் கீழ் விரைவுபடுத்தி செயற்படுத்துமாறு துறைசார்ந்தோருக்கு அமைச்சர் தொலைபேசியூடாக பணிப்புரை வழங்கினார்.

அத்துடன், குறித்த பகுதியில் மலசலகூடங்களின் தேவைகள் தொடர்பில் ஏற்கனவே அமைச்சரவைக்கு தெரியப்படுத்தியுள்ள போதிலும் அதற்கான அங்கீகாரம் கிடைக்கப் பெற்றவுடன் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படுமென தெரிவித்த அமைச்சர காணிகள் இல்லாத மக்களுக்கு அப்பகுதியிலுள்ள பொதுக்காணிகளை பகிர்ந்த ளிப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

தொண்டமனாறு அக்கரை கடற்கரைப்பகுதியில் வான் அகழ்வு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் மற்றும் வடக்கின் வசந்தம் திட்டத்தின் ஊடாக மின்சார விநியோகத்தினைப் பெற்றுக் கொடுப்பதற்கான செயற்றிட்டங்களும் உரிய காலத்தில் துறைசார்ந்தோர் ஊடாக முன்னெடுக்கப்படும்.

இதனிடையே நீண்டகாலமாக புனரமைக்கப்படாதுள்ள வீதிகளை புனரமைத்து தர வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்த போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் மத்திய அரசின் கீழான வேலைத்திட்டங்களை நாம் முன்னெடுக்க முடியுமென்றும் வீதிப்புனரமைப்பு மாகாண சபையின் கீழ் உள்ளதால் அவர்களே அதனை செய்ய வேண்டுமெனவும் சுட்டிக்காட்டினார்.

# சிவப்பு நிறத்தில் கத்தரிக்காய்



இலங்கையில் வீட்டுத் தோட்டம் ஒன்றில், சிவப்பு நிறத்தில் அதிசயமாக கத்தரிக்காய் காய்த்துள்ளது. ஹட்டன் இன்வெரி தோட்டத்தைச் சேர்ந்த ஞானராஜ் என்பவரின் வீட்டுத்தோட்டத்தில் உள்ள கத்தரிச் செடியிலேயே இந்த அதிசய கத்தரிக்காய்கள் சிவப்பு நிறத்தில் காய்த்து தொங்குகின்றன.

# மன்னாரில் கடந்தவருடம் 128 குற்றச் செயல்கள் பதிவு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் கடந்த வருடம் 128 கடும் குற்றச்செயல்கள் இடம்பெற்ற நிலையில், 65 குற்றச்செயல்களுக்கான சந்தேக நபர்கள் மீது சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாக மன்னார் பொலிஸ் நிலைய தலைமையக பொறுப்பதிகாரி துஸார தலுவத்த தெரிவித்தார்.

கடத்தல், கொள்ளை, கொலை முயற்சி உள்ளிட்ட பல்வேறு குற்றச்செயல்கள் இடம்பெற்றன.

இதில் 95 குற்றச்செயல்களுக்கான சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்ட நிலையில், 65 குற்றச்செயல்களுக்கான சந்தேக நபர்கள் மீது சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

குற்றச்செயல்களுடன் தொடர்புடைய ஏனைய சந்தேக நபர்களை கைதுசெய்து சட்டத்தின் முன் நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் அவர் கூறினார்.

மேலும், கடந்த வருடம் மன்னார் மாவட்டத்தில் 188 கிலோ 560 கிராம் 367 மில்லிகிராம் கஞ்சாவையும் 03 கிராம் 360 மில்லிகிராம் ஹேரோயினையும் கைப்பற்றியதாகவும் இவற்றை வைத்திருந்த சந்தேக நபர்களை கைதுசெய்து சட்டத்தின் முன் நிறுத்தியதாகவும் அவர் கூறினார்.

# தொழுநோயை கட்டுப்படுத்த 5 மாவட்டங்களில் விசேட செயற்றிட்டம்

(கொழும்பு)

தொழுநோயை கட்டுப்படுத்துவதற்கான மாதிரி திட்டமொன்று 5 மாவட்டங்களில் நேற்று முதல் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, கம்பஹா, அம்பாறை, புத்தளம், ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்கள் தொழுநோயை கட்டுப்படுத்தும் திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மேல், கிழக்கு, தென் மற்றும் வடமேல் மாகாணங்களில் அதிகளவு தொழுநோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

2013 ஆம் ஆண்டு 2,434 நோயாளர்கள் பதிவாகியதுடன், 44 வீதமானவர்கள் மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள்.

கிழக்கு மாகாணத்தில் 14 வீதமும், 12 வீதமானவர்கள் தென் மாகாணத்திலும் பதிவாகியுள்ளனர். அத்துடன், 11 மாவட்டங்களில் அதிக தொழுநோயாளர்கள் பதிவாகியுள்ளனர். 9 வீதமானவர்கள் 5 வயதுக்குட்பட்ட சிறார்கள் எனவும் தொழுநோய் அறிகுறிகள் தெனபடும் பட்சத்தில் மருத்து வரை நாடி உரிய சிகிச்சை பெறுவதன் மூலம், தொழுநோயை கட்டுப்படுத்த முடியும் எனவும் தொழுநோய் ஒழிப்புத் திட்டத்தின் பணிப்பாளர் டாக்டர் நிலந்தி பெர்னாண்டோ தெரிவித்துள்ளனர்.

# அரசியல் மயமாக்கப்படும் வடபகுதி மீனவர் பிரச்சினை

## மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவு சங்க சமாசத்தலைவர்

(மன்னார்)

வடக்கு மீனவர்களின் பிரச்சினை அரசியல் மயப்படுத்தப்படுவதாகவும்இதனால் மீனவர்களின் வாழ்வாதாரமே மேலும் பாதிக்கப்படுவதாக மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் என்.எம்.ஆலம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வடமாகாணசபை உறுப்பினர் வைத்திய கலாநிதி சிவமோகனால் அண்மையில் அறிக்கையொன்று வெளியிடப்பட்டிருந்தது.

அந்த அறிக்கையில் இந்திய மீனவர்களால் எமது கடல் வளம் அழிக்கப்படவில்லை யெனறும் எமது தொப்புள்கொடி உறவுடன் வாழ்பவர்கள் அவ்வாறு நடக்கமாட்டார்களெனவும் மாறாக தென்பகுதி மீனவர்களும் வெளிநாட்டு மீனவர்களுமே எமது வளங்களை அழிக்கின்றன ரென்ற கருத்தை தெரிவித்தார்.

இதற்கு ஒரு படி மேலே மத்திய கடற்றொழில் அமைச்சர் கடந்த 24ஆம் திகதி வழங்கிய செய்தியில் இரு நாட்டு மீனவர்களின் உடன்பாட்டுடன் இப்பகுதியில் தொழில் புரியலாமென தெரிவித்திருந்தார்.

ஆனால், பேச்சுவார்த்தை ஆரம்பித்தவுடன் அமைச்சரால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில் எல்லை தாண்டிவரும் இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்படுவதுடன், அவர்களின் படகுகளும் பறிமுதல் செய்யப்படுமென தெரிவித்திருந்தார்.

தற்போது இவர்களின் இவ்வாறான இந்திய மக்கள் மீதும் எல்லை மீறும் மீனவர்கள் மீதும் ஏற்பட்டுள்ள திடீர் கரிசனை ஏன் என்பதுடன், இதன் உள்நோக்கம் அனைவருக்கும் தெரிகின்றது. இவர்கள் மீனவர்களை எந்தளவுக்குப் புரிந்து வைத்துள்ளனர் என்பது தற்போது தெரிகின்றது.

வடபகுதி மீனவர்கள் கடந்த காலங்களில் இந்திய மீனவர்களின் தொழில் முறை மற்றும் அவர்களின் அத்துமீறிய வருகையை எதிர்த்து உண்ணாவிரதம், பாதயாத்திரை ,அமைதி ஊர்வலம், ஆர்ப்பாட்டப் பேரணியென முன்னெடுத்ததை இவர்கள் பிழையென கருதுகின்றார்களா?

வடப்குதி மீனவர்களுக்காக இன்றுவரை இம்மாகாண சபையில் ஒரு தீர்மானமாவது நிறைவேற்றப்பட்டுள்ளதா? இவர்களின் பிரச்சினைகள் இச்சபையில் பேசப்பட்டுள்ளதா?

எனவே, வடபகுதி மீனவர்களின் உணர்வைக் கொச்சைப்படுத்தி அரசியல் செய்ய வேண்டாமென சம்பந்தப்பட்டவர்களை மீனவச் சங்கம் சார்பாகக் கேட்டுக் கொள்கின்றோம் என்றார்.

# ஊடகவியலாளர் சங்கம் வவுனியாவில் அங்குரார்ப்பணம்

வவுனியா தமிழ் ஊடகவியலாளர் சங்கம் கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

வவுனியா இந்திரன்ஸ் ஹோட்டலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் புதிய நிர்வாகிகள் தேர்வும் இடம்பெற்றதுடன் எதிர்காலக் செயற்பாடுகள் தொடர்பிலும் ஆராயப்பட்டிருந்தது.

இதன் நிமிர்த்தம் தலைவராக பொன்னையா மாணிக்கவாசகமும், செயலாளராக நவரத்தினம் கபில்நாத்தும், பொருளாளராக சிவபாதம் கஜேந்திரகுமாரும் தெரிவு செய்யப்பட்டதுடன் உப தலைவராக ஆறுமுகம் சுபாஸ்கரன், உப செயலாளராக கிருஸ்ணகோபால் வசந்தரூபன் நிர்வாக உறுப்பினர்களாக சுப்பிரமணியம் வரதகுமார், தெய்வேந்திரம் புரட்சிதாசன், பரராசசிங்கம் ரோன் கனிசியஸ், கோபாலகிருஸ்ணன் ரூபகாந், எஸ்.சிவபாதசுந்தரம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதுடன் இலங்கை தமிழ் ஊடகவியலாளர் சங்கத்தின் வவுனியா இணைப்பாளராக ஆறுமுகம் சுபாஸ்க்ரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.





கலாபூஷணம் விருதுபெற்ற கண எதிர் வீரசிங்கத்தை பாராட்டும் நிகழ்வு அண்மையில் தேவரையாளி இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும் விழா நாயகனுக்கு வாழ்த்துரை வழங்கப்படுவதையும் காணலாம். (48)



# க.பொ.த சா/த, உ/த மாணவர்களுக்கான விசேட ஆங்கில பயிற்சி

**Test - 01**

Read thd following text about a famous singer and complete the table given below. First one is done for you.

She was born in Washington, USA in 1885. He real Name was Ragamma Katter. Katterine was her pet name. It issaid to mean "helping person" She was a popular singer. She loved to sing and listen. Later, she sang for the elders and children in her place. She had three brothers and no sisters. In 1905, she went to India to sing for the poor people. Her most famous collections are "sing for others" and "happy wonders"... At last, she lived with poor people and enjoyed their natural life.

1. Real name Ragamma Katter
2. Pet name
3. Year of birth
4. Number of brothers & sisters
5. Loves
6. Titles of song collections

**Test - 02**

**Fill in the blanks using the words given below. The first one is done for you.**

**( to, by, about, with, of)**

On Fridays, Ravi and Ramu usually go (1) ------------------ the Nallur temple, Last Friday they went there (2) ---------------------------- a group (3) ------------------------ friends. They traveled (4) --------------------- car, They spent (5) -------------------- one hour there.

**Test - 03**

Write a short description about your friend, by answering the following questions. Write complete sentences. First one is done for you.

1. How does he / she spend his / her free time?
2. What sport is he / she good at?
3. What is his / her other interests?
4. How much time does he / she spend studying English?
5. Where does he / she live?
6. Where would he / she like to go for a holiday?
7. With whom would he / she like to go?
8. What does he / she want to do in the future?

1. He spends his free time watching television
2. ----------------------------------------
3. ----------------------------------------
4. ----------------------------------------
5. ----------------------------------------
6. ----------------------------------------
7. ----------------------------------------
8. ----------------------------------------

**Test -04**

Your English teacher took you to see one of the following.

1. Sigiriya 2. Dehiwela zoo 3. Kataragama
4. Nallur temple

Write a small description about it including the following.
1. how you went/
2. whom you went with
3. what you saw
4. what you did
5. how you felt

**Test - 05**

Write a letter to the General Manager, Electricity board, Jaffna. complaining aboute the irregularity of the power supply, which prevails in Jaffna Peninsula.

----------------------------------------
----------------------------------------
----------------------------------------
----------------------------------------
----------------------------------------
----------------------------------------
----------------------------------------
----------------------------------------
----------------------------------------

**Test - 06**

Describe a tour ; you have participated. write 150 words including the following facts.
1. Where and when you went
2. Who joined with you
3. How you went
4. What you enjoyed
5. What you saw on your way.
6. Places you visited and their importance
7. End of your tour

**Test - 07**

**Read the following description and then complete the table given below**

**social workers**

The sunday Radio programme on sports news will interview three persons this week They are doctor Mr.S. Nanthakumar Who is the director of the sports club in Gampaha District Miss Karthika Uthayan the sports officer of the Ministry of sports and Mr.R. shasitharan Who as the secretary of the colombo youth ciub

| NAME | JOB | PLACE OF WORK |
|---|---|---|
| Dr.S.Nanthakumar | (1)...................... | (2)............................... |
| (3)...................... | (4)...................... | Ministry of sports |
| Mr.R.Shasitharan | (5)...................... | (6).............................. |

**Test - 08**

**Write the number of the comment in the right box the first one is done for you**

A

a) Hello, could I speak to Mr. Raman please?
b) could you tell me the Way to the market?
c) congratulation.you are a lucky man
d) can you help me?
e) At want you for your help
f) Do you like to play net ball?
g) Is it a book shop?
h) What is the price of a liter of coconut oil?

B

1. yes, I like to play very much. ☐
2. Thank you ☐
3. Rs 125,00 olny ☐
4. Sorry, He is out at the moment. ☐
5. Sure, what do you want? ☐
6. yes, no doubt. ☐
7. It's ok. I welcome. ☐
8. Yes, go straight ahead and then turrgight ☐
9. At about 9.30 am. ☐

**Test - 09**

Read the following notice.
You are a student at Sumana Vidyalaya, You found the particular identity card nd it's now with you. Write a reply to Mr.K.Sutharsan. Include the following.

**Lost**

Did you see my school identity card? I have lost it, when I returned to my class room to continue my Tamil lesson. My details are written on it. Please return it to me.

K.Sakila
Grade - 11
K/ Sumana Vidyalaya.

Where you found
When you Got
What you did
Ask sakila to meet you
Give a time place to meet

# பெரியார்கள் பற்றிய தகவல்களுக்கான கல்வி முரசு தரும் விசேட தொடர்

## சுவாமி விபுலானந்த அடிகள்



*(திங்கள் வெளியான பெரியார்களின் தொடர்ச்சி..)*

இளமை தொட்டு தாயாரோடு கண்ணகையம்மன் கோயிலுக்குச் சென்று வணங்கும் பொழுது திருவிழாக் காலங்களில அங்கு படிக்கப்படும் சிலப்பதிகாரப் பாடல்களில் மனதைப் பறி கொடுத்தார் இக்காலத்தில் தாயார் சிவபதமடைந்தார் அன்னையின் மறைவின் சோகம் அவரைத் தாக்கியதால் கல்முனை வெஸ்லி கல்லூரியிலேயே ஆசிரியராகக் கடமைபுரியத்தொடங்கினார் அதனால் தினமும் வீட்டுக்குச் சென்று தந்தை சகோதரிகளுடன் வாழ்ந்து வந்தார் அத்துடன் சிலப்பதிகாரத்தை நன்கு கற்று அதில் உரை காணப்படாத பகுதிகளுக்கு உரை காணும் முயற்சியிலும் ஈடுபட்டார் அத்தோடு மதுரைத் தமிழ்ச் சங்கப்பண்டிதர் பரீட்சையில் முதன்மைத் தேர்ச்சியடைந்து பண்டிதர் பட்டமும் பெற்றார் 1915 ஆம் ஆண்டு கொழும்பு அரசினர் பொறியியற் கல்லூரியில் சேர்ந்து விஞ்ஞானம் பயின்று 1916ஆம் ஆண்டு விஞ்ஞானத்தில் டிப்ளோமா பட்டத்தையும் பெற்றார் இவர் யாழ்ப்பாணம் சென்று சம்பத்தரிசியார் கல்லூரியில் ஆசிரியரானார் பின் வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றினார் மேலும் பிறர் உதவியின்றித் தாமாகவே முயன்று படித்து இலண்டன் பல்கலைக்கழகம் நடாத்திய பி.எஸ்.ஸி தேர்வில் வெற்றி பெற்றார் எத்தகைய பணிகள் இருந்தாலும் இரவில் இரண்டு மணித்தியாலயங்கள் படிப்பது என்ற நியதியைக் கைக்கொண்டு அதன்படியே ஒழுகியும் வந்தார் 1920ஆம் ஆண்டு மானிப்பாய் இந்துக்கல்லூரியின் அதிபர் பதவியை ஏற்றார் அங்கு சுன்னாகம் குமாரசுவாமிப்புலவரிடம் தமது தமிழ் அறிவை விருத்திசெய்தார் ஆரிய திராவிட பாஷா விருத்திச்சங்கம் என்றொரு சங்கத்தை அமைத்தார்

1922 ஆம் ஆண்டு துறவு வாழ்வில் ஆர்வம் ஏற்பட்டு சென்னை மயிலாப்பூரில் இருந்த இராமகிருஷ்ண மிஷனில் சேர்ந்தார் இராமகிருஷ்ண மடத்துத் தலைவர்சுவாமி சிவானந்தரிடம் பிரமச்சாரி அபிஷேகம் பெற்று பிரபோத சைதன்யர் என்னும் தீட்சாநாமமும் பெற்றார் அங்கு இராமகிருஷ்ண விஜயம என்ற தமிழ்ச்சஞ்சிகைக்கும் வேதாந்த கேசரி என்ற ஆங்கிலசஞ்சிகைக்கும் ஆசிரியராக இருந்து பல அரிய கட்டுரைகள் எழுதினார். அத்தோடு செந்தமிழ் என்னும் பத்திரிகைக்கும் கட்டுரைகள் எழுதி வெளியிட்டார். யாழ். நூல் ஆராய்ச்சி சம்பந்தமாகவும் ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதினார் ஆச்சிரம வாழ்க்கை முடிந்து சுவாமி விபுலானந்தர் என்னும் குருப்பட்டம் பெற்றார் குருவாக அபிஷேகம் செய்தவர் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரின் நேரச்சீடர்களில் ஒருவரான சுவாமி சிவானந்தராவர் கல்லடி உப்போடையில் தாம் அமைத்த ஆங்கில பாடசாலைக்கு சிவானந்த வித்தியாலயம் என நாமம் சூட்டியது இவரது ஞாபகார்த்தமாகவே இவர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கும் முதல் பேராசிரியராவார் இலங்கை பல்கலைக்கழகத்திற்கும் சுவாமி விபுலானந்தரே முத்தமிழ் பேராசிரியராக இருந்தார் இந்தப் பல்கலைக்கழக நூல் நிலையங்கள் சுவாமி அவர்களின் யாழ் நூலாராய்ச்சிக்குப் பெரிதும் உதவின

1924ஆம் ஆண்டு மதுரைத் தமிழ்ச்சங்க ஆண்டு விழாவில் நாடகத்தமிழ் என்ற உரையினைச் சங்கச் செயலாளராக இருந்த டி.சி.சீனிவாஸ ஐயங்காரின் வேண்டுகோளுக்கிணங்க மதங்கசூளாமணி என்ற நூலாக எழுதினார்

சுவாமியவர்கள் இராமகிருஷ்ண மிஷன் பாடசாலைகளுக்கு முகாமையாளராகவும் திருகோணமலை இந்துக் கல்லூரிக்கு அதிபராகவும் கடமை புரிந்த காலத்தில் காரைதீவில் சாரதாவித்தியாலயம் என்ற பெண்கள் பாடசாலையையும் கல்லடி உப்போடையில் சிவானந்த வித்தியாலயம் என்ற ஆண்கள் பாடசாலையையும் அமைத்தார் அத்தோடு அநாதை மாணவருக்கு ஆங்கிலம் கற்பிக்கும் ஒழுங்கையும் ஏற்படுத்தினார் தலை நகரான கொழும்பில் தமிழ்ப்பள்ளி கூடம் இல்லாத குறையைப் போக்க விவேகானந்தா வித்தியாலயத்தைத் தொடங்கினார்

கல்வித்துறையில் அனைவரும் தமிழ் ஆங்கிலம் சிங்களம் ஆகிய மூன்று மொழிகளையும் கற்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து சிவானந்த வித்தியாலயத்தில் மும்மொழிகளையும் மாணவர்கள் பயில ஒழுங்கு செய்த பெருமை சுவாமிகளுக்கே உரியது

1937 ஆம் ஆண்டு. இமய மலையைக் காணச்சென்று மலைச்சாரலில் உள்ள மாயாவதி ஆச்சிரமத்தில் தங்கினார் அங்கு சிலகாலம் பிரபுத்தபாரதா என்ற ஆங்கிலசஞ்சிகைக்கு ஆசிரியராக இருந்து பல கட்டுரைகள் எழுதி வெளியிட்டார்

யாழ் நூல் ஆராய்ச்சிக்காக தமிழ்நாட்டில் பல பகுதிகளுக்கும் சென்று 15 ஆண்டுகள் ஆராய்ந்து கரந்தை தமிழ்ச்சங்க ஆதரவில் திருக்கொள்ளம்புதூர்த் திருக்கோயிலில் 1947ஆம் ஆண்டு ஆனித்திங்கள் யாழ்நூல் அரங்கேற்றம் வெகு விமரிசையாக நடந்தேறியது

பாரிசவாதத்தினால் தாம் பீடிக்கப்பட்டிருக்கும் தமது 45வருடக்குறிக்கோள் நிறைவேறுவதையிட்டு சுவாமிகள் ஆனந்தக்கண்ணீர் சொரிந்தார் யாழ்நூலை இயற்றுவதற்காகவே சுவாமி விபுலானந்தர் அவதாரம் எடுத்தார் என்று சொல்லுமளவிற்கு அவரின் வாழ்க்கை யாழ்நூல் அரங்கேறிய அடுத்த மாதமே முடிவுற்றது 1947ஆம் ஆண்டு ஆடி மாதம் 17 ஆம் திகதி அவர் விண்ணுலகம் அடைந்தார்

சிவானந்த வித்தியாலயம் முன்றலிலுள்ள மரத்தின் கீழ் அமைக்கப்பட்ட கல்லறையில் சுவாமி அவர்களுடைய பூதவுடல் அடக்கம் செய்யப்பட்டது சுவாமி அவர்கள் அடக்கம் செய்யப்பட்ட கல்லறை மேல் சுவாமி அவர்களால் பாடப்பட்ட

வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலர் எதுவோ
வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது

என்ற கவிதா வரிகள் பொறிக்கப்பட்டுள்ளன

சுவாமி விபுலானந்தரின் கல்விப்பணியும் அவர் விட்டுச்சென்ற எழுத்துச் செல்வங்களும் அவரை நமக்கு நினைவுபடுத்திக் கொண்டே இருக்கும் இயல் இசை நாடகம் என்ற முத்தமிழ் இருக்கும் வரை முத்தமிழ் வித்தகரான சுவாமி விபுலானந்தரின் திருநாமமும் வாழ்ந்து கொண்டேயிருக்கும்.

## பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை



ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுகநாவலரின் பணிகளைத் தொடர அவரது ஞான பரம்பரையில் தோன்றியவரே பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் நாவலர் பாடசாலையில் ஒருசேரக் கற்று வந்த இருவரில் ஒருவர் பண்டிதமணி மற்றவர் புலவர்மணி

நாவலரின் நோக்கத்தை உள்ளபடி ஆராய்ந்து தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு உணர்த்திய பெருமை பண்டிதமணியையே சாரும்

யாழ்.குடா நாட்டிலே தென்மராட்சிப் பகுதியில் மட்டுவில் கிராமத்தில் 1899ஆம் ஆண்டு ஆனி மாதம் 27 ஆம் திகதி சின்னத்தம்பி வள்ளியம்மை தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தார் தாயாரின் ஊரான தனங்கிளப்பு காரைத்தூ விநாயகர் குல தெய்வமான படியால் இவருக்கு கணபதிப் பிள்ளை என்ற பெயர் சூட்டப்பட்டது தமது 3 ஆவது வயதில் தாயாரை இழந்த இவர் தந்தையுடன் மட்டுவிலில் வாழ்ந்து வந்தார்.

மட்டுவில் அமெரிக்கமிஷன் பாடசாலையில் 5ஆம் வகுப்பு வரை ஆரம்பக் கல்வியைக் கற்றார் தந்தையார் மிகுந்த அனுட்டானசீலர் தெய்வநம்பிக்கை புராணபடணம் தமிழ இலக்கண இலக்கிய அறிவு நிரம்பப்பெற்ற மட்டுவில் க வேற்பிள்ளையிடம் பாடம் கற்று வந்தபொழுது நாவலர்காவியப் பாடசாலையைப் பற்றிக் கேள்விப்பட்டு அங்கு வந்து தமது 17 ஆவது வயதில பாடம் கற்கத்தொடங்கினார் உடை உணவு கல்வி மூன்றும் இலவசமாகக் கொடுத்து உதவும் பாடசாலை அது வண்ணார்பண்ணை காவியப் பாடசாலை பெரிதும் அவரை விருப்பத்தோடு கல்வி கற்க வைத்தது சுன்னாகம் அ.குமாரசுவாமிப் புலவர் த.கைலாசபிள்ளை வித்துவரன் ந.சுப்பையாப்பிள்ளை ஆகியோரிடம் இலக்கண இலக்கியங்களைக் குருசீடமுறையில் கற்றார் பழமையில் பற்று வைக்கும் பணிகளை இவர் காவியப் பாடசாலையில் கற்றுக்கொண்டார் மதுரைத் தமிழ்ச் சங்கப்பண்டிதர் பரீட்சையில் சித்திபெற்றார்

திருநெல்வேலி சிவன்கோயிலுக்கு அருகில் தோட்டம் ஒன்று உண்டு அவ்விடத்தில கல்வியில் துறைபோய பலரும் ஒன்றுகூடி நாட்டு நடப்புக்கள் பற்றி அலசுவார்கள் ஆங்கில இலக்கியம் விஞ்ஞானம் கணிதம் போன்ற துறைகளில் தங்கள் கருத்துக்களை எடுத்துக்கூறி விவாதிப்பார்கள் அந்த இடத்திற்கு கணபதிப்பிள்ளை அவர்களும் போவார்கள் பல அறிஞர்களின் கூட்டுறவினா[illegible] ஆங்கில இலக்கியங்களில் அவருக்கு நாட்டம் ஏற்பட்டது. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆசிரியராக விளங்கிய கலைப்புலவர் நவரட்ணம் என்பவர் 1931ம் ஆண்டு திருநெல்வேலியில் கலாநிலையம் ஒன்றினை ஆரம்பித்து வைத்தார் அதில் உறுப்பினராக இவர் சேர்ந்து கொண்டார் பண்டிதமணி அவர்கள் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்சியை முடித்துக் கொண்டு திருநெல்வேலி சைவ ஆசிரியர் கலாசாலையில் 1929 ஆம் ஆண்டு தமிழ விரிவுரையாளராக இருந்தனால் கலாநிலையத்திற்கு அடிக்கடி வந்து பல தொண்டுகள் புரியத் தொடங்கினார் மக்களின் பார்வைக்காக இலக்கண இலக்கிய புத்தகங்களையும் தினசரிப் பத்திரிகைகளையும் தருவித்து எந்நேரமும் கலாநிலையம் மக்களால் சூழப்பட்ட ஒரு இடமாகத் திகழ வைத்தார். விசேஷ பண்டிகை நாட்களில் இடம்பெறும். கலைநிகழ்ச்சிகளில் இலக்கிய சொற்பொழிவுகள் நிகழ்த்துவார் இந்தியாவிலிருந்தும் பல அறிஞர்களைக் கலா நிலையத்திற்கு அழைப்பித்து சமயச் சொற்பொழிவுகள் நடகக ஒழுங்குகள் செய்தார் அக்காலத்தில் பல கூட்டங்களுக்குத் தலைமை தாங்கி மக்களைக் கவரக்கூடியதாக நகைச்சுவை ததும்ப சொற்பொழிவுகள் ஆற்றி வந்தார்

பண்டிதமணி அவர்கள் ஆசிரிய கலாசாலையில் கற்பிக்கும் முறையே தனிரகமாகும் நகைச்சுவை பொருந்த இலக்கண இலக்கியங்களை மாணவர்களுடைய மனதில் எளிதாகப் புரியும் படி விரிவுரையாற்றுவார் புதுப்புது உத்திகளைக் கையாண்டு அவர் ஆற்றும் விரிவுரைகளை மாணவர்கள் மிகுந்த உற்சாகத்தோடு விரும்பிக் கற்றார்கள்

. இவரது நவபாரதம் என்ற உருவகக்கதை 1938ஆம் ஆண்டு ஈழகேசரி ஆண்டு மலரில் வெளிவந்துள்ளதை அக்கால மாணவர்கள் தேடித்தேடிப் படித்தார்கள் 30 வருடங்களாக சைவாசிரியப் பணியைத் தொடர்ந்து செய்தார் ஆசிரியர் பயிற்சி பெற்ற ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு சைவமும் தமிழ் இலக்கண இலக்கியமும் கற்பித்து அவர்களின் அன்பிற்குப் பாத்திரமானார் இம்மாணவர்கள் இன்று பெரும் புலவர்களாக விளங்கி சைவத்தமிழ் பண்பாட்டினைப் பரப்பும் தூதுவாகளாக நாட்டின் பல பாகங்களிலும் சேவை புரிகிறார்கள் தற்பெருமையே சிறிதும் இல்லாத இவரது சேவையைப் பாராட்டியவர் சைவாசிரிய கலாசாலைப் போஷகர் இந்து போர்ட்சு இராசரத்தினம் அவர்கள்

பணியும் அடக்கமும் மிகுந்த பண்டிதமணி அவர்கள் சிறந்த பேச்சாளர் அத்தோடு சிறந்த எழுத்தாளர் இவர் வெகுவாக இரசித்துப் படிப்பது கமபராமாயண நூலாகும் தமது இலக்கிய ரசனையைக் கம்பராமயணக் காட்சிகள் என்னும் தலைப்பில் கட்டுரைகளாக வெளிப்படுத்தியுள்ளார் இவரது படைப்புக்கள் மாணவர்களின் உயர்தர வகுப்புப் பாடங்களில் சேர்க்கப்பட்டுள்ளன கம்பன் ஒரு வம்பன் அவையடக்கம் போன்றவை க பொ த சாதாரணதர மாணவர்களின் பாட நூலில் சேர்க்கப்பட்டுள்ளன சேக்கிழாரின் பெரிய புராணத்தையும் ஆர்வத்தோடு படிப்பார் இவர் எழுதி வெளியிட்ட கந்தபுராண தக்ஷண காண்ட உரை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் யானை மேல் வைத்து ஊர்வலமாக எடுத்துச்சென்ற சிறப்புப்பெற்றது உப அதிபர் பொ கைலாசபதியின் தொடர்பினால் சைவசித்தாந்தத்திலும இவர் ஈடுபாடு உடையவராக விளங்கினார் சைவசமயம் தமிழிலக்கியம மெய்யியல் தமிழர் பண்பாடு ஆகிய துறைகளில் இவர் பேசிய பேச்சுக்களும் எழுதிய கட்டுரைகளும் தொகுக்கப்பட்டு 23நூல்களாக வெளியிடப் பட்டுள்ளன கந்தபுராண கலாசாரம் இன்றும் சைவமக்களால் போற்றப்பட்டு வருவதற்குப் பண்டிதமணி அவர்களே அடிகோலியவராவார்.

1978 ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழகம் பண்டிதமணிக்கு இலக்கிய கலாநிதி பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது. யாழ்ப்பாணத்து மக்களை மனிதர்களாக வாழச்செய்வது புராணபடனமாகும் கந்தபுராண கலாசாரம்தான் அந்நிய நாட்டவரின் ஆசை வார்த்தையில் மயங்காது மக்களைக் காத்து வந்தது

பண்டிமணியின கட்டுரைகள் கவிதைகள் சமயப்பேச்சுக்கள் சித்தாந்தத் தத்துவங்கள் என்பவற்றை நூல் வடிவில் வெளிக்கொணர முயற்சி எடுப்பவர் அணுக்கத் தொண்டராகிய அ.பஞ்சாட்சரம் அவர்கள் பண்டிமணியின் பன்முகச்சேவையை பல்கலைக்கழக மாணவர்கள் ஆய்வு செய்கின்றனர் தமிழ் சைவம் இரண்டையும் இரு கண்களாகப்போற்றிய பண்டிதமணி அவர்கள் 86 ஆண்டுகள் நைட்டிகப் பிரமசச்சாரியாக வாழ்ந்து 1986 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 13ஆம் திகதி இறைவனடி சேர்ந்தார் அவரது பூதவுடல் திருநெல்வேலி கலாநிலையத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அவரைப் பற்றிய இரங்கற் சொற்பொழிவுகள் ஆற்றப்பட்டு திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது சைவமும் தமிழும் தழைக்க பல தொண்டுகள் புரிந்த பண்டிமணி அவர்களின் நூற்றாண்டு விழா 1999ஆம் ஆண்டு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. (முற்றும்)

# மக்களின் அவலமும் பிரச்சினையுமே கூட்டமைப்பின் அரசியல் மூலதனம்

## சந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு



இன்று தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என தங்களை கூறி கொள்பவர்களின் அரசியல் மூலதனமே மக்களின் அவலமும் பிரச்சினையும்தான் எனவே அவர்கள் அதனை தீர்ப்பதற்கு பதிலாக மேலும் உருவாக்கவே முயற்சிப்பார்கள் என ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை பளை ஊர்வணிகன் பற்று மற்றும் கோவில்வயல் பிரதேசங்களில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு நிகழ்வுகளின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

தமிழ் மக்கள் தொடர்ந்தும் ஏதோவொரு பிரச்சினை அல்லது அவலத்தில் இருக்க வேண்டும் அதுதான் அவர்களின் அரசியல் மூலதனம் அதை வைத்துதான் அவர்களால் பேசவும் செயற்படவும் முடியும்.

இவர்கள் தேர்தல் காலங்ளை தவிர மக்களை தேடிச்செல்வதில்லை அரிதாக சென்றாலும் அங்கு மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு பதிலாக ஏதோ ஒரு பிரச்சினையை ஏற்படுத்திவிட்டு வந்துவிடுவார்கள். பத்திரிகைகளில் அவர்களது செய்திகளை பார்த்தால் அது நன்றாகவே புரியும் வீதி இல்லை, மின்சாரம் இல்லை, வீட்டுத்திட்டம் இல்லை, ஆசிரியர்கள் இல்லை,மக்களின் அவலங்கள் தீர்க்கப்படவில்லை என்றுதான் செய்திகளை வெளியிடுவார்களே தவிர எங்களை போன்று மக்களின் வீதி பிரச்சினைககு தீரவு, மின்சார பிரச்சினைக்குத் தீர்வு, பாடசாலைகளின் பற்றாக்குறைகள் தீர்த்துவைக்கப்பட்டது, என ஒரு காலமும் அவர்களின் செய்திகள் வருவதில்லை அதனை அவர்கள் விரும்பு வதுமில்லை. நாங்கள் மக்களின் பிரச்சினைகளை தீர்த்து வைப்பவர்கள். அவர்கள் மக்களிடம் பிரச்சினைகளை உருவாக்குகின்றவர்கள்.

எவ்வாறு மக்களின் அபிவிருத்தி பிரச்சினைகளுக்கு எம்மால் கடந்த காலங்களில் தீர்வுகள் காணப்பட்டதோ அதேபோன்றே அரசியல் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியும் அதற்கான அணுகுமுறைகள் எங்களிடம் உண்டு ஒரே இரவில் எல்லாவற்றையும் சாதித்துவிட முடியாது காலத்திற்கு ஏற்றவகையில் அரசியல் ரீதியிலான விவேகமான அணுகுமுறைகள் பின்பற்றபடல் வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

இம் மக்கள் சந்திப்பில் ஈ.பி.டி.பியின் வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன், பளை பிரதேச சபை உறுப்பினர் அன்ரன் அன்பழகன், சமூக சேவையாளர் தர்மலிங்கம், கோயில் வயல் கிராம அபிவிருத்தி சங்கத்தலைவர் சந்திரலிங்கம், கமக்கார அமைப்பு தலைவர் கைலாயபிள்ளை, ஊர்வணிகன் பற்று கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் கிருஸ்னண் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# நிவாரண விநியோகம்

(வரணி)

வரணிப்பிரதேசத்தில் நலிவுற்ற மற்றும் விதவைகளுக்கான நிவாரணவிநியோகம் தற்போது வழங்கப்பட்டு வருகிறது.

பயனாளிகள் வரணிச் சந்திக் கருகாமையில் உள்ள E/9 கிளையில் உரிய நிவாரணச் சிட்டையை சமர்ப்பித்து பொருட்களை பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (150)

# நெல் கொள்வனவு

(வரணி)

தென்மராட்சி கிழக்கு பலநோக்கு கூட்டுறவுச்சங்க தலைமைப்பணிமனையினால் இந்த ஆண்டு விவசாயிகளிடமிருந்து நெல் கொள்வனவு செய்யப்படுகிறது.

நெல்லை விற்பனை செய்ய விரும்பும் விவசாயிகள் சங்க தலைமைப்பணிமனையுடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (150)

# சனசமூக நிலையத்தின் புதிய நிர்வாகம் தெரிவு

மீசாலை மேற்கு மலைமகள் சனசமூக நிலைய வருடாந்தப் பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் புதிய வருடத்துக்கான நிர்வாக சபைத்தலைவராக கு.பிரதீபன், செயலாளராக எஸ்.சர்மிலன், பொருளாளராக விவேகானந்தன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதுடன் பெண்கள் உட்பட 9 நிர்வாக சபை உத்தியோகத்தர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

இதேவேளை இக்கட்டடத்தில் இச் சனசமூகநிலையக் கட்டடம் பாதி முடிவடைந்த நிலையில் உள்ளதாகவும் மின்சார வசதி இல்லாமல் இருப்பதாகவும் நகரசபை ஊடாக அதனைப்பெற்றுத் தருமாறும் இக் கூட்டத்திற்கு சமூகமளித்திருந்த நகரசபை உறுப்பினர் அ.பாலமயூரனிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

பெண்களைக் கூடுதலாகக் கொண்ட இச்சனசமூக நிலையத்தில் பெண்கள் உடற்பயிற்சியை மேற்கொள்வதற்கு மாலை 5 மணிக்கு முன்பாக நேர0ம் ஒதுக்குவதெனவும் அதன் பின் ஆண்கள் உடற்பயிற்சியில் ஈடுபடுவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

எனவே மின்சார வசதி அவசியம் என்பதனால் நாடாளுமன்ற உறுப்பினர்க்ளின் நிதியுதவியுடன் இதற்கான வசதிகள் செய்து தரப்படும் என பாலமயூரனால் உறுதியளிக்கப்பட்டது. (11)

# கணனிகள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

தென்புலோலி புற்றளை சனசமூக நிலையமும் இளைஞர் கழகமும் இணைந்து பாடசாலை மற்றும் முன்பள்ளிக்கு இரண்டு கணனிகளை அன்பளிப்புச் செய்துள்ளது. சனசமூக நிலையம் மற்றும் இளைஞர் கழக செயலாளர் ரீ.பாலகிட்ணன் புற்றளை மகாவித்தியாலயத்திற்கான கணனியை அதிபர் ஏ.சிவநாதனிடமும் முன்பள்ளிக்கான கணணித்தொகுதியை தலைவர் எஸ்.வாகீசன் முன்பள்ளிப் பொறுப்பாசிரியை திருமதி எஸ்.பத்மலோஜினியிடம் கையளித்துள்ளனர்.

மாணவர்களின் கற்றல் செயற்பாட்டிற்கு கணணிகள் பயனுடையதாக அமைவதாக முன்பள்ளி மற்றும் பாடசாலை சமூகத்தினர் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்

# அடிப்படை வசதிகளை வழங்குமாறு சிறாட்டிக்குள மக்கள் கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள சிறாட்டிக்குள கிராம மக்கள் அடிப்படை வசதிகள் எதுவும் அற்ற நிலையில் வாழ்வாதார ரீதியாக பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கி வருவதாக இக்கிராம மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இம் மாவட்டத்தில் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள இக்கிராமத்தில் தற்போது 53 குடும்பங்கள் வாழ்ந்து வரும் நிலையில் இக்கிராமத்திற்கென போக்குவரத்து, வீதிப் புனரைமைப்பு, கற்றல் செயற்பாடுகள், வீட்டுத்திட்டம் மற்றும் மின்சார வசதிகள் எதுவுமற்ற நிலையில் மக்கள் வாழ்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக இக்கிராமத்தில் 30 குடும்பங்களுக்கு இந்திய வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டுள்ள நிலையில் ஏனைய 23 குடும்பங்களும் இருப்பிட வசதிகள் இன்றி குடிசைகளில் காலத்தை கழிப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

மேலும் இக்கிராமத்திற்கென போக்குவரத்து வசதிகளும் இல்லாமையால் மக்கள் 13 கிலோ மீற்றர் தூரத்திற்கு நடந்தும் வேறு வாகனங்களிலும் செல்லவேண்டிய நிலை காணப்படுவதாகவும் அத்துடன் கற்றல் செயற்பாடுகளுக்காக இக்கிராம மாணவர்கள் கஷ்டங்களை அனுப்பவிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் மின்சார வசதிகளும் அறவே இக்கிராமத்துக்கு இல்லை எனவும் தமக்கு எப்போது மின்சாரம் கிடைக்கும் என எதிர்பார்ப்புடன் இருப்பதாகவும் தெரிவிக்கும் மக்கள் இக்கிராமமக்களின் தேவைகளை கருத்திற்கொண்டு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தருமாறு உரியவர்களை கேட்டுக் கொள்கின்றனர்.

# மணவாளக்கோலம்

வரணி கும்பிட்டான்புலம் கற்பகப் பிள்ளையார் ஆலய மணவாளக்கோல சங்காபிஷேகம் எதிர்வரும் 20 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது இவ் உற்சவத்தில் காலை 9 மணிக்கு விநாய்கர் வழிபாடு, யாகபூசை, சங்குபூசை திரவியஅபிஷேகம் சங்காபிஷேகம் அன்னதானம் என்பன இடம்பெறவுள்ளது.

மேலும் கும்பாபிஷேக தினத்தில் விநாயகப் பெருமானுக்கு ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் 1008 சங்காபிஷேகம் மணவாளக் கோலத்திருவிழாவும் இடம்பெறவுள்ளது. மாலை 6.30 மணிக்கு விநாயகர், முருகன், வள்ளி, தெய்வானை சமேதராய் வீதி வலம் வரும் காட்சியும் இடம்பெறவுள்ளது. (150)



பூநகரி பிரதேச செயலர் பிரிவின் அரச ஓய்வுதியர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட பூநகரி பிரதேச செயலர் சி.சத்தியசீலன் உரையாற்றுவதையும், கூட்டத்தில் கலந்துகொண்ட அரசஓய்வூதியர்களையும் காணலாம். (112)

# மக்களைப் பாதுகாப்பதற்காக ரஷ்ய படையினருடன் பேச்சு

## உக்ரைன் ஜனாதிபதி அழைப்பு



உக்ரைனின் வெளியேற்றப் பட்ட ஜனாதிபதி விக்டர் யனுகோவிச் எல்லைப் பகுதியிலுள்ள மக்களைப் பாதுகாக்கும் பொருட்டு, ரஷ்ய படையினருக்கு அழைப்பு விடுத்ததாக ஐ.நா.விற்கான மொஸ்கோ பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுக்கு, யனுகோவிச் இரண்டு தினங்களுக்கு முன்னர் எழுத்து மூலமாக அழைப்பை விடுத்திருந்ததாக ஐ.நா. பாதுகாப்பு பேரவையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கிரிமியாவிலுள்ள உக்ரைன் படையினர் சரணடைவதற்கு அல்லது அவர்கள் மீது தாக்குதல் நடாத்துவதற்கு கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை வரையில், ரஷ்ய இராணுவத்தினர் கால அவகாசம் வழங்கியுள்ளனர்.

இந்தத் தகவலை உக்ரைன் பாதுகாப்புப் பிரிவினர் உறுதிப் படுத்தியுள்ளனர்.

ரஷ்யாவின் கறுப்புப் படையணியின் தலைவர் கிரிமியா மீது தாக்குதல்களை ஆரம்பிப்பதற்கு கால அவகாசம் வழங்கியுள்ளதுடன், அதனை மீறும் பட்சத்தில் தாக்குதல் நடாத்தப்படும் எனவும் அறிவித்துள்ளார்.

அத்துடன் இரண்டு போர்க் கப்பல்களையும் சரணடையுமாறும் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

ரஷ்யாவின் படை நகர்வுகளுக்கு சர்வதேச ரீதியில் எதிர்பலைகள் எழுந்துள்ள. போதிலும், மக்களைப் பாதுகாபபதற்காகவே இதனை முன்னெடுப்பதாக மொஸ்கோ குறிப்பிட்டுள்ளது.

கிரிமியாவின் சில பகுதிகள் தற்போது ரஷ்ய இராணுவத்தினரின் முழுமையாக கட்டுப்பாட்டின் கீழ்கொண்டுவரப் பட்டுள்ளன.

உக்ரைனின் பாரிய இரண்டு இராணுவத் தளங்கள் முழுமையாக ரஷ்யாவின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதுடன், ரஷ்ய படையினர் பாதுகாப்பு நடவடிக்கைகயில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

வெளிப்பகுதிகளில் இருந்து ரஷ்யாவிற்குள் பிரவேசிக்கும் அனைத்து பகுதிகளும் மூடப்பட்டுள்ளதுடன், ஆயிரக்கணக்கான ரஷ்ய படையினர் விமான நிலையம், ரயில் நிலையம் உள்ளிட்ட பகுதிகளில் குவிக்கப்பட்டுள்ளனர்.

# சினிமாவுக்கு முழுக்கு நடிகை ரம்யா அறிவிப்பு



சினிமாப் படங்களில் நடிக்கப் போவதில்லை என்று காங்கிரஸ் எம்.பி ரம்யா அதிரடியாக அறிவிப்பு விடுத்துள்ளார். முன்னணி நடிகை ரம்யா சமீபத்தில் அரசியலில் களம் இறங்கினார். அவர் மண்டியா தொகுதி காங்கிரஸ் எம்.பி.யாக இருந்து வருகிறார்.

அவருக்கு வருகிற நாடாளுமன்ற தேர்தலில் அதே தொகுதியில் போட்டியிட வாய்ப்பு கிடைகக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில், தீவிர அரசியலில் களம் இறங்க வசதியாக, சினிமாப் படங்களில் நடிக்க போவதில்லை என்று ரம்யா அறிவித்து இருக்கிறார்.

பெங்களூரில் நிருபர்களிடம் பேசிய ரம்யா சினிமாவுக்கு குட்பை சொல்வதாக தெரிவித்தார். மேலும் ஆர்யன் தான் எனது கடைசி படம். அரசியலில் இருந்து கொண்டு சினிமாவில் நடிக்க இயலவில்லை. எனது தொகுதியில் வளர்ச்சிப் பணிகளை செய்து வருகி றேன். இதனால் சினிமாவில் நடிப்பதற்கு கஷ்டமாகவுள்ளது. ஒருவேளை வயதான பிறகு மீண்டும் சினிமாவுக்கு வரலாம். நடிகர் சிவராஜ்குமாரின் தங்கையாக நடிக்கலாம். ஆனால், கதாநாயகி யாக நடிக்க ஒப்புக்கொள்ளமாட்டேன் என்றும் எனது அரசியல் வாழ்க்கைக்கு ஆதரவு அளிக்கும்படி இரசிகர்களைக் கேட்டுக் கொள்கிறேன் எனவும் கூறியுள்ளார்.

# பாகிஸ்தானில் துப்பாக்கிச் சூடு நீதிபதி உட்பட 5 பேர் பலி



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் நீதிமன்றத்தில் புகுந்த, மர்ம ஆசாமிகள், கையெறி குண்டை வீசி, நீதிபதி உட்பட ஐந்து பேரை சுட்டுக் கொன்றனர்.

பாகிஸ்தான் தலைநகர், இஸ்லாமாபாத்தில் உள்ள நீதிமன்றத்தில், திடீரென புகுந்த சிலர், இரண்டு, கையெறி குண்டுகளை வீசினர்.

இதனால், அங்கு கூடியிருந்தவர்கள், சிதறி ஓடினர். இந்த சம்பவத்தைப் பயன்படுத்தி, மர்ம ஆசாமிகள் நீதிபதி உள்ளிட்ட, ஐந்து பேரை சுட்டுக்கொன்றனர்.

இந்தத் தாக்குதலில், 10 பேர் காயமடைந்துள்ளனர். தாக்குதல் நடத்தியவர்கள், அதே பகுதியில் ஒளிந்திருப்பதால், அவர்களை பொலிஸார் தேடி வருகின்றனர்.

# குற்றச்செயல்களால் வருடாந்தம் அதிக பணத்தை செலவிடும் கனடா



(ரொரன்ரோ) கனடாவில் குற்றச் செயல்களினால் வருடா வருடம் கிட்டத்தட்ட 13 மில்லியன் டொலர்கள் வரையில் செலவிடப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. இது ஒரு பாரிய செலவீனம் என கனேடிய நீதித்துறையினது புதிய அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

நீதித்துறை அமைச்சரான பீற்றர் மைக்கே வெளியிட்டுள்ள தரவுகளின் அடிப்படையில் 2006 ஆம் ஆண்டில் இருந்து பாதிக்கப்பட்டவர்கள் சார்ந்த முயற்சிகளுக்காக 120 மில்லியன் டொலர்களுக்கும் அதிகமாகச் செலவிடப்பட்டிருக்கின்றது எனத் தெரியவந்திருக்கின்றது.

5 வகையான வன்முறைக் குற்றச் செயல்களால் 2009 ஆம் ஆண்டு பொருளாதாரத்தில் பாரிய தாக்கம் ஏற்பட்டிருக்கின்றது.

குறிப்பாக மருத்துவப் பராமரிப்பு, வேலை இழபபு, சமூக நலன சம்பந்தமான செலவு போனற விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன.

பாலியல் சம்பந்தமான குற்றச் செயல்களுக்கும் கிட்டத்தட்ட கணிசமான செலவு ஏற்படுகின்றன. 90 வீதமான பாலியல் குற்றங்களினால் பெண்கள் பாதிக்கப்படுகின்றார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

குறிப்பாக 5 வகையான குற்றச் செயல்களினால் கிட்டத்தட்ட 10.6 மில்லியன் டொலர்கள் வரையில் செலவிடப்படுகின்றன எனவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

பொதுவாக குற்றச் செயல்களினால் ஏற்படுகின்ற செலவீனத்தின் தாக்கமானது சகல மக்கள் மீதும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது எனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

# சட்டவிரோத குடியேற்றம் சூட்கேசில் வந்த இளைஞர்



ஸ்பானிஷ் எல்லையில், பொலிஸார் போதைப்பொருள் தடுப்பு வேட்டையில் ஈடுபட்டு இருந்தனர்.

அப்போது வட ஆபிரிக்காவில் மெலிலாவிலிருந்து மொராக்காவைச் சேர்ந்தவர் ஒரு பெரிய சூட்கேசுடன் வந்தார்.

அந்த சூட்கேசில் போதைபொருள் இருக்கும் என சந்தேகித்த பொலிஸார் சூட்கேசை சோதனையிட திறந்தனர் அப்போது எதிர்பாராத விதமாக சூட்கேசில் இருந்து ஒரு வாலிபர் வெளியே வந்தார். சட்ட விரோத குடியேற்றத்திற்கு அந்த வாலிபரை சூட்கேசில் அடைத்து கொண்டு சென்றது தெரிய வந்தது. இதைத் தொடரந்து பொலிஸார் இரு வரையும் கைது செய்தனர்.

சூட்கேசில் அடைத்துக் கொண்டுவரப் பட்ட வாலிபருக்கு 19 வயது இருக்கும். ஸ்பெயின் நாட்டில் சட்டவிரோதமாக குடியேறுபவர்களை தடுக்க பொலிஸார் கடும் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

மகிழ்ச்சியான ஒரு முடிவை எழுதுவதற்கு இலங்கையர்கள் விரும்பினால் அதற்கு காலம் மிகவும் அவசியமானது. கண்டித் தலைவர்கள், யாழ்ப்பாண புத்திமான்கள், தென் இலங்கை பழமைவாதிகள் மற்றும் பாரிசில் அல்லது லண்டனில் ஈழக் கோரிக்கையை மீள வலியுறுத்துபவர்கள் எனப் பாகுபாடுகள் பார்க்காது அனைவரும் தேசிய இயக்கமாக ஒன்று சேரும் போது இலங்கை ஒரு சிறந்த தேசமாக உருவாகும். இதனை இளைஞர்கள் இணைந்து செயற்படுத்த வேண்டும். ராஜபக்சாக்கள் மற்றும் விக்கிரசிங்காக்களை எதிர்காலத்தில் இடம்மாற்றி இலங்கையின் சோகக் கதையை மகிழ்ச்சியான முடிவாக மாற்றக் கூடிய இலங்கை இளைஞர்கள் முன்வந்து செயற்படுவதற்கான காலம் இதுவாகும்.

## கடுமையான கோபமா? மாரடைப்பு ஏற்படும்

பொதுவாக சிகரெட் பிடிப்பவர்கள், அதிகளவில் மது குடிப்பவர்களுக்கு இருதய நோய்கள் உருவாகி அதன் மூலம் மாரடைப்பு ஏற்படுகிறது. ஆனால் கடுமையான கோபம் அடைபவர்களும் மாரடைப்பு நோய்கு ஆளாவது புதிய ஆய்வில் தெரியவந் துள்ளது. அமெரிக்காவின் ஹார்வார்டு பள்ளியின் பொது சுகாதார நிபுணர்கள் சமீ பத்தில் இதுகுறித்து ஆய்வு மேற்கொண்டனர். சுமார் 10 ஆயிரம் பேரிடம் இது நடத்தப்பட்டது. அவர்களில் மாதத்தில் ஒருமுறை கடுமையாக கோபம் அடைபவர்களுக்கு சிறியளவில் மாரடைப்பு ஏற்படும் அபாயம் இருப்பது தெரிய வந்தது. அதே நேரத்தில மாதத்துக்கு 4 தடவைக்கு மேல் கோபப் படுபவர்களுக்கு கடுமையான மாரடைப்பு ஏற்படும் என கண்டறியப்பட்டது.

கோபப்படும் 2 மணி நேரத்தில் மாரடைப்பு உருவாகுவதற்கான சூழ்நிலை உருவாகும். அதன் மூலம் இருதயத்தில் 5 தடவை சுருக்கம் ஏற்படும் வலிப்பு போன்ற பாதிப்பு உண்டாகும்.

# எவரெஸ்ட் மலையை சுத்தமாக்க நேபாள அரசின் புதிய திட்டம்



இம்முறை வசந்த காலத்தில் எவரெஸ்ட் மலைச் சிகரத்துக்கு செல்லும் மலையேறிகளும் அவர்களின் ஆதரவு அணியினரும் திரும்பிவரும் போது, ஒவ்வொருவரும் மலையில் குவிந்துள்ள குப்பைகளை கீழே கொண்டுவர வேண்டும் என நேபாள அரசாங்கம் கூறியுள்ளது. மலையிலிருந்து கீழே வரும் ஒவ்வொருவரும் தலா எட்டு கிலோகிராம் எடையுள்ள குப்பைகளை கொண்டு வரவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

"mount everest base camp' என்ற 5,300 மீற்றர்கள் உயரத்தில் அமைந்துள்ள தளத்துக்கு மேல் செல்லும் எல்லோருக்கும் இந்தப் புதிய சட்டவிதி பொருந்தும் என நேபாள அரசாங்கம் தெரிவித்துள்ளது.

உலகின் உயரமான மலைச்சிகரமான எவரெஸ்டின் மீதும் அதனைச் சூழவும் கழிவுப் பொருட்கள் குவிந்து வருகின்றமை தொடர்பான கவலைகளை அடுத்தே அரசு இந்தப் புதிய விதிமுறைகளை அறிவித்துள்ளதாக அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதிகளவான வெளிநாட்டு மலையேறிகளை ஈர்ப்பதற்காக எவரெஸ்ட் மற்றும் ஏனைய இமயமலைச் சிகரங்களுக்குச் செல்லும் தனிப்பட்ட மலையேறிகளுக்கான கட்டணத்தை கடந்த மாதம் நேபாளம் இரத்துச் செய்தது.

இதனால், மலையேறிகளின் எண்ணிக்கை அதிகரித்தாலும் மலைகளில் குப்பைகள் குவிந்துவிடும் என்ற கவலைகளும் அதிகரித்தன.

மலையுச்சிகளில் குவிந்துள்ள கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள் அவசியம் என்று சுற்றுச்சூழல் ஆர்வலர்களும் மலையேறிகளின் குழுக்களும் நீண்டகாலமாக வலியுறுத்திவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சுழிபுரத்தில் இந்திய வீட்டுத்திட்டம்; குறை நிரப்பு பணிகளை பூர்த்தி செய்ய முடிவு

## பிரதேச எதிர்க்கட்சித்தலைவர் ஏற்பாடு



வலி.மேற்கு சுழிபுரத்தில் உள்ள காட்டுப்புலம் மீள்குடியேற்றக்கிராமத்தில் இந்திய வீட்டுத்திட்டத்தில் முழுமைபெறாதுள்ள வீடுகள் விரைவில் முழுமையாக மீள அமைத்து வழங்கப்படவிருக்கிறது.

இதற்கான துரித ஏற்பாடுகள் விரைவில் செய்து தரப்படும் என வலி. மேற்கு பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவரும், வலிகாமம் மக்கள் ஜனநாயகக் கட்சியின் இணைப்பாளருமான சிவகுரு பாலகிருஸ்ணன் நேற்று முன்தினம் உறுதியளித்துள்ளார்.

மேற்படி விடயம்தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

காட்டுப்புலம் கிராமத்தில் இந்திய வீட்டுத்திட்டத்தில் முழுமை பெறாத 15குடும்பங்களின் கோரிக்கையை தொடர்ந்து சி. பாலகிருஸ்ணன் மக்களுடன் சந்திப்பை ஏற்படுத்திக் கொண்டார்.

இதனையடுத்து15குடும்பங்களின் இந்திய வீட்டுத்திட்டத்தை மழுமைபெறச் செய்வதற்கான நடவடிக்கையை எடுத்ததுடன் வலி. மேற்கு பிரதேச செயலக பிரதேச செயலர், உதவித்திட்டமிடல பணிப்பாளர் ஆகியோருடன் தொடர்பு கொண்டு மேற்படி காட்டுப்புல (ஜே.174) மக்களின் மீள் குடியேற்ற கிராம மக்களின் வீட்டுத்திட்டத்திற்கான வேலைகளை முழுமைபெறச்செய்து நிதி 'விடுவிப்பு செய்வதற்கும் சிவகுரு பாலகிருஸ்ணன் (ஜீவன்) நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ஆங்கிலம் பேசும் பாடசாலை; புதிய திட்டம் அறிமுகம்

ஆங்கிலம் பேசும் பாடசாலை என்னும் நிகழ்ச்சித் திட்டத்திற்கூடாக மாணவர்களுக்கு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் உதவியுடன் ஆங்கிலம் கற்பிக்கும் முறை முதன்முறையாக நேற்று முன்தினம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

இதற்கான உத்தியோகபூர்வ நிகழ்வு கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தலைமையில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

வாழ்க்கைத்திறனாக ஆங்கிலம் என்னும் செயற்றிட்டத்தின் புதியதொரு அம்சமாகவே ஆங்கிலம் பேசும் பாடசாலை நிகழ்ச்சித் திட்டம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

# கும்பாபிஷேகம் பிற்போடப்பட்டுள்ளது

(யாழ். நிருபர்)

காரைநகர் மடத்துக்கரை ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலய கும்பாபிஷேகப்பெருவிழா பிற்போடப்பட்டுள்ளது.

திருப்பணிவேலைகள் பூரணமாகாதபடியால் கும்பாபிஷேகம் பிற்போடப்பட்டிருப்பதாக ஆலயத்தின் நிர்வாகத் தாரும் பிரதம சிவாச்சாரியாரு மான தி. சரவணபவானந்தசர்மா தெரிவித்தார். (10)

### வீதி விபத்தில்...

இரவு 7.55 மணியளவில் உயிரிழந்துள்ளார். முருங்கன், மன்னாரைச் சேர்ந்த 45 வயதான பிரான்சிஸ் ராஜன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இவரது சடலம் மன்னார் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ள அதேவேளை சடலம் மீதான பிரேத பரிசோதனை நேற்று இடம்பெற்றது.

### பனையால்...

குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இவரது சடலம் நேற்று மாலை யாழ். போதனாவைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தது.

(பா,இ)

### உக்ரைனில்...

அழைத்துவர அவசியமில்லை. அதேவேளை, பல இந்திய மாணவர்கள் அதே பல்கலைக்கழகத்தில் ப்டிப்பதாகவும் அவர்கள் வெளியேறவில்லை எனவும் வெளிவிவகார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

### உள்ளக விசாரணை...

னர் என அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கையின் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா கடந்த மாதம் ஆபிரிக்காவிற்கு விஜயம் செய்து, அந்நாட்டு அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தியிருந்ததுடன், தென் ஆப்பிரிக்காவின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவுடனும் கலந்துரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### அநாமதேய...

சங்களில் காணப்படும் இவ்வாறான பொருட்களை தொடக்கூடாது என அவர் குறிப்பிட்டுள்ளார். நேற்று முன்தினம் கிளிநொச்சியில் இவ்வாறான மர்மப் பொருள் ஒன்றை எடுத்த போது நடைபெற்ற வெடிப்புச் சம்பவத்தில் ஐந்து பேர் காயமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இதனையடுத்தே இராணுவப்பேச்சாளர் மேற்படி அறிவுறுத்தலை விடுத்துள்ளார்.

### இந்திய உதவி...

தாகத் தெரிவித்துள்ளார். தமிழ் மக்களின் நலன்புரிக்காக இந்தியா அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

13ஆம் திருத்தச் சட்டத்தையும், உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை பரிந்துரைகளையும் அமுல்படுத்த வேண்டுமென இந்தியா கோரி வருவதாகத் தெரிவித்துள்ளார். தமிழ் மக்களின் நலன்களை உறுதிப்படுத்தும் நோக்கிலேயே இந்திய பிரதமர் மன்மோகன் சிங், இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியதாக குறிப்பிட்டுள்ளார்.

### நேற்று முதல்...

இந்த சொகுசு புகையிரத சேவையானது தினமும் கொழும்பிலிருந்து பளை வரை தனது சேவையினை மேற்கொள்ளவுள்ளது.

இதேவேளை யாழ்.தேவி புகையிரதம் எதிர்வரும் யூன் மாதமே யாழ்ப்பாணத்திற்கு செல்லும் எனவும் அதன் பின்னர் செப்ரெம்பர் 14 திகதிக்கு முன்னர் காங்கேசன்துறைவரை செல்லும் என போக்குவரத்து துறை அமைச்சர் குமார வெல்கம அவர்கள் தெரிவித்துள்ளார்

இதேவேளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் ஆகியோரது வேண்டுகோளுக்கமைவாக புகையிரதப் பாதைகளை குறுக்கறுத்துச் செல்லும் பாதைகளுக்கு பாதுகாப்பு கடவை அல்லது பணியாளர்களை நியமித்து பொதுமக்களுக்கு பாதுகாப்பை வழங்குவதற்கு உடனடியாகவே நடவடிக்கை எடுக்குமாறு புகையிரத திணைக்கள பொது முகாமையாளருக்கு போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம பணிப்புரை வழங்கியுள்ளார்.

இந்த புகையிரத சேவையானது கோட்டையிலிருந்து தினமும் பிற்பகல் 2.25 மணிக்கு புறப்பட்டு இரவு 8.28 மணிக்கு பளை சென்றடையும்,மறுநாள் காலை பளையிலிருந்து புறப்படும் புகையிரதம் மதியம் கோட்டையை அடையும் எனவும் புகையிரத திணைக்களத்தினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.இதில் ஈ.பி.டி.பியின் வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன், மற்றும் பிரதேச செயலாளர்கள் அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

### உள்ளக...

ணக்கம் ஏற்படுத்தல் ஆகிய விடயங்களில் இலங்கை அரசாங்கம் காத்திரமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல் தொடர்பில் முன்வைக்கப்படும் பரிந்துரைகளை ஏற்றுக்கொள்ளவோ அவற்றை தமது பொறிமுறைகளில் உள்வாங்கவோ இலங்கை நாட்டம் காட்டமை வருத்தமளிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

உள்ளகப் பொறிமுறைமைகளில் வெளிப்படைத் தன்மை கிடையாது எனவும், சரியான முறையில் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.மனித உரிமை மீறல்களானது சட்டம் ஒழுங்கு நிலைமைகளை மட்டுமன்றி, பொருளாதார அபிவிருத்தியையும் பாதிக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

### மன்மோகனுடன்...

வான பேச்சுக்களில் ஈடுபடவில்லை எனத் தெரிய வருகின்றது.

இந்தச் சந்திப்பின் போது மேற்படி பிரேரணை தொடர்பில் இந்தியாவின் தெளிவான நிலைப்பாடு என்னவென்பதை இலங்கை ஜனாதிபதி வெளிப்படையாகக் கேட்டுத் தெரிந்து கொள்வார் என எதிர்பார்க்கப்படுவதாக முன்னர் செய்திகள் வெளியாகி இருந்தன.

ஆனால் அத்தகைய தெளிவான முடிவு எதனையும் இந்தச் சந்திப்பின்போது இந்தியப் பிரதமரிடம் இருந்து இலங்கை ஜனாதிபதியால் பெற்றுக் கொள்ள முடியவில்லை என்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

"பிரேரணை நகல் குறித்தும் விரிவான பேச்சு நடந்ததாகவும் தெரிகிறது. இவ் விடயம் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் முக்கியமானது என்பதால் இது சம்பந்தமாக இரு தரப்புக்களும் தொடர்ந்தும் தொடர்புகளைப் பேணுவது என உணர்ந்துள்ளோம்." - இவ்வாறு மேற்படி இரு தலைவர்களினதும் சந்திப்புக்குப் பின்னர் கருத்து வெளியிட்ட இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார்.

### சர்வதேச...

அதனை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மதிப்பீடு செய்து 2014 செப்ரெம்பரில் நடைபெறும் 27 ஆவது கூட்டத்தொடரில் வாய் மூலமும், 2015 மார்ச்சில் நடைபெறும் 28. ஆவது கூட்டத்தொடரில் விரிவாக எழுத்து மூலமும் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று தற்போதைய பிரேரணை வடிவம் சிபாரிசு செய்கிறது.

இந்தப் பிரேரணை வடிவம் யுத்தம் முடிந்தும் ஐந்து ஆண்டுகள் பூர்த்தியாகும் நிலையில் மேலும் ஒருவருட காலத்தை இலங்கை அரசுத் தரப்புக்கு இழுத்தடிப்பதற்கு வழங்கப்போகின்றது.

ஜெனீவாவில் மனித உரிமைகள் கவுன்ஸிலின் 25 ஆவது கூட்டத்தொடர் நேற்று ஆரம்பமான சூழலில் இலங்கை தொடர்பான தமது பிரேரணையின் நகல் வடிவத்தை அமெரிக்கா, பிரிட்டன், மொண்டாரிகோ, மெஸிடோனியா, மொறீஸியஸ் ஆகிய நாடுகள் ஒன்று சேர்ந்து பல தரப்பினரதும் பார்வைக்காகச் சுற்றுக்கு விட்டன.

உள்கட்டுமானங்களை மீளக் கட்டியெழுப்புதல், கண்ணிவெடியகற்றுதல், உள்நாட்டில் இடம் பெயர்ந்தோரை மீளக்குடியமர்த்தல் போன்றவற்றில் இலங்கை அரசின் செயற்பாட்டை வரவேற்றுள்ள இந்த வரைவு, நீதி நிலைநாட்டப்படல், நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல், இராணுவ மயப்படுத்தலை நீக்குதல், வாழ்வாதாரங்களை மீள உருவாக்குதல், இந்த விடயங்களில் சிவில் சமூகம் மற்றும் சிறுபான்மையினரை முழுப் பங்காளர்களாக்குதல் போன்ற அம்சங்களில் இன்னும் பெருமளவு வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருக்கின்றது எனச் சுட்டிக்காட்டுகின்றது.

நடந்து முடிந்த மாகாண சபைத் தேர்தலையும் அதில் வாக்காளர்கள் அதிகளவில் பங்குபற்றியமையும் வரவேற்றுள்ள இந்தப் பிரேரணை, அதேசமயம் தேர்தல் வன்முறைகள், வாக்காளர்கள் மற்றும் வேட்பாளர்கள் அச்சுறுத்தப்பட்டமையையும் சுட்டிக்காட்டுகின்றது.

ஆணையாளரின் இலங்கை விஜயத்தின் போது அவரைச் சந்தித்தோர் உட்பட சிவில் சமூக உறுப்பினர்களுக்கு எதிராக அச்சுறுத்தல் மற்றும் பதிலடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டமை குறித்து முன்மொழிவில் ஆழ்ந்த கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாலியல் அல்லது பால் இனத்துவ வன்முறைகள், பலவந்தமாகக் கடத்தப்பட்டு காணாமற்போகச் செய்தல், சட்டவிரோதப் படுகொலைகள், சித்திரவதை, கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்துக்கும் கூட்டுச் சேருதல் மற்றும் அமைதியாக ஒன்றுகூடுதல் போன்றவற்றுக்கும் எதிரான மீறல்கள், மனித உரிமைகளை பாதுகாப்போர், சிவில் சமூக உறுப்பினர்கள் மற்றும் ஊடகவிலாளர்களுக்கு எதிரான அச்சுறுத்தல் அல்லது பதிலடி நடவடிக்கைகள், நீதிச் சுதந்திரம் மற்றும் சட்டத்தின் ஆட்சிக்கு எதிரான மிரட்டல்கள் என்பன மோசமான விதத்தில் அதிகரித்து வருகின்றமை குறித்து இந்த வரைவில் ஆழ்ந்த கவலை தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

சமய நம்பிக்கைகளுக்கு எதிராக - குறிப்பாக இலங்கையில் சிறுபான்மையின மதப்பிரிவினரான இந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் போன்றோருக்கு எதிராக திடீரென மோசமாக அதிகரித்து வரும் வன்முறைகள் அபாய எச்சரிக்கையை எழுப்புவதாக பிரேரணை வெளிப்படுத்துகிறது.

நல்லிணக்கத்துக்கு மிக அடிப்படையான அரசியல் அதிகாரத்தை பரவலாக்குவது, நாட்டின் மக்கள் அனைவரும் மனித உரிமைகளை அனுபவிப்பது ஆகியவை உட்பட தான் பகிரங்கமாக ஒப்புக் கொண்ட அனைத்து உறுதிமொழிகளையும் நிறைவேற்றுமாறு இலங்கை அரசை மேற்படி பிரேரணை முன்மொழிவு வேண்டியுள்ளது.

பரவலாக இடம்பெற்ற சட்டவிரோதக் கொலைகள், பலவந்தமாக ஆட்களைக் கடத்திக் காணாமற் போகச் செய்தல் ஆகியன தொடர்பில் நம்பகமான விசாரணை செய்தல் -

வடக்கு இலங்கையை இராணுவ மயத்திலிருந்து விடுவித்தல் -

காணிப் பிணக்கு விடயங்களில் பக்கச்சார்பற்ற தீர்வுக்கான பொறிமுறையை நடைமுறைப்படுத்தல் -தடுப்புக் காவல் நடவடிக்கைகள் தொடர்பான கொள்கைகளை மீள் மதிப்பீடு செய்தல் -

முன்னர் செயற்பட்ட சுயாதீன சிவில் நிறுவனங்களை மீளவும் வலிமைப்படுத்துதல் -

மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்வதன் மூலம் அரசியல் தீர்வை எட்டுதல்-

இப்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரைவின் வடிவத்திலேயே இந்தப் பிரேரணை தீர்மானமாக நிறைவேற்றப்படுமானால் அது இரண்டு விடயங்களை வெளிப்படுத்தி நிற்கும்.

1. இலங்கையில் யுத்த காலத்தில் இழைக்கப்பட்ட கொரடூரங்களுக்கு சர்வதேச ரீதியிலான சுயாதீன விசாரணைப் பொறிமுறை இப்போதைக்கு இல்லை. தற்போதைக்கு நாட்டுக்குள் இலங்கை அரசினால் முன்னெடுக்கப்படக்கூடிய விசாரணைப் பொறிமுறையே தொடர்ந்து வலியுறுத்தப்படும்.

2. இவ்விடயத்தில் இலங்கை அரசு தொடர்ந்தும் முரண்டு பிடித்தால் கூட அடுத்த ஆண்டு செப்டெம்பர் வரை - அதாவது அடுத்த ஒன்றரை ஆண்டுகளுக்கு - இலங்கை எதிரான அழுத்தமான நடவடிககைகள் ஏதும் இல்லை என்பது இப்போதே தெளிவாகியுள்ளது.

[stamp, illegible] யாழ்ப்பாணம்,



# கால்நடை உற்பத்திகளுக்கு இப்போது அதிக சந்தைவாய்ப்பு



(பச்சிலைப்பள்ளி)

கால்நடை உற்பத்திகளுக்கு எதிர்காலத்தில் அதிகமான சந்தை வாய்ப்பை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். ஏனெனில் உள்ளூரிலும் அதிக சந்தை வாய்ப்பை வழங்கக்கூடிய சூழல் உருவாக்கப்பட்டிருப்பதோடு தென்பகுதிக்கு ஏற்றுமதிசெய்வதற்கான வாய்ப்பும் கிட்டியுள்ளது என ஈ.பி.டி.பி.யின் வடக்கு மாகாண. சபை உறுப்பினர் வை.தவநாதன் தெரிவித்துள்ளார்.

நேறறு கரந்தாய் சோரன்பற்று கிராமத்தில் கால்நடை வளர்ப்போர் சங்கத்திற்கான கட்டடத்தினை திறந்துவைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில், எமது மக்கள் இன்று பாரம்பரிய வாழ்வாதார முறைகளை கைவிட்டு அதிலிருந்து விலகிச் செல்ல முற்படுகின்றார்கள். அதன் காரணமாகவே மீள்குடியேற்றத்திற்குப் பின்னர் மாறுபட்ட வாழ்வாதார உதவிகளை வழங்கவேண்டி ஏற்பட்டது.

ஆனால், அத்திட்டங்கள் அனைத்தும் மக்களுக்கு பயனற்றுப் போயிருந்தன எனக் குறிப்பிட்ட வை.தவநாதன், ஆயினும் அன்று சிறிய அளவிலேயே விவசாயச் செய்கையாளர்களும் கால்நடைப் பண்ணையாளர்களும் இருந்தார்கள். ஆனால் பிற்காலத்தில் அந்த செயற்பாடுகளும் மாற்றம் பெற்று வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், விற்பனை நிலையங்களை அமைத்தல் என்ற வகையில் தமது வாழ்வாதாரத்தை முன்னெடுக்க ஆரம்பித்தார்கள்.

இந்நிலையில் அம் முயற்சிகள் அனைத்தும் தோல்வியிலேயே அமைந்துள்ளன. இதனால் பலர் முயற்சிகளை கைவிட்டுள்ளார்கள். சிலர் உயிர்களைக்கூட மாய்த்துள்ளார்கள் எனவும் குறிப்பிட்டதோடு,

இந்நிலையில்தான் தற்போது கால்நடைகளை வளர்த்தல், அதன் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக கால்நடை உற்பத்திகளுக்கு எதிர்காலத்தில் அதிகமான சந்தை வாய்ப்பை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

ஏனெனில் உள்ளூரிலும் அதிக சந்தை வாய்ப்பை வழங்கக் கூடிய சூழல் உருவாக்கப்பட்டிருக்கின்றது. அதாவது பல முன்பள்ளிகள் இயங்கிவருகின்றன, அத்தோடு தென்பகுதியிலிருந்தும் பால் கொள்வனவாளர்கள் கொள்வனவிற்காக வருகை தருகின்றார்கள். இவை அனைத்திற்கும் மேலாக நாளுக்குநாள் விலையேற்றம் கண்டுவரும் பால்மாக்களின் விலையேற்றமும் உள்ளூரில் பால் விற்பனைக்கு சாதகமான சூழலை உருவாக்கியிருக்கின்றது எனவும் தெரிவித்தார்.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவின் கரந்தாய் சோரன் பற்று கிராமத்தில் போறூட் நிறுவனத்தின் நிதியுதவியுடன் ரகமா நிறுவனத்தினால் சுமார் 20 இலட்சம் ரூபா பெறுமதியில் கால்நடைவளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்திற்காக அமைக்கப்பட்ட கட்டடம் மற்றும் பளை நகர்ப்பகுதியில் சுமார் எட்டு இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட பால் விற்பனை நிலையம் என்பனவும் திறந்து வைக்கப்பட்டன.

இதில் சங்கத்திற்கான கட்டடத்தினை வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் வை.தவநாதன் நேற்று திறந்து வைத்தரர்.

இந்நிகழ்வில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை உறுப்பினர்களான இராசதுரை மற்றும் அன்ரன் அன்பழகன், ஆகியோரும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் திருமதி ஜெயராணி, பூநகரி பிரதேச செயலர் சத்திய சீலன் மற்றும் கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் தவராசா ஆகியோரும் போறூட் நிறுவனத்தின் செயலாளர் நாயகம் மற்றும் ரகமா நிறுவனத்தின் அதிகாரிகள், பச்சிலைப்பள்ளி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தினர் உறுப்பினர்கள், பயனாளிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# ஏ.ரி.எம். பணமோசடி; சந்தேகநபர் கைது

(மன்னார்)

மன்னாரில் ஏ.ரி.எம். பணப் பரிமாற்று அட்டையை திருடி 35 ஆயிரம் ரூபா பணமோசடியில் ஈடுபட்ட நபர் ஒருவர் விடத்தல் தீவு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

அடம்பன் நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பணியாற்றும் இயந்திர திருத்துநரின் இலங்கை வங்கி ஏ.ரி.எம். பணப்பரிமாற்று அட்டை திருட்டுப் போயுள்ளதாக நேற்று விடத்தல்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து நீதிமன்றத்தின் விசேட அனுமதியுடன் முருங்கன் இலங்கை வங்கி ஊடாக கொழும்பு இலங்கை வங்கி தலைமையகம் மூலம் திரட்டப்பட்ட தகவல்களின்படி கடந்த முதலாம் திகதி இரு தடவைகள் இந்த அட்டை பயன்படுத்தப்பட்டு 20 ஆயிரம் ரூபா மற்றும் 15 ஆயிரம் ரூபா பெறப்பட்டதுடன், சந்தேகநபரும் அடையாளம் காணப்பட்டார்.

இதன்படி அடம்பன் நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பணியாற்றும் காவலாளி கைதுசெய்யப்பட்டுள்ளார். விடத்தல்தீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜே. குணதிலக மற்றும் பொலிஸ் சார்ஜன்ட் விஜயரட்ன மற்றும் பொலிஸ் சார்ஜன்ட் அமல் உள்ளடங்கிய குழுவினரே இது தொடர்பான முறைப்பாடு கிடைக்கப்பெற்று தீவிர நடவடிக்கையில் ஈடுபட்டு 24 மணிநேரத்திற்குள் சந்தேகநபரை கைதுசெய்துள்ளனர். (113)

# காயமடைந்தவர்களுக்கு மேலதிக சிகிச்சை

முறிகண்டிப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் படுகாயங்களுக்கு இலக்காகியவர்களில் கணவனும் மனைவியும் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அதே இடத்தைச் சேர்ந்த அழகர் இராமநாதன் (வயது - 52), இராமநாதன் அல்லிநாயகி (வயது - 44) ஆகிய இருவருமே இவ்வாறு சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்தவர்களில் ஒருவர் வீட்டின் முன்பகுதியில் காணப்பட்ட பைப் போன்ற நீளமான ஒரு பொருளை கையில் எடுத்து அங்கிருந்தவர்களுக்கு காட்டிவிட்டு தூக்கி எறிந்த போது அது நிலத்தில் வீழ்ந்து வெடித்ததினாலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா,இ)

# மீள்குடியேற்ற பிரச்சினைகளுக்கு இரு வாரங்களில் தீர்வு கிட்டும்

## மீள்குடியேற்ற அமைச்சின் மேலதிக செயலாளர் தகவல்

மீள்குடியேற்ற பிரச்சினைக்கான தீர்வினை இரு வாரங்களில் பெற்றுக் கொள்ள முடியும் என மீள்குடியேற்ற அமைச்சின் மேலதிக செயலாளர் முகைஸ் நேற்று தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்ற மீள்குடியேற்ற விபரம் திரட்டுவதற்கான கலந்துரையாடல் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடல் குறித்து ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்டத்தில் மீள்குடியமர்ந்த மற்றும் மீள்குடியமர்த்தப்பட வேண்டிய மக்களின் விபரங்களை தற்போது திரட்டி வருகின்றோம்.

மீள்குடியேற்றம் தொடர்பான விடுபட்டுள்ள விடயங்களை இணைத்துக் கொள்வது குறித்து ஆராயப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலகங்கள் பிரிவிலும் உள்ள விபரங்கள் திரட்டப்பட்டு, அங்குள்ள பிரச்சினைகள் குறித்து யூ.என்.எச்.ஆர் [illegible]வன பிரதிநிதிகளுடனும் ஆராயப்பட்டது.

இன்னும் இரண்டு வாரங்களில் திரட்டப்பட்ட தகவல்கள் மீளாய்வு செய்யப்பட்டு, அதிகார பூர்வமாக நடவடிக்கைகளை மேற்கொள்ளவதற்கான முடிவுகள் எடுப்பதற்கான தளமாக இன்றைய கலந்துரையாடல் அமைந்துள்ளது.

அங்கு தொடர்சசியாக மீள்குடியேற்றம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. இன்னும் அதிகமாக இடங்கள் விடுவிக்கப்படலாம் என்றார். (இ,25)

# ராஜீவ் கொலை வழக்கில் ஏழு பேரையும் விடுவிக்க முடியும்

## தமிழக அரசு சார்பில் விவாதம்

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்ற 7 பேரை விடுதலை செய்ய மாநில அரசுக்கு அதிகாரம் உள்ளதாக உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு தெரிவித்துள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோரின் தூக்குத்தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைத்து கடந்த மாதம் 18 ஆம் தேதி உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. மேலும், அவர்களை விடுதலை செய்வது குறித்து மாநில அரசு முடிவு எடுக்கலாம் என்றும் கூறியது.

இதனையடுத்து, முருகன், சாந்தன், பேரறிவாளன் உட்பட 7 குற்றவாளிகளை விடுதலை செய்வதாக தமிழக அரசு அறிவித்தது. இது குறித்து 3 நாட்களுக்குள் பதிலளிக்குமாறு மத்திய அரசுக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

இதைத் தொடர்ந்து தமிழக அரசின் முடிவை எதிர்த்து மத்திய அரசு சார்பில் உச்சநீதி மன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனுவை விசாரித்த நீதிபதிகள், முருகன், சாந்தன், பேரறிவாளன், நளினி உட்பட 7 பேரை விடுதலை செய்ய இடைக்காலத் தடை விதித்தார். மேலும், இது தொடர்பாக பதில் அளிக்கக் கோரி தமிழக அரசுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டது.

இந்நிலையில், தமிழக அரசு தரப்பில் பதில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த மனுவில், ஆயுள் தண்டனை கைதிகளை விடுதலை செய்ய மாநில அரசுகளுக்கு அதிகாரம் உள்ளது. அவர்களை விடுதலை செய்வது குறித்து மத்திய அரசுக்கு, மாநில அரசு தகவல் தெரிவித்தது. மேலும் பதில் அளிக்க மத்திய அரசுக்கு கால அவகாசமும் வழங்கப்பட்டது என்றும் தமிழக அரசு தெரிவித்துள்ளது.

மேலும், மத்திய அரசு, முடிவு எடுக்காமல் உச்ச நீதிமன்றத்தை அணுகியுள்ளது. எனவே மத்திய அரசின் மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் தமிழக அரசு சார்பில் கேட்டுக் கொள்ளப்பட்டது.

தமிழக அரசின் மனு மீதான விசாரணை 6 ஆம் திகதி வியாழக்கிழமை மீண்டும் நடக்கவுள்ளது.

# நேர்முகப் பரீட்சை நாளை

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சமுர்த்தி முத்திரைப் பயனாளிகளின் பிள்ளைகளின் சிப்தொறா நேர்முகப் பரீட்சை நாளை மு.ப. 11.00 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கொடிகாமம், வரணி சமுர்த்திப் பயனாளிகளின் பிள்ளைகளுக்கான நேர்முகப் பரீட்சை நடைபெறவுள்ளது.




இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 மார்ச் 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.